
# தமிழரசு

செப்டம்பர் 1-30, 2000 ரூ.10







# கலைஞர் அரசில்



## முதுமைக்கு மரியாதை செய்ய

### மாத ஓய்வூதியம் ரூ.200 ஆக உயர்வு





**விழாமல் மரத்தைத் தாங்கும் விழுதுபோல்**
**ஆதரவற்றவர்க்கு அரசே ஊன்றுகோல்**

பலன்பெறுபவர்கள் எண்ணிக்கை

| | |
|---|---|
| முதியோர் உதவித் தொகை | 4,15,399 |
| விதவை உதவித் தொகை | 3,97,850 |
| உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை | 39,847 |
| நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள் | 78,572 |
| கணவனால் கைவிடப்பட்ட மகளிர் | 70,489 |
| நெசவாளர்களுக்கு உதவித் தொகை | 5,680 |

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2031
ஆவணி – புரட்டாசி
செப்டம்பர் 1–30, 2000
மலர் : 32 இதழ் : 5 & 6
விலை ரூ.10

*முதல் பக்க அட்டையில்*

உயிரியல் தொழில்நுட்ப மாநாடு

*கடைசிப் பக்க அட்டையில்*

தந்தை பெரியார்–பேரறிஞர் அண்ணா
வண்ண ஓவியம்

## இந்த இதழில்...


- வளர்ச்சிப் பாதையில் உயிரியல் தொழில்நுட்பம் ---------- 2
- அடுத்த 10 ஆண்டுகளில் உணவு உற்பத்தியை இருமடங்காக்க முயற்சி ---------- 4
- எங்கள் ஊர் பிரச்சினை ---------- 7
- உயிர்த் தொழில்நுட்பக் கொள்கை ---------- 9
- மருதாயிக் கிழவியின் காகிதப்பைகள் ---------- 16
- தொலை மருத்துவ மையம் ---------- 21
- மோர்தானா அணை ---------- 25
- செய்திச்சரம் ---------- 30
- மீனின் விழிகளிலும் கண்ணீர் ---------- 33
- நூற்றாண்டுக்கு ஒருவர் தந்தை பெரியார் ---------- 34
- எருதுகட்டு ---------- 40
- அண்ணா ஒரு காவியம் ---------- 46
- தொல்லியலும் சங்க இலக்கியமும் ---------- 57
- சோத்துப்பாறை அணை ---------- 68
- அறநிலையத்துறையின் அரும் பணிகள் ---------- 73


### திருக்குறள்


*ஞாலங் கருதினுங் கைகூடுங் காலம்*
*கருதி இடத்தாற் செயின்.*

உரிய காலத்தையும் இடத்தையும் ஆய்ந்தறிந்து செயல்பட்டால் உலகமேகூடக் கைக்குள் வந்துவிடும்.

*– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...*

# வளர்ச்சிப் பாதையில் உயிரியல் தொழில்நுட்பம்

"வளர்ச்சிப் பாதையில் உயிரியல் தொழில்நுட்பம்" (Bio-technology for Development) என்னும் இம்மாநாட்டில் பங்குபெறும் வாய்ப்பினை எண்ணி நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இம்மாநாடு அமெரிக்க நாட்டு கார்னல் பல்கலைக்கழகம் மற்றும் இந்தியாவிலுள்ள சத்குரு மேலாண்மை நிறுவன ஆலோசகர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடனும், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி



நிறுவனம் மற்றும் பல்வேறு தொழில் நிறுவனங்கள், அமைப்புகள் ஆகியவற்றின் ஆதரவுடனும் நடைபெறுகிறது.

உயிரியல் தொழில்நுட்பத் துறையில் கடந்த நூற்றாண்டில் சிறப்பு வாய்ந்த பல முன்னேற்றங்கள் நிகழ்ந்துள்ளன. குறிப்பாக, வேளாண்மை, சுகாதாரம் மற்றும் மருந்தாக்கத் தொழில்கள் போன்றவைகளில் வியக்கத்தக்க வகையில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. கடந்த இருபது ஆண்டுகளில் மானுட மரபணு தொடர் வரிசை முறை அறிவிக்கப்பட்டுள்ளதுடன், மரபியல் இயக்கத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களும் நிகழ்ந்துள்ளன. இத்தகைய பின்னணியில் உயிரியல் தொழில்நுட்பம், வருங்காலத்தில் தொழில் துறையில் விரைவான முறையில் வளர்ச்சி பெறுவதற்குரிய வாய்ப்புகளைப் பெற்றுள்ளன.

கோடிக்கணக்கான மக்களுக்குத் தேவைப்படக் கூடிய உணவுப் பாதுகாப்பு, சத்துணவு, சுகாதாரம், சுற்றுச்சூழல்கள் போன்றவைகளில் உயிரியல் தொழில்நுட்பத்தின் ஆற்றல் பொதிந்து கிடக்கிறது என்பதால் அது முழுமையாக பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். வளரும் நாடுகளில் இந்த முயற்சி மிகவும் முக்கியமானது. மக்கள் தொகைப் பெருக்கம், வரம்பிற்குட்பட்ட விளைநிலங்கள், அதிக அளவில் பரவும் தொற்று நோய்கள் ஆகியவை தொடர்பான இன்றைய சவால்களைச் சந்தித்துத் தீர்வு காண்பதற்கு இது நமக்கு பெரிதும் உதவும்.

### உயிரியல் தொழில்நுட்பத்தில் புதிய முதலீட்டிற்கு சிறந்த வாய்ப்பு

உயிரியல் தொழில்நுட்பம் பெரிய அளவில் வேலை வாய்ப்புகளையும் உருவாக்கக் கூடியது. இவ்வாறு உயிரியல் தொழில்நுட்பம், புத்தாயிரம் ஆண்டில் தகவல் தொழில்நுட்பத்துடன் இணைந்து மிகப்பெரிய அளவில் செழித்து வளரும் அருமையான வாய்ப்பினைப் பெற்றுள்ளது.

உயிரியல் தொழில்நுட்பத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருள்களில், இந்தியாவில் நுகர்வதற்குப் பயன்படுவனவற்றின் மதிப்பு ரூ.7,154 கோடி (1,789 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) என இருந்தது; இது நடப்பு ஆண்டில் 9,400 கோடி ரூபாய் (2,186 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) அளவினை எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2005ஆம் ஆண்டில் 14,560 கோடி ரூபாய் (3,236 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) அளவுக்கு மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றின் மூலம், உயிரியல் தொழில்நுட்பத்துறையில் புதிய முதலீடுகள் செய்யப்படுவதற்கு மிகச் சிறந்த வாய்ப்புகளை இந்தியா பெற்றுள்ளது என்பது விளங்கும்.

முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழகம் முன்னணியில் உள்ளது என்பதனை இப்பேரவையில் குழுமியுள்ளோர் அனைவரும் நன்கறிவர். தமிழகம் 1,60,000 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகளை ஈர்த்துள்ளது. முதலீட்டாளர் நட்புறவு மற்றும் தொழில் வளர்ச்சி குறித்த இந்த அரசின் சீரிய கொள்கைகள் காரணமாகவே இது சாத்தியமாயிற்று. இம்மாநிலம் மிகச்சிறந்த அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளையும், உயர்தர மனித வளத்தினையும் வழங்குகிறது. இதன் வேலை – பண்பாடு (Work Culture) என்பது, நடைமுறைக்கேற்ற வினைத் திட்பத்தைக் (Business- like) கொண்டதாகும்.

அது மட்டுமல்லாமல், அரசின் அனைத்துச் செயல்பாடுகளும் வெளிப்படையானவையாகும்.

☐ முதலமைச்சர் **கலைஞர்**

இந்தக் காரணிகளின் அடிப்படையில் உயிரியல் தொழில்நுட்பத் துறையிலும் தமிழ்நாடு ஒரு முன்னணி மாநிலமாக எழுச்சி பெறும் என நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

தமிழ்நாடு உயிரியல் வளங்களையும் மிக அதிக அளவில் கொண்டுள்ளது. தமிழகத்தில் அமைந்துள்ள பல்வேறு வகையான நிலவியல் பகுதிகள் (geographical terrains) மிகப் பலவான உயிரியல் வகைகளைக் கொண்டுள்ளது. இதன் வனவளம், வேளாண்மை வளம், நிலவளம் ஆகியவை அளவில் பெரியதாகவும், பல்வேறு வகையினதாகவும் அமைந்துள்ளன. நாட்டிலேயே நீண்ட கடற்கரையையும் இம்மாநிலம் கொண்டுள்ளது.

இவ்வாறு உயிரியல் தொழில்நுட்பம் சார்ந்த ஆராய்ச்சிகளுக்காகவும், உயிரியல் சார்ந்த உற்பத்திப் பொருள்களின் மேம்பாடுகளுக்காகவும், வர்த்தக நடைமுறைகளுக்காகவும் அதிக அளவில் முதலீடுகள் செய்வதற்குரிய வாய்ப்புகளைத் தமிழகம் கொண்டுள்ளது. ஆகையால் உயிரியல் தொழில் நுட்பத்தில் தொழில் வளர்ச்சி சார்ந்த பல்வேறு நடைமுறைகளைத் தொடங்குவதற்குத் தமிழகம் தேவையான ஆற்றல்களைக் கொண்டுள்ளது என எங்களது அரசு உறுதியான கருத்தினைக் கொண்டுள்ளது.

## உயிரியல் தொழில்நுட்ப கொள்கை உருவாக்கம்

இது தமிழக அரசினால் புகழ்மிகு அறிவியல் மேதை டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் கருத்தும் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது. இக்குழுவினுடைய பரிந்துரைகளின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு இம்மாநிலத்திற்கான உயிரியல் தொழில்நுட்பக் கொள்கை ஒன்றினை வகுக்க முடிந்துள்ளது.

எனது தொடக்க உரையினுடைய முடிவில் இந்தக் கொள்கை ஆவணத்தினை வெளியிடவிருக்கிறேன் என்பதனை நான் இங்கு அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இங்கு குழுமியுள்ள அறிவார்ந்த பெருமக்கள் இக்கொள்கை பயனுள்ளது என்பதனையும், சிந்தனையைத் தூண்டும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது என்பதனையும் உணர்வார்கள் என உறுதியாக நம்புகிறேன்.

வருகின்ற மாதங்களில் எங்களது அரசு இந்த உயிரியல் தொழில்நுட்பக் கொள்கையை நிறைவேற்றிட பல செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்திடும். அத்துடன் பல பெரிய அளவிலான தொடக்கப் பணிகளும் செயல்முறைக்கு வரும்.

உயிரியல் தொழில்நுட்பக் கொள்கை ஆவணத்தை உருவாக்கியுள்ளதில் மட்டுமல்லாமல் இக்கொள்கை ஆவணத்தைப் பன்னாட்டு அறிஞர்கள் கூடியுள்ள இம்மாநாட்டில் வெளியிடுவதன் மூலமும் நான் இரட்டிப்பு மகிழ்ச்சியை அடைகிறேன்.

மாநிலத்திலுள்ள அதிக அளவிலான உயிரியல் வளங்களை மூலதனமாகக் கொள்ள இக்கொள்கை வழிவகுக்கிறது. அத்துடன் இம்மாநிலத்தில் நிறைந்துள்ள மிகச்சிறந்த தரத்திலான மனித ஆற்றல்களைப் பயன்படுத்திக் கொள்ளவும் இது வழி காட்டுகிறது. இந்த ஆவணம் கொள்கை வடிவமைப்பையும், நடைமுறைப்படுத்துவதற்குரிய வழிவகைகளையும் முழுமையாகக் கொண்டுள்ளது. மாநிலத்திலுள்ள உயிரியல் வளங்களை நீடித்து நிலைத்து நிற்கும் பொருளாதார மேம்பாட்டுக்கான சாதனங்களாக மாற்றுவதற்கு இக்கொள்கை உதவும்.

## இந்தியாவின் உயிரியல் தொழில்நுட்ப வரைபடத்தில் தமிழகம் இடம் பெறும்

அண்மையில் சில ஆண்டுகளில் தமிழக அரசு முதலீடுகளை ஈர்ப்பதற்கும், பொருளாதார வளர்ச்சிப் பாதையில் தமிழகத்தை முன் நடத்திச் செல்வதற்கும் உரிய பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்த நடவடிக்கைகளின் பயனாக மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியானது, குறிப்பாக அறிவு வளர்ச்சி சார்ந்த தொழில் துறைகளில் (Knowledge-based industries) மிகச் சிறப்பான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. இக்கொள்கையின் பல்வேறு அம்சங்களையும் சரியான செயல்திட்டங்களாக மாற்றுவதில் தமிழக அரசு முனைந்துள்ளது. இது இந்தியாவின் உயிரியல் தொழில்நுட்ப வரைபடத்திலும், அதே போல உலக வரைபடத்திலும், தமிழகத்தினை இடம் பெறச் செய்வதில் எங்களின் சீரிய முயற்சியாக அமைந்திடும்.

இந்த மாநாட்டின் அமைப்பாளர்கள், மாநாடு நடைபெறுவதற்குரிய இடமாகச் சென்னையைத் தேர்வு செய்தமைக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். ஏறத்தாழ இரண்டு மாதங்களுக்கு முன்பு அதிநவீனமானதும் அளவில் மிகப் பெரியதுமான "டைடல் மென்பொருள் பூங்காவினை" சென்னையில் நாங்கள் தொடங்கினோம். இன்று பன்னாட்டு அறிஞர்கள் பங்கு பெற்றுள்ள இந்த மாநாட்டினைத் தொடங்கி வைப்பதில் நான் பெருமிதம் அடைகிறேன். தமிழக மக்களுக்கும் இந்தியாவின் உயிரியல் தொழில்நுட்பத் தொழில்களுக்கும் இது ஒரு சிறந்த நிகழ்வாகும். இம்மாநாட்டில் நிகழும் விவாதங்களின் மூலம் பயனுள்ள புதிய பல சிந்தனைகள் உருவாகும் என நான் உறுதியாக நம்புகிறேன். இம்மாநாடு எல்லா வகையிலும் வெற்றி பெற என் நல்வாழ்த்துகள் உரித்தாகுக.

– 'வளர்ச்சிப் பாதையில் உயிரியல் தொழில்நுட்பம்'
மாநாட்டில் 12-9-2000 அன்று
முதலமைச்சர் கலைஞர் அவர்கள்
உயிர் தொழில்நுட்ப கொள்கையினை
வெளியிட்டு ஆற்றிய உரை.

★ ★ ★

# அடுத்த 10 ஆண்டுகளில் உணவு உற்பத்தி இரு மடங்காக்க முயற்சி

□ திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்
வேளாண்மைத்துறை அமைச்சர்

தேசிய வேளாண்மை கொள்கைக் குறித்து சில முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் மத்திய வேளாண்மைத்துறை அமைச்சர் நித்தீஷ்குமார் அவர்களால் கூட்டப்பட்டுள்ள இம்மாநாட்டில் கலந்து கொண்டு தமிழக அரசின் சார்பில் கருத்துக்களை எடுத்து வைக்க எனக்கு வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

உருகுவே நாட்டில் நடைபெற்ற மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட வேளாண்மை குறித்த ஒப்பந்தத்தின் படி வளர்ந்து வரும் நாடுகளில் உற்பத்தியாகும் வேளாண்மைப் பொருட்கள் எதிர்பார்த்த ஏற்றுமதி உயர்வினை அடைய வில்லை என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில் வளர்ச்சி பெற்ற நாடுகள் வேளாண்மைத் தொழிலுக்கு அதிக அளவில் மானியம் அளிப்பதால் அந்த நாடுகளில் உற்பத்தியாகும் வேளாண் பொருட்களை குறைந்த விலையில் ஏற்றுமதி செய்கின்றன. அதனால் வளரும் நாடுகளின் வேளாண் விளை பொருட்களுக்கு உற்பத்தி செலவுக்கு ஏற்ப உரிய விலை கிடைக்கவில்லை. வெளிநாட்டில் இருந்து இறக்குமதியாகும் வேளாண் விளைபொருட்களுக்கு உயர்ந்தபட்ச சுங்கவரி விதிக்கப்பட்டால் தான் வளர்ந்த நாடுகளின் விளைப் பொருட்களின் இறக்குமதி குறைந்து நம் நாட்டு உற்பத்தி பொருட்களுக்கு உரிய விலை கிடைக்கும் என்பதால் மத்திய அரசு இதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

### தேசிய வேளண்மை கொள்கையை வரவேற்கிறேன்

1994-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ''காட்'' ஒப்பந்தத்தினால் நமது நாட்டிற்கு வேளாண்மையில் ஏற்படும் சாதக, பாதக நிலைமையை அறிய மத்திய அரசு ஒரு உயர்மட்டக் குழு அமைத்து அக்குழு அளிக்கும் பரிந்துரையின் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்த 20 ஆண்டுகளுக்குள் வேளாண்மை வளர்ச்சி, ஆண்டுக்கு 4 சதவிகிதத்திற்கு மேலாக வளர்ச்சி அடைய வேண்டுமென்ற கோட்பாட்டுடன் வரையறுக்கப்பட்டுள்ள ''இந்திய தேசிய வேளாண்மைக் கொள்கையை'' தமிழக அரசின் சார்பாக நான் வரவேற்கிறேன்.

### முதல்வர் தலைமையில் உயர்மட்டக் குழு

தமிழக அரசைப் பொறுத்த வரை நடைபெறும் 9-வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் வேளாண்மையின் வளர்ச்சி ஆண்டு ஒன்றுக்கு 5 சதவிகிதமாக உயர்த்தப்பட வேண்டுமென்ற இலக்கு வரையறுக்கப்பட்டு உள்ளது என்பதை இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

''தமிழகத்தில் மாநில வேளாண்மைக் கொள்கை'' உருவாக்கி அதன் செயல்பாடுகளை கண்காணிக்க தமிழக முதல்வர் தலைமையில் ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது.



தமிழ்நாட்டில் விவசாயிகள் அதிக அளவில் பழங்கள் மற்றும் காய்கறிகளைச் சாகுபடி செய்கிறார்கள். இவைகள் எளிதில் கெட்டுவிடும் தன்மை உடையதாலும், அறுவடைக்குப் பின் இழப்பினைத் தவிர்க்கவும், உற்பத்தி மையங்களில் குளிர்சாதனக் கிடங்குகள் அமைக்க தமிழக அரசால் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்கு நல்ல விலை பெற வழி வகை செய்யப்படுகிறது.

தேசிய தோட்டக்கலை வாரியம் மூலம் 25 சதம் முதலீடு மானியம் வழங்கி பெருமளவில் குளிர்சாதன கிடங்குகள் நிறுவ மத்திய அரசு முன் வந்து இருப்பதை நான் இங்கு பாராட்டக்

கடமைப்பட்டுள்ளேன். இதுபோன்ற திட்டங்களை மாநில அரசுகள் செயல்படுத்த நிதி நெருக்கடி உள்ளதால் மத்திய அரசு 50 சதமாக உயர்த்துவதுடன், தமிழக அரசால் திட்டமிடப்பட்டுள்ள குளிர்சாதன கிடங்குகள் அமைக்கும் பணிக்கு மத்திய அரசு விரைவில் ஒப்புதல் வழங்க வேண்டும்.

வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்வதற்கு மத்திய அரசு அளிக்கும் ஊக்கத்திற்கு தமிழக அரசின் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகள் தங்கள் வேளாண்மை விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க ஏதுவாக மத்திய அரசு பல வேளாண்மை விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயம் செய்து இருந்தாலும், இன்னும் சில வேளாண் விளை பொருட்களுக்குக் குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயம் செய்யப்படவில்லை.

எனவே மத்திய அரசு அனைத்து வேளாண் விளைபொருட்களுக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயம் செய்து விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற எனது வேண்டுகோளை இங்கே வைக்க விரும்புகிறேன்.

வெங்காய விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால் சாகுபடி செய்த விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எனவே ''நேபஃட்'' நிறுவனத்தின் மூலம் தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் வெங்காயத்தையும் கொள்முதல் செய்திட வேண்டுமென மத்திய அரசை நான் கேட்டுக் கொள்கிறேன். வெங்காயம் விரைவில் கெட்டுவிடும் பொருள் என்பதால் தமிழ்நாட்டில் இருந்து அதிக அளவில் வெங்காயத்தை கொள்முதல் செய்ய தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

## தேசிய பயிர் காப்புறுதி திட்டம்

மத்திய அரசு அறிவித்துள்ள ''தேசிய பயிர் காப்புறுதி திட்டத்தை'' தமிழ்நாட்டில் செயல்படுத்த தமிழக அரசு தனது ஒப்புதலை அளித்துள்ளது. இத்திட்டத்தை நடப்பாண்டில் செயல்படுத்த தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்குத் தேவையான ''கார்ப்பஸ் நிதி''க்கு தமிழக அரசின் பங்கு விரைவில் செலுத்தப்பட உள்ளது என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் புதிய திட்டத்தின் கீழ் நிறுவப்பட உள்ள ''கார்ப்பஸ் நிதி''க்கு மத்திய அரசும், மாநில அரசும் 50:50 என்ற விகிதத்தில் நிதியினைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென வகை செய்யப்பட்டுள்ளது. இதனால் மாநில அரசுக்கு நிதி சுமை அதிகம் ஆகியது என்பதால் மாநில அரசுகளுக்கு நிதி சுமை ஏற்படா வண்ணம் 75:25 என்ற விகிதத்தில் நிதி பங்கேற்பு விகிதாச்சாரத்தை மத்திய அரசு மாற்றி அமைக்க வேண்டுமென தமிழக அரசின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் சுமார் 3.5 இலட்சம் எக்டெரில் தென்னை சாகுபடி செய்யப்பட்டு சுமார் 600 இலட்சம் தென்னை மரங்கள் உள்ளன. இதில் சுமார் மூன்றில் ஒரு பங்கான 200 இலட்சம் தென்னை மரங்கள் ஈரியோபைட்மைட் என்ற சிலந்தி பூச்சிகளினால் தாக்கப்பட்டுள்ளதால் தென்னை பயிரிட்ட விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் உயிரியல் பூச்சிக் கொல்லி மற்றும் கார்போசல் பான் மருந்தை வேர் மூலம் செலுத்தி இந்த பூச்சியைக் கட்டுப்படுத்த முடியும் என கண்டறிந்து உள்ளது. இந்த மருந்தை இரண்டு முறை வேர் மூலம் செலுத்த ஒரு தென்னை மரத்திற்கு ரூ.21.60 காசு செலவாகும். விவசாயிகளுக்கு மானிய விலையில் மருந்து செலுத்த ஆகும் செலவை வழங்க முதற்கட்டமாக ''தேசிய துயர் துடைப்புநிதி'' யிலிருந்து ரூ.37 கோடி தமிழக அரசுக்கு ஒதுக்கீடு செய்ய 26.7.2000 நாளிட்ட கடிதத்தின் மூலம் மத்திய அரசை கோரியுள்ளது. இந்த நிதியை உடனே வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

## நிதியை மத்திய அரசு தரவேண்டும்

மேலும் இந்த மருந்தை வேர் மூலம் செலுத்துவதுடன் வேப்பம் புண்ணாக்கு, மக்கிய தொழு உரம், ஜிப்சம், மக்னீசியம் சல்பேட், போராக்ஸ், இரசாயன உரம் மற்றும் நுண்ணூட்டச் சத்து இடவேண்டும் எனவும், அதற்காக ஒரு மரத்திற்கு ரூ.60 செலவாகும் எனவும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கணக்கிட்டுள்ளது. பாதிக்கப்பட்ட 200 இலட்சம் மரங்களுக்குச் சுமார் ரூபாய்160 கோடி அளவில் பயிர் பாதுகாப்பு மற்றும் உரம் இட செலவு ஆவதால் இந்த தொகையை விவசாயிகளுக்கு நிவாரணமாக வழங்க மத்திய அரசு இந்த நிதியை வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

1967-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் பொறுப்பேற்றவுடனும், அண்ணாவின் மறைவிற்குப் பின்பு கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் தமிழகத்தில் வேளாண்மையில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி உணவு தானிய உற்பத்தியை பன்மடங்கு பெருக்கி, பெருகி வரும் மக்கள் தொகைக்கும், குறைந்து வரும் சாகுபடி பரப்புக்கும் பெருகி வரும் உணவு தேவையினை ஈடு செய்யும் வகையிலும் தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டது.

அதன் அடிப்படையில் 1995-96-ஆம் ஆண்டில் தமிழகத்தின் மொத்தம் உணவு உற்பத்தி 68 இலட்சம் மெ.டன்கள் ஆகவும், அரிசி உற்பத்தி 52 இலட்சம் மெ.டன்கள் ஆகவும் இருந்ததை 1996-ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் நான்காம் முறையாக முதலமைச்சராகப் பொறுப் பேற்றவுடன் வேளாண்மைத் துறைக்கும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்திற்கும் தொடர்ந்து வழங்கி வரும் ஊக்கத்தின்

காரணமாகச் சிறப்பாகச் செயல்பட்டு அரிசி உற்பத்தித் திறனில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழகம் விளங்குகிறது.

1998-99-ஆம் ஆண்டில் தமிழகத்தில் ஒரு எக்டெருக்கு 3,579 கிலோ அரிசி உற்பத்தி செய்யப்பட்டு 22.74 எக்டெர் பரப்பில் 81.41 இலட்சம் மெ.டன் அரிசி உற்பத்தி செய்து சாதனைப் படைத்துள்ளது.

இந்த உற்பத்தி திறனை அடைவதற்கு காலத்தே வழங்கப்பட்ட இடுபொருட்கள், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு, நுண்ணூட்டச் சத்து, உயிரின உர உபயோகம், தரமான சான்றிதழ் பெற்ற விதைகள் வினியோகம் மற்றும் மத்திய, மாநில அரசு திட்டங்களைக் காலத்தே செயல்படுத்தியதாலும், நவீன தொழில் நுட்பங்களைக் கடைபிடித்ததாலும் அரிசி உற்பத்தித் திறனில் தமிழகம் முன்னணியில் இருக்கிறது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழக அரசு 9வது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள் ஒரு எக்டெரில் 7 மெ.டன் அளவிற்கு உற்பத்தியை அடைய வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயல்திட்டம் தீட்டி செயல்பட்டு வருகிறது என்பதையும் இங்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்..

அதேபோல் அடுத்த 10 ஆண்டிற்குள் உணவு உற்பத்தியை இரண்டு மடங்காக, அதிகரிக்க வேண்டுமென்ற மத்திய அரசின் எதிர்பார்ப்பை அடைய தமிழக அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதை இங்கு நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முயற்சியினால் தமிழகத்திலுள்ள தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்ற அண்ணா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் வி.சி.குழந்தைசாமி அவர்கள் தலைமையில் ஒரு உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டு, அக்குழுவின் ஆய்விற்கு பின்னர் தமிழகத்திலுள்ள சுமார் 15 இலட்சம் எக்டெர் தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்ற பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.


முதல் கட்டமாக 1999-2000-ஆம் ஆண்டில் சுமார் 10,000 எக்டெர் தரிசு நிலங்கள் வேளாண்மைக்கு உகந்த நிலங்களாக மாற்றப்பட்டுள்ளது. மேலும் 2000-2001-ஆம் ஆண்டில் 30,000 எக்டெர் தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## வேளாண்மைப் பாடம் தமிழக அரசு நடவடிக்கை

இந்தியா ஒரு விவசாய நாடு. 70 சதம் மக்கள் விவசாயத் தொழிலையே நம்பிவாழ்கிறார்கள். 80 சதம் தொழிற்சாலைகள் வேளாண்மை விளைபொருட்களையே மூலப்பொருட்களாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. இதைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு வேளாண்மைக் கல்வியை உயர்நிலைப் பள்ளிகளில் ஒரு பாடமாக முதல் கட்டமாக 2000-2001-ஆம் ஆண்டு முதல் 200 பள்ளிகளில் செயல்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனால் படித்த இளைஞர்கள் வேலைத் தேடி அலையாமல் கிராமங்களில் உள்ள அவர்களுடைய நிலங்களிலேயே அவர்கள் பெற்ற வேளாண்மை தொழில்நுட்ப அறிவினைக் கொண்டு விஞ்ஞான முறையில் வேளாண்மையைச் செய்து வருவாயை ஈட்டக் கூடிய அளவில் ஈடுபட ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, வேளாண் பாடத் திட்டத்தை அனைத்து உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் கொண்டுவர தமிழக அரசுக்கு, மத்திய அரசு தேவையான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின்



அறிவிப்பால் தமிழகத்தில் ''உழவர் சந்தை'' திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்பதை இங்கு தெரிவிப்பதோடு, இதனால் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு உரிய விலையும், நுகர்வோர்களான பொது மக்களுக்குக் குறைந்த விலையில் காய்கறிகளும், பழங்களும் கிடைக்கின்றன. இதனால் உழவர் சந்தைகள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

இதுவரை தமிழகத்தில் 65 உழவர் சந்தைகள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. 2000-ஆம் ஆண்டு இறுதிக்குள் 100 உழவர் சந்தைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இங்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாநாட்டில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த மத்திய வேளாண் அமைச்சருக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து எனது உரையை நிறைவு செய்கிறேன்.

- புதுடெல்லியில் நடைபெற்ற வேளாண்துறை அமைச்சர்கள் மாநாட்டில் ஆற்றிய உரை.

★ ★ ★

# எங்கள் ஊர் பிரச்சினை

**பிரச்சினை:**

1. திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம் திண்ணனூர் கிராமத்தில் இருந்து கரட்டாம்பட்டி வரை உள்ள மிக மோசமான தார்சாலையை மாற்றி தார்சாலை நான்கு கிலோ மீட்டர் போடப்பட வேண்டும்.
2. திண்ணனூரில் இருந்து ஓமாந்தூர் வரை உள்ள கப்பி சாலை தார்சாலையாக மாற்றப்பட வேண்டும்.
3. முசிறியில் இருந்து புலிவலம், திண்ணனூர், புத்தனாம்பட்டி வரை புறநகர பேருந்து இயக்கப்பட வேண்டும்.
4. துறையூரிலிருந்து காலை 5 மணிக்கு திண்ணனூர் வருவதற்கு புறநகர பேருந்து இயக்க வேண்டும். இரவு 10 மணிக்கு சத்திரம் பேருந்து நிலையத்தில் இருந்து புற நகர பேருந்து திண்ணனூர் வழியாக துறையூர் வரை இயக்க வேண்டும்.
5. முசிறி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி சுற்றிலும் தடுப்புச்சுவர் எடுக்கப்பட வேண்டும்.

*கிராம பொதுமக்கள் சார்பாக*
*மு.இராஜவேல், திண்ணனூர்,*
*திருச்சிராப்பள்ளி.*

**தீர்வு :**

1. முசிறி வட்டம் திண்ணனூர் கிராமத்தில் இருந்து கரட்டாம்பட்டி வரை உள்ள சாலையில் கி.மீ.0/0–1/0 வரை உள்ள தார்தளம் நல்ல நிலையில் உள்ளது. கி.மீ.1/0 – 3/6 வரை உள்ள தார் தளத்தைப் புதுப்பிக்க ரூ.18.20 இலட்சத்தில் 2000–2001–ஆம் ஆண்டிற்கான நபார்டு திட்டத்தில் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பிரேரணை ஒப்புதல் பெற்றதும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் துவங்கப்படும்.
2. முசிறி மற்றும் மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியங்களை இணைக்கும் சாலையாகும். இதனை அடுத்து வரும் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்து இப்பணி செய்யப்படும்.
3. முசிறியில் இருந்து புலிவலம், திண்ணனூர், புத்தனாம்பட்டி வரை புறநகர பேருந்து தினசரி ஒரு நடை இயக்கப்பட்டு வருகிறது.
4. துறையூர் – திண்ணனூர் (வழி) கரட்டாம்பட்டி வழியாக இரண்டு நடையும், துறையூர் – சமயபுரம் (வழி) கரட்டாம்பட்டி, திண்ணனூர் வழியாக நான்கு நடையும், துறையூர் – மண்ணச்சநல்லூர் (வழி) கரட்டாம்பட்டி, திண்ணனூர் வழியாக நான்கு நடையும் தினசரி இயக்கப்பட்டு வருகிறது.
5. தடுப்புச்சுவர் கட்டும் பணி எத்திட்டத்திலும் எடுக்கப்படுவதில்லை. இந்த வேலைக்கான உத்தேச மதிப்பீடு ரூ.1.50 இலட்சம் ஆகும். இதில் 1/4 பங்குக்குக் குறைவாகப் பங்குத் தொகை செலுத்தினால் இவ்வேலையை "நமக்கு நாமே" திட்டத்தில் எடுத்துச் செய்ய ஏதுவாகும்.

*திட்ட அலுவலர்,*
*மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,*
*திருச்சிராப்பள்ளி.*

★ ★ ★

**பிரச்சினை :**

திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி வட்டம், வாசுதேவநல்லூர் ஒன்றியம், நாரணபுரம் ஊராட்சி எங்கள் கிராமம். இங்கு துணை சுகாதார நிலையக் கட்டடம் கட்டப்பட்டு சுமார் 7 வருடங்களுக்கு மேல் திறக்கப்படாமலே உள்ளது. துணை சுகாதார நிலையம் தனியார் வீட்டில் இயங்கி வருகிறது. இரவு நேரங்களில் பொதுமக்களுக்கு நோய் வந்துவிட்டால், கிராமச் செவிலியரை அழைக்கச் சென்றால் இரவு நேரங்களில் வீட்டு உரிமையாளர் கதவைத் திறக்க மறுக்கிறார். கிராமச் செவிலியர் தொகுப்பு வீட்டில் இரண்டு வீடு தள்ளியுள்ளார். ஆகையால், பொதுமக்கள் இரவு நேரத்தில் சுமார் 5 கி.மீ. தூரம் செல்ல வேண்டிய நிலை உள்ளது. இரவு நேரங்களில் பேருந்து வசதியும் கிடையாது. ஆகையால், துணை சுகாதார நிலையத்தைத் திறக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும் பலமுறை ஊர் பொதுமக்கள் மனு அனுப்பியும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாவட்ட ஆட்சித்தலைவர் முதல் நாரணபுரம் கவுன்சிலர் மற்றும் பஞ்சாயத்து தலைவர் வரை பொதுமக்கள் மனுக்கொடுத்தும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே நாரணபுரம் துணை சுகாதார நிலையத்தைத் திறக்க உடனே சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்க ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*ஊர் பொதுமக்கள் சார்பாக,*
*கே.நெடுஞ்செழியன்,*
*நாரணபுரம், திருநெல்வேலி மாவட்டம்.*

**தீர்வு :**

திருநெல்வேலி மாவட்டம், வாசுதேவநல்லூர் ஒன்றியம், நாரணபுரம் துணை சுகாதார நிலையத்தில் குடிநீர் இணைப்பு மற்றும் மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டு தற்போது நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. மேலும், இத்துணை சுகாதார நிலையத்தில் கிராம, சுகாதார செவிலியர் தங்கி பணிபுரிந்து வருகிறார் என்ற விபரத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாவட்ட ஆட்சித்தலைவர்,*
*திருநெல்வேலி.*

★ ★ ★

**பிரச்சினை :**

செய்யார் நகரிலிருந்து தேரூர் வரை இயங்கி வரும் பேருந்து (குடம் எண்.58) 4.7.2000 அன்று வழக்கம்போல்

பிற்பகல் 2.30 மணிக்கு செய்யாரிலிருந்து புறப்பட்டு வந்தது. அதில் நானும் பயணம் செய்தேன். வரும் வழியில் செங்காடு வாராவதி அருகே டயர் பஞ்சராகிவிட, மெதுவாக பேருந்தை கிருஷ்ணாவரம் இணைப்புச் சாலை வரை எடுத்துச் சென்று விட்டால் டயரும் பஞ்சர் போட்டு விடலாம். பயணிகளுக்கும் மாற்று ஏற்பாடுகளுக்கு வசதியாக இருக்குமென நடத்துனர் திரு ஏழுமலை தெரிவித்தார். ஆனால் அதை செவிமடுக்காத ஓட்டுநர் (பெயர் தெரியவில்லை) மறுத்து பயணிகளைப் பேருந்திலிருந்து இறக்கிவிட்டுவிட்டு செய்யார் நோக்கிச் சென்று கொண்டிருந்த வழிபோக்குக் காரில் ஏறிச் சென்றுவிட்டார்.


பயணிகளோ விதியே என அரசுப் பேருந்தையும் நொந்த வண்ணம் நடந்து வருகையில் கிருஷ்ணாவரம் வரை வரும் வேறு ஒரு தனியார் பஸ் கிடைக்க அதில் ஏறி கிருஷ்ணாவரம் இணைப்புச் சாலையில் வந்து இறங்கினோம். திடீரென அதே நகரப் பேருந்து (அரை மணி நேரத்தில்) கிருஷ்ணாவரம் வந்தது. பாலைவனச் சோலையாய் பேருந்தைக் கண்டதும் ஏற்கெனவே அதில் பயணம் செய்து, கைபிசைந்து நின்று கொண்டிருந்த பயணிகள் திபு திபுவென பஸ்ஸில் ஏற முண்டியடித்தனர். ஆனால் அதே ஓட்டுநர் பயணிகளை ஏமாற்றி பஸ்ஸை வேகமாக எடுத்துச் சென்றுவிட்டார். நடத்துனர் எவ்வளவோ சொல்லியும் பயணிகளின்றி அந்தப் பேருந்து தேரூர் சென்றது. ஏராளமான பயணிகள் ஓட்டுநரை வைதவண்ணம் நடந்து செல்லலாயினர்.

மறுநாள் அந்த ஓட்டுநரைப் பார்த்து அவர் செய்த அநியாயத்திற்கு என்ன காரணம் என தட்டிக் கேட்டேன். தமக்கும் நடத்துனருக்கும் ஏற்பட்ட சண்டைதான் காரணம் என கதைக்குதவாத காரணத்தைத் தெரிவித்தார்.

அரசின் பேருந்தில் அரசுப் பணியாளர்களான இருவருக்கும் உள்ள சொந்தப் பிரச்சினையால் ஐம்பதுக்கும் மேற்பட்ட பயணிகள் அவஸ்தைப்பட்டதை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. அவர்களின் சார்பில் இப்புகார் மனுவை ஏற்றுக் கொண்டு ஓட்டுநரை விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம். இல்லையெனில் அரசுப் பேருந்துகள் என்றால் இப்படித்தான் என சிலர் சொல்லும் வியாக்கியானம் மெய்த்துப் போகும்.

நடவடிக்கையை நாடும்,

*பொதுமக்கள் சார்பில்,*
*ஏ.கிருஷ்ணவேணி, வல்லம்–604 525,*
*திருவண்ணாமலை மாவட்டம்.*



**தீர்வு :**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விகோ2)லிட், வேலூர் கழகத்தின் செய்யாறு பணிமனையைச் சேர்ந்த நகரத் தடம் எண்.டி58–இல் சம்பவ தினமான 4.7.2000 அன்று திரு.ஜெயக்குமார் ஓட்டுநராகவும் திரு.ஏழுமலை நடத்துனராகவும் பணிபுரிந்தனர். இவர்கள் இருவரையும் தலைமை அலுவலகத்திற்கு அழைத்து விசாரணை செய்யப்பட்டது. அவர்களுக்குத் தக்க அறிவுரை வழங்கப்பட்டதுடன், ஓட்டுநர் திரு. ஏ. ஜெயக்குமார், (பணி எண்.0280 என்பவரை) தற்போது பணிபுரிந்து வரும் செய்யாறு பணிமனையிலிருந்து காஞ்சிபுரம் பணிமனைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்பதை தங்களுக்குக் கனிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

*மேலாண் இயக்குநர்,*
*தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,*
*(விகோ2)லிட்., வேலூர்.*

★ ★ ★

**பிரச்சினை :**

எங்கள் ஊர் புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் வட்டம் அன்னவாசல் பேரூராட்சியாகும்.

அன்னவாசல் பேரூராட்சிக்கு எதிரே உள்ள மின்கம்பம் சோடியம் விளக்கு பொருத்தப்பட்டுள்ள அதிகளவு மின்சாரம் செல்லும் மின்கம்பியாகவும், இந்த மின்கம்பம் உள்ளது. ஆனால் அதை தாங்கி நிற்கும் மின்கம்பம் மிகவும் பழுதடைந்துள்ளது. இதை உடனே மாற்றுமாறு தங்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மின்கம்பம் அன்னவாசல் புதுக்கோட்டை சாலையில் அன்னவாசல் பேரூராட்சிக்கு எதிரே உள்ளது.

*ஊர் பொதுமக்கள் சார்பாக,*
*எமு.சீனிவாசன், இலுப்பூர் வட்டம்,*
*புதுக்கோட்டை மாவட்டம்.*

**தீர்வு :**

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டத்தைச் சேர்ந்த அன்னவாசல் பிரிவிற்கு உட்பட்ட அன்னவாசலில் மின் கம்பம் ஒன்று பழுதாகி இருப்பதாக மின்வாரிய ஊழியர் என் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

உதவிப் பொறியாளர் என்ற முறையில் நான் அந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்ட பிறகு, மின் கம்பத்தை மாற்றி அமைக்க 30.10.99–ஆம் தேதி மதிப்பீடு தயார் செய்யப்பட்டு 3.12.99–ஆம் தேதி மேல் அதிகாரியின் அனுமதியும் பெறப்பட்டது.

ஆக உடைந்த மின்கம்பம் தற்போது மாற்றப்பட்டு புதிய மின் கம்பம் நடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*உதவி மின் பொறியாளர்,*
*இயக்குதலும், காத்தலும்,*
*தமிழ்நாடு மின்சார வாரியம், அன்னாவாசல்,*
*புதுக்கோட்டை மாவட்டம்.* ★

# உயிர்த் தொழில்நுட்பக் கொள்கை

கலைஞர் மு. கருணாநிதி
தமிழ்நாடு முதல்வர்

## முன்னுரை

தமிழகத்துக்கான உயிர்த் தொழில்நுட்பக் கொள்கையை உருவாக்கி நடைமுறைப்படுத்துவோம் என்று 24.3.2000 அன்று எனது நிதிநிலை அறிக்கை உரையின் போது குறிப்பிட்டேன். தமிழக சட்டப்பேரவைக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அன்று அளித்த வாக்குறுதி இன்று நிறைவேற்றப்படுவதை எண்ணி அகமகிழ்கிறேன்.

இந்தக் கொள்கை தமிழகத்தின் செழுமையான உயிர்வளத்தை (rich and varied bio-resources) மூலதனமாக்க உறுதுணையாக இருக்கும். இக்கொள்கை மாநிலத்தின் சிறந்த தரமுள்ள மனிதவளத்தை சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளவும் வழிவகுக்கும். சுற்றுச்சூழலுக்கும் சமூக அமைப்புக்கும் தாக்குப் பிடிக்குமாறு பொருந்தும் வகையில் உயிர்ச் செல்வத்தைப் பொருட் செல்வமாக மாற்றுவதற்கான கொள்கைகளை வகுத்து செயல்படுத்த அமைப்பு ரீதியாக வழி காண்பதும் நமது திட்டமாகும்.

கடந்த சில ஆண்டுகளாகத் தமிழக அரசு, பெரிய அளவில் முதலீடுகளை ஈர்க்கவும், பொருளாதார வளர்ச்சிப் பாதையில் தமிழகத்தை முதலிடத்துக்குக் கொண்டு செல்லவும் பல்வேறு முதன்மையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இவற்றின் விளைவாக தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி - குறிப்பாக அறிவுசார் தொழில் துறையில் - வியத்தகு மேம்பாட்டை எட்டியிருக்கிறது. அரசு தற்போது இந்தக் கொள்கை முன்மொழிவை நடைமுறைத் திட்டமாக்கி உரிய செயல்வடிவம் தர உள்ளது. உரிய பலன்களைப் பெற அரசு முன் வந்துள்ளது. இந்திய உயிர்த் தொழில்நுட்ப வரைபடத்தில் மட்டுமல்லாது உலக உயிர்த் தொழில்நுட்ப வரைபடத்திலும் தமிழகத்தை இடம் பெறச் செய்வதைப் பெற்றுத் தரவே அரசு முனைந்து வருகிறது.


இந்த உயிர்த் தொழில்நுட்பக் கொள்கை, இத்துறையில் இதுவரையில்லாத புதிய தொழில் முதலீடுகளைக் கொண்டுவரும் என்பதும், அதன் விளைவாகத் தமிழ்நாட்டின் கல்வி, பொருளாதார வளர்ச்சி சுழன்று மேம்படும் என்பதும் திண்ணம்.

சென்னை-600 009
I அக்டோபர், 2000

மு. கருணாநிதி

### அ. அறிமுகம்

முதலீடுகளை ஈர்ப்பதில் முன்னணி மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது. அண்மைக் காலமாக, அறிவுசார் தொழில்துறையில் தமிழகத்தின் வளர்ச்சி அபாரமான தாகும். **1995–96**இல் ரு.**37** கோடியாக மட்டுமே இருந்த தமிழகத்தில் மென்பொருள் ஏற்றுமதியின் அளவு **1999–2000**இல் ரூபாய் **1,914** கோடியை அடைந் திருக்கிறது. இந்த மகத்தான முன்னேற்றத்தின் பலன்களைத் திடப்படுத்தவும் பொருளாதார மேம்பாட்டில் மாநிலத்தை மேலும் முன் நகர்த்தவும் தமிழக அரசு இன்னொரு அறிவுசார் தொழில் துறையான உயிர்த் தொழில்நுட்பத்தின் மீது தனது கவனத்தைத் திருப்ப முடிவு செய்திருக்கிறது.



2. புத்தாயிரமாண்டில் ஊருருவிச் செல்லும் களமாக தகவல் தொழில்நுட்பமும், உயிர்த் தொழில்நுட்பமும் இருக்கவல்லவை என்பது உலகறிந்த உண்மை. அண்மையில் மனித மரபியல் குறியீட்டமைப்பு அறிவிக்கப்பட்டது. கடந்த இருபது ஆண்டுகளில் மரபு நுட்பவியல் பிரமிப்பூட்டும் வகையில் வளர்ந்திருக்கிறது. இந்தப் புதுமைகளைத் தொடர்ந்து உயிர்த் தொழில்நுட்பம் மின்னல் வேகத்தில் வளரும் தொழில்நுட்பமாக மாறியிருக்கிறது. இந்தப் போக்கை உணர்ந்த தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 2000–2001ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், அரசு ஒரு புதிய உயிர்த் தொழில்நுட்பக் கொள்கையை விரைவில் வகுத்துச் செயல்படுத்தும் என்று அறிவித்திருந்தார். அதன் தொடர்ச்சியாக புகழ்பெற்ற விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் தலைமையில் ஓர் உயர்நிலைக்குழு நியமிக்கப்பட்டது. புதிய கொள்கையை வகுத்த அந்த குழுவின் பரிந்துரைகள் ஓர் அறிக்கையாக அரசிடம் அளிக்கப்பட்டது. அந்த அறிக்கையின் அடிப்படையிலும் இது தொடர்பான பல்வேறு அம்சங்களைத் தீவிர பரிசீலனைக்குட்படுத்தியும், தமிழக அரசு ஒரு புதிய உயிர்த் தொழில்நுட்ப கொள்கையை அறிவிக்கத் திட்டமிட்டது.

**ஆ. பின்னணி**

3. தமிழகத்தின் உயிர் வளம் மிகவும் செழிப்பானதாகும். தமிழகத்தில் உள்ள உயிர் வகைபாடுகளை (biodiversity) வேறு எந்த மாநிலத்திலும் காண்பது அரிது. மாநிலத்தின் வன்வளம், வேளாண்வளம், தாவர வளம் ஆகியவை விரிந்தும் வேறுபட்டும் இருப்பதோடு மிகப்பெரிய உயிர்த் தொழில்நுட்பச் சந்தை ஒன்றை உருவாக்கும் ஆற்றல் படைத்தவை. மாநிலத்தில் 5,000க்கும் மேற்பட்ட பூக்கும் தாவரங்கள் உள்ளன. தமிழகத்தின் வனப்பரப்பு 22,500 ச.கி.மீ. நாட்டின் மிக நீளமான கடற்கரையைக் கொண்ட தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் கடலுயிர்த் தொழில்நுட்பம் (Marine Bio-technology) வளர வாய்ப்புள்ளது. உயிர்நுட்ப பொருள்களை உருவாக்க, வணிக மயப்படுத்துவதில் அனுபவமிக்க உயிரியல் வல்லுநர்களும் தமிழகத்தில் ஏராளம். உயிர்த் தொழில்நுட்ப தொழில் வாய்ப்புகளைப் பயன்படுத்தத் தகுந்த ஆற்றல் கொண்ட மனிதவளத்தையும் தமிழகம் பெற்றுள்ளது.

4. உயிர்த் தொழில்நுட்பத் தொழில் துறையில் இதுவரை தமிழகத்தில் காணப்படுபவை முதல் தலைமுறை உயிர்த் தொழில்நுட்பத் துறைகளாகும். எடுத்துக்காட்டு: ஆன்ட்டிபயோடிக்ஸ் ஃபெர்மன்டேஷன். மாநிலத்தின் முன்னணி தொழில் நிறுவனங்கள் இதுவரை உணவு மற்றும் அலங்காரத் தாவரங்கள் போன்றவற்றுக்கான திசு வளர்ச்சி தொழிலகங்களை நடத்தி வருகின்றன. இவ்வாறாக, உயிர்த் தொழில்நுட்பம் வளர்ப்பதற்கான முன்தயார் நிலை ஏற்கெனவே மாநிலத்தில் நிலவுகிறது. இனி, மறுகலப்பு, டி.என்.ஏ. அடிப்படையிலான பொருட்கள், உயிர்த் தகவலியல் போன்ற இரண்டாம் தலைமுறை தொழில்களுக்குச் செல்லலாம். வேளாண்மை, தொழில்துறை, மருத்துவம், கால்நடை அறிவியல், சுற்றுச்சூழல் ஆகிய துறைகளில் வளர்ச்சி

அடைந்த நாடுகளுக்கு நிகராக நவீன முறைகளை அறிமுகப்படுத்தவும், அதேசமயம் பாரம்பரிய உயிர்நுட்ப உற்பத்திகளைத் தொடரவும் அரசு கவனம் செலுத்தும். குறிப்பாக, மேலைநாடுகளில், ஏற்கெனவே பயன்படுத்துகிற வெப்பமண்டல சூழல்மயமாக்க வாய்ப்புகளைத் தருகிற தொழில் மற்றும் உணவு நொதி உற்பத்திக்கு முக்கியத்துவம் தரப்படும். குறுகிய காலத்தில், வணிக நோக்கில் கூடுதல் வாய்ப்புகளைத் தரும். இவற்றை உயிர்தொழில்நுட்ப வளர்ச்சி தொடர்பான எல்லா ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளிலும் உள்ளடக்க வேண்டும்.

**இ. எதில் தொழில் வாய்ப்புகள் அதிகம்?**

உயிர்த் தொழில்நுட்பத்தில் பின்வரும் நான்கு பிரிவுகளில் தமிழகம் வாய்ப்புகளைப் பயன்படுத்தும் நடவடிக்கைகள் தொடரும்.

- ☐ மருத்துவம் / மனித – விலங்கின உடல் நலம் பாதுகாப்பு
- ☐ வேளாண்மை – உணவு
- ☐ சுற்றுச் சூழல்
- ☐ தொழில் உற்பத்தி பொருட்கள்

பன்னாட்டுச் சந்தையை முன்னிறுத்திப் பார்க்கும்போது, மருத்துவம், வேளாண் மற்றும் உணவு சார்ந்த பொருள்களுக்கு அதிகம் உகந்ததாயிருப்பினும் இந்தியச் சூழலில் (தமிழகத்தில் குறிப்பாக, நெசவு, தோல் தொழில் முக்கியமானவை) தொழில்துறை மற்றும் சுற்றுச்சூழல் பொருள்களில் உற்பத்தி மற்றும் மரபு மற்றும் நவீன உயிர் தொழில்நுட்பப் பொருள்கள் உற்பத்திக்கும் அபரிமிதமான சந்தர்ப்பங்கள் உள்ளன.

**(1) மருத்துவம்**

மருத்துவ உயிர்த் தொழில்நுட்பத் துறையில் தமிழகம் அனைவரையும் ஈர்க்கும். ஏனெனில் நாட்டின் மருத்துவ உற்பத்தியில் 11 சதவீதம் தமிழகத்தில் செய்யப்படுகிறது. பென்சிலின் உற்பத்தியகங்கள், மற்றும் பென்சிலின் சார்ந்த உற்பத்தியகங்கள் தவிர, இந்தத் துறையில் முதலீடு குறைவாகவே இருக்கிறது. எனவே, இந்த நிலையை மாற்ற உயிர்த் தொழில்நுட்பம் சிறந்த சாதகமான சாதனமாகத் தோன்றுகிறது.

தொழில் நிறுவனங்கள் மாநிலத்திலுள்ள சிறந்த மருத்துவ மையங்களோடு இணைந்து செயலாற்றும் சூழல் ஊக்குவிக்கப்படும். எடுத்துக்காட்டாக, தடுப்புமருந்து தயாரிக்கும் முயற்சியில் சென்னை காசநோய் ஆராய்ச்சி நிலையம் கூட்டு முயற்சியில் ஈடுபட்டு வருவதைக் குறிப்பிடலாம். இங்கேயும் வேறு பல மையங்களிலும் பெரிய அளவில் மருத்துவ மாதிரிகள் (clinical specimen) உருவாக்கப்பட்டுள்ளன. வருங்கால ஆராய்ச்சிக்கு இவை முன்னுதாரணங்கள்.

கீழ்க்காணும் துறைகளில் மருத்துவ உயிர்த் தொழில்நுட்ப வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன.

- ☐ நோய் நிர்ணயம் (Diagnostics)
- ☐ தடுப்பு மருந்து (ஹெபாடிடிஸ்–சி, மலேரியா போன்றவை)
- ☐ சிகிச்சை மருந்து (இன்டாஃபெரோன், இன்சுலின் போல)
- ☐ விலங்கின மருந்துகள் (தடுப்பு மருந்துகள் உள்பட)

**2. வேளாண் உணவு**

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி மையம் போன்றவை உருவாக்கியுள்ள ஜெர்ம்ப்ளாசம் தகவல் களஞ்சியத்தை மையமாகக் கொண்டு செயல்பட வாய்ப்புகள் உள்ளன. அரிசி, தேங்காய், கரும்பு, தேயிலை போன்ற மாநிலத்தின் முன்னணிப் பயிர்களை மையமாகக் கொண்டு ஆராய்ச்சிகள் நடத்தப்படலாம். இந்தத் துறையில் முக்கியத்துவம் வாய்ந்த ஆராய்ச்சி வாய்ப்புகள் –

- ☐ உயிர்ப் பூச்சியழிப்பு மற்றும் உயிர் உரம் (Biopesticides and Biofertilizer)
- ☐ உடல்நலத்திற்கான / இயற்கைப் பொருட்கள் (மூலிகை தாவரங்கள்)
- ☐ வேளாண் பொருள்களிலிருந்து கால்நடைத் தீவனம் மற்றும் ஊட்ட உணவு
- ☐ வாசனாதி பொருட்கள்/ நுண் ரசாயனம்/ அமினோ அமிலங்கள் மற்றும் விலங்கினக் கழிவிலிருந்து வேதியப்பொருள்கள் (Flavours/Fine Chemicals/ Amino Acids/Nutrient supplements from animal wastes)
- ☐ மரபு மாற்றுகள் (Transgenics)
- ☐ நோய் நிர்ணயம் – நோய்ப் பகுதிகள் (Diagnostics - Disease Markets)

**3. சுற்றுச் சூழல்**

மாநிலத்தில் தோல் மற்றும் ஜவுளித் தொழில்களில் உயிர்த் தொழில்நுட்பப் பொருள்கள் மீது கவனம் செலுத்தப்படும். பிரபல மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் (C.L.R.I) போன்றவற்றுடன் தொழிற்கூட்டு உருவாக்கி, உகந்த உயிர்த் தொழில்நுட்பப் பொருள்கள் உருவாக்க ஊக்கமளிக்கப்படும்.

- ☐ உயிர் உணர்விகளுக்கான நுட்பங்களை உருவாக்குதல்/முறைகள்/கருவிகள் (Methods / Apparatus / Techniques for Bio-Sensors)
- ☐ கழிவு மேலாண்மையில் நுண்ணியின் பயன்பாடு, குணமாற்றம் குறித்து ஆராய்ச்சி.

- உயிர்த் தீர்வு (Bio remedition)
- கழிவுநீர் மற்றும் விண்ணீர் பயன்பாடு (Effluents and waste water)
- நுண்ணுயிர் ஜெர்ம்ப்ளாசம் உட்பட பொதுவான ஜெர்ம்ப்ளாசம் தகவல் களஞ்சியம் தயாரித்தல்

**4. தொழில்துறை தயாரிப்புகள்**

கவனம் செலுத்தவுள்ள பகுதிகள்

- ☐ உணவு மற்றும் தொழில்சார் நொதிகள் (பப்பயின், பைடோஸ், லிபேஸ், என்ஸைம் கலவை போன்றவை) (Food and Industrial Enzymes)
- ☐ உற்பத்தி அதிகரிக்கும் தரமான பாரம்பரிய நொதிப்புப் பொருட்கள் (எதிர் உயிரிகள், நோய்த் தடுப்பு பொருள்கள் போன்றவை) (Classical fermentation products)
- ☐ உயிரிய ஆற்றல் (Bio Energy)
- ☐ வெளித்தோற்றம் / உணவு மற்றும் இதர பொருள்கள் கெடாமல் இருக்க சிறிய அளவில் சேர்க்கப்படும் (preservative) பாதுகாக்கும் பொருள் (Surface and additives)
- ☐ உயிர் பாலிமர்கள் (Bio Polymers)

சுருங்கக்கூறின், வர்த்தக ரீதியாக புதிய வேலைவாய்ப்பையும், பொருளாதார வளத்தையும் உருவாக்க மேற்சொன்ன பிரிவுகளில் எண்ணற்ற சாத்தியக்கூறுகள் உள்ளன. மாநிலத்தில் உள்ள உயிர்வளங்களைக் கொண்டே இந்த சாத்தியக்கூறுகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு அரசு பொருத்தமான நடைமுறைகளையும் கட்டமைப்பு வசதிகளையும் உருவாக்கவுள்ளது.

**(ஈ) உயிர்நுட்பத் தொழில் முனைப்பு மண்டலங்களை (உயிர்ப்பள்ளத்தாக்குகள்) தமிழகத்தில் அமைத்தல்:**

5. மாநிலத்தின் உயிர் வளங்களைப் பயன்படுத்திக்கொள்ளும் பொருட்டு சிலிகன் பள்ளத்தாக்கு போன்று உயிர்நுட்ப தொழில் முனைப்பு மண்டலங்களை (Bio-technology Enterprise Zones), உயிர்ப் பள்ளத்தாக்குகள் (Bio-Valleys) அமைக்க தமிழக அரசு வசதி செய்து தரும். ஆராய்ச்சி நிறுவனங்கள், சேவை நிறுவனங்கள், புதிய பொருள்கள் மற்றும் உற்பத்தி முறைகளை உருவாக்கும் வணிக நிறுவனங்கள் போன்றவை இந்த மண்டலங்களில் செயல்படுவதற்கு ஊக்கம் அளித்திட முயற்சி எடுக்கப்படும். இத்தகைய உயிர்நுட்ப நிறுவனங்களுக்கிடையில் தகவல் மற்றும் அறிவு பரிமாற்றங்களுக்காக இணைப்பு வலை (network) ஏற்பாடுகள் செய்யப்படும்.

6. தமிழ்நாட்டின் வேளாண் – சுற்றுச்சூழல் மண்டலங்களின் உயிர் வளங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் நான்கு உயிர்நுட்ப பூங்காக்களும் (Bio-tech. Park) ஒரு உயிர்த் தகவலியல் (Bio-Informatics) மற்றும் மரபியல்



மையமும் (Genomics Centre) அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. உயிர்நுட்பத் தொழில் முனைப்பு மண்டலங்களின் மையமாக இவை செயல்படும்.

7. அவையாவன :

**(அ) உயிர்நுட்ப உயிர் அறை வளர்ச்சி பூங்கா, சென்னை (Bio technology Incubator Park)**

உயிர்நுட்பப் பூங்காக்களை நிர்வகிப்பதில் மிகுந்த அனுபவம் பெற்ற அமெரிக்கப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து ரூ.40 கோடி செலவில் இந்தப் பூங்கா தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் (TIDCO) நிறுவப்படும். வணிக நிறுவன அடிப்படையில் இது அமைக்கப்படும். வேளாண்மை, மருத்துவம், சுற்றுச்சூழல் மற்றும் தொழில் சார்ந்த உயிர்த் தொழில் நுட்பத்தில் இது கவனம் செலுத்தும். இப்பூங்கா, அங்கு அமையவிருக்கும் தனிநபர் நிறுவனங்களுக்கு, அவர்கள் பொருள்களை உருவாக்குவதற்கும், விற்பனை செய்வதற்கும், தனி உரிமப் பத்திரம் (Patents) பெறவும் உதவி செய்யும்.

**(ஆ) மகளிர் உயிர்நுட்ப பூங்கா, கேளம்பாக்கம்**

சென்னைக்கு அருகில் உள்ள கேளம்பாக்கத்தில் இயங்கிவரும் மகளிர் உயிர்நுட்பப்பூங்காவிற்கு அரசு தொடர்ந்து ஆதரவு தரும். நுண்தொழில் மற்றும் பாரம்பரிய உயிர்நுட்ப முறைகள் ஆகியவற்றில் இந்தப் பூங்கா கவனம் செலுத்தும். உற்பத்தி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் முழு பலன்களையும் அடைவதற்கு, அரசின் முயற்சிகள் தொடரும்.

**(இ) மருத்துவத்தாவரங்கள் உயிர்நுட்பப் பூங்கா (Medicinal Plants Bio- technology Park)**

மதுரைக்கு அருகில் மருத்துவத் தாவரங்கள் உயிர்நுட்பப் பூங்கா ஒன்று அமைக்கப்படும். அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்பட்ட மூலிகை மருந்துகளை உருவாக்குவதற்கான கச்சாப் பொருள்களை விளைவிக்கும் பணியில் இந்தப் பூங்கா ஈடுபடும். பாரம்பரிய மருத்துவ முறைகளின் வளர்ச்சிக்கும் இப்பூங்கா வசதி செய்து கொடுக்கும். கொடைக்கானல் சாலையில், தமிழ்நாடு சிறுதொழில் மேம்பாட்டுக் கழகம் (SIPCOT) உருவாக்கி வரும் தொழிற்பேட்டையில் இந்தப் பூங்கா அமையும். இதற்காக **380** ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, சீரமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் வர்த்தகம் தொடர்பான பணிகளை சிப்காட் மற்றும் டிட்கோ இணைந்து செயல்படுத்தும்.

**(ஈ) கடல்சார் உயிர்நுட்பப் பூங்கா (Marine Bio technology park)**

சுற்றுப்புறச் சூழல் பாதிக்காவண்ணம், சிப்பி வகை மீன்கள் (Oyster, mussel), நண்டு, ஈல் (Eel) உற்பத்தி செய்வதற்காகவும், கடற் தாவரங்களைப் (Sea Weeds) பயன்படுத்துவதற்காகவும் இதர கடற்சார் உணவு தயாரிக்கும் நிறுவனங்களுக்காக, மண்டபம் பகுதியில் ஒரு கடல்சார் உயிர்நுட்பப் பூங்கா அமைக்கப்படும். சதுப்புநிலக் காடுகள் (Mangroves), கடற்புல் போன்றவற்றை பேணிக்காக்கவும், வளர்க்கவும் (Low External Input Sustainable Aquaculture- (LEISA) வழிசெய்யவும் முக்கியத்துவம் தரப்படும். மன்னார் வளைகுடா உயிர்மண்டல அறக்கட்டளையுடன் ஒருங்கிணைந்து இந்த கடல் உயிர் நுட்பப் பூங்கா செயல்படும்.


**உயிர்த் தகவியல் – மரபியல் மையம் (BGC)**

சென்னையிலுள்ள டைடல் பூங்காவில் இந்த மையம் அமையும். இந்திய மரபியல் செல்வத்தை ஆராய்ந்து ஜெர்ம் பிளாச வளத்தை பயன்படுத்திக் கொள்வதற்கு இந்திய உயிர்த்தகவியல் அறிஞர்களையும் குறைந்த செலவில் கிடைக்கக்கூடிய இந்திய மென்பொருள் வளத்தையும் தூண்டுவதற்கு இம்மையம் உறுதுணையாக இருக்கும். ஆராய்ச்சியோடு இந்த மையம், உயிர்த் தொழில்முனைவோர்களுக்கு ஆராய்ச்சி உருவாக்கங்களை வர்த்தக மயமாக்குதல், ஏற்புரைத்தல், ஒப்பந்த தொடர் சேவை, பயிற்சி போன்ற பணிகளையும் மேற்கொள்ளும். இந்த மையம் வணிக ரீதியிலேயே செயல்படும். டைடல் பூங்காவில் கிடைக்கும் போதுமான அளவு அலைவரிசை அளவு (Bandwidth) வசதியை மையம் பயன்படுத்திக் கொள்ளும். இந்த மையத்தை டிட்கோ நிறுவனம் அமைக்கும்.

8. தேசிய உயிர்வள வாரியத்தின் நிதியுதவியுடன் தமிழகத்தில் உயிர் வளங்களைக் கண்டுபிடிக்கும் பணியில் அரசு ஈடுபடும். இதன் விளைவாக உருவாகும் தகவல்தளம், உயிர்த்தகவியல் மற்றும் மரபியல் மையத்தின் மூலம் வெளியாகும்.

**(உ) ஒழுங்கு முறைமை (Regulatory facilitation)**

9. உயிர்நுட்ப நிறுவனம் ஒன்றை அமைப்பது அல்லது ஆராய்ச்சியை மேற்கொள்வது போன்றவை மத்திய அரசின் சட்டதிட்டங்களுக்குட்பட்டது. மறுசேர்ப்பு இனவழிச் சரடு ஆலோசனைக் குழு (Recombinant DNA Advisory Committee), அமைப்பு வழி உயிர் பாதுகாப்பு (Bio safety) குழு (IBSC), மரபியல் மாற்றம் குறித்த மறு ஆய்வுக்குழு (Review Committee on Genetic Manipulation)), மரபு நுட்பவியல் ஏற்புக்குழு (Genetic Engineering Approval Committee) போன்ற அமைப்புகள் தெளிவான வழிமுறைகளை வகுத்துள்ளன. தற்சமயம், மாநில அரசின் அதிகாரம் அமைப்பு வழி, உயிர் பாதுகாப்பு (Bio safety) குழு மற்றும் மாவட்ட அளவிலேயே உள்ளது. மத்திய அமைச்சகங்களுடன் இணைந்து கள ஆய்வுகளின் போது மாவட்ட அளவிலான குழுக்களை அமைத்து செயல்படுவது மட்டுமே. இனி உயிர்நுட்ப திட்டங்களுக்குத் தேவையான ஒப்புதல்களை பல்வேறு மத்திய அரசு அமைப்புகளிடமிருந்து வாங்கித் தரும் பொறுப்புகளை தமிழக அரசு ஏற்று, அனைத்து அங்கீகாரங்களுக்குமான ஒற்றைச் சாளர வசதி உண்டாக்கப்படும். மத்திய அரசின் உயிர்நுட்பவியல் துறையின் ஆலோசனையின்பேரில் இதற்கான தகுந்த தனி அமைப்பு ஏற்படுத்தப்படும்.



10. உலக வணிகக் கழக ஒப்பந்தங்களின் அடிப்படையில் உயிரியல் பொருள்களுக்கான அனைத்து வசதிகளையும் மாநில அரசு உருவாக்கித் தரும். உற்பத்திப் பொருள்கள் காலதாமதத்தினால் சிதைவதைத் தடுக்க, ஏற்புப் பணிகள் துரிதப்படுத்தப்படும்.

**மனிதவள ஆதாரத்தை வலுப்படுத்துதல்**
**(Strengthening of Human Resources Pool)**

11. மாநிலத்தில் கிடைக்கும் உயிர்நுட்ப மனிதவளத்தை மேம்படுத்தும் பணிகளை அரசு தொடங்கும். பல்வேறு பல்கலைக்கழகங்களில் உள்ள உயிரியல் அறிஞர்களுக்கும் உயிர்நுட்ப நிறுவனங்களுக்கும் இடையே கருத்து பரிமாற்றத்துடன் இணைந்து செயல்பட அமைப்பு ரீதியான வசதி உருவாக்கப்படும்.

12. மனிதவள மேம்பாட்டுக்காக அரசு செய்யவிருப்பவை :

- ☐ விஞ்ஞானி / தொழில்நுட்ப தொழில் முனைவோர்களை உருவாக்க ஏதுவாக உதவி பல்கலைக் கழகங்களுக்கும் நிறுவனங்களுக்கும் வர்த்தகச் சமுதாயத்துடன் நல்ல தொடர்பு ஏற்படுத்த விதிமுறைகள் உகந்தவாறு மாற்றியமைக்கப்படும்.
- ☐ பல்கலைக் கழகங்களில் இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்புகளுக்குப்பின் குறுகிய கால உயிர்த் தொழில்நுட்பப் படிப்புகள் அறிமுகப்படுத்தப்படும்.
- ☐ உயிர்நுட்பப் படிப்புகளுக்காக சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.
- ☐ உயிர்த் தகவலியல் துறையில் உருவாகும் தொழில் வாய்ப்புகளைப் பயன்படுத்தி செயல்பட ஏதுவாக அத்துறையில் மனித வளத்தை உருவாக்க உதவும் பயிற்சிகளை அளிக்கும் பிரத்தியேக நிறுவனங்களைத் தர மதிப்பீடு செய்து ஒரு முறை நிதியுதவி அளிப்பதற்கு வழிவகை செய்யப்படும்.

13. இன்னொரு முக்கியமான மனிதவள முதன்மைப் பணி ஏற்கெனவே உள்ள நிறுவனங்கள், ஆய்வு மையங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றின் உயிர்நுட்ப ஆராய்ச்சிப்பணிகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வது ஆகும். தமிழ்நாட்டின் பல்கலைக்கழகங்கள், உயிரியல் நிறுவனங்கள், ஆராய்ச்சி மையங்கள் ஆகியவற்றில் உள்ள உயிர்நுட்ப தகவல்கள், பொருள்கள், ஆராய்ச்சி முடிவுகள், உற்பத்தி முறைகள், கூட்டு ஆராய்ச்சிக்கான வாய்ப்புகள் போன்ற தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கு ஏதுவாக இவை இணைக்கப்படும். இதன் மூலம் உயிர்வளம், நோய் தடுப்பு, களப்பணி தொடர்பாக அறிவும், ஆராய்ச்சி முறைகளும் பரிமாறிக் கொள்ளப்படும்.

**எ. உயிர்த் தொழில்நுட்பத்துக்கான புதிய தொழில்நுட்ப நிதி அமைத்தல் (Establishment of Emerging Technologies fund for Bio-Technology)**


14. ரூபாய் 30 கோடியை தொடக்க நிதியாகக் கொண்டு உயிர் தொழில்நுட்பத்துக்காக ஊக்க மூலதன நிதி, டிட்கோ மூலம் தமிழக அரசு வழங்கும். இந்த நிதி வளரும் தொழில் நுட்பங்களுக்கான நிதி (Emerging technologies fund) என்றழைக்கப்படும். இந்த நிதி முறையாக நிர்வகிக்கப்பட்டு உயிர்நுட்பப் பூங்காக்களுக்கு உள்ளேயும், வெளியேயும்

செயலாற்றும் பெறும் எல்லா உயிர்நுட்பத் திட்டங்களுக்கும் உதவும்.

### ஏ. தமிழ்நாடு உயிர் தொழில்நுட்ப வாரியம் அமைத்தல் (Tamil Nadu Bio Technology Board)

15. திறமைமிக்க உயிர் தொழில்நுட்ப வல்லுநர் ஒருவரின் கீழ் தமிழ்நாடு உயிர் தொழில்நுட்ப வாரியத்தை மாநில அரசு நிறுவும். இந்த வாரியத்தில் மூத்த அரசு அதிகாரிகள், தொழில்துறை பிரதிநிதிகள் மற்றும் உயிர்த் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆகியோர் இடம் பெறுவார்கள். இந்த வாரியம் கீழ்க்கண்ட துறைகளில் தொழில் வளர்ச்சியைக் கொண்டுவர நிலையான ஆலோசனைக் குழுக்களை உருவாக்கும்.

- மருத்துவம் மற்றும் கால்நடை மருத்துவ உயிர்நுட்பம் (Medical & Veterinary Bio-technology)
- உணவு மற்றும் வேளாண் உயிர்நுட்பம் (Food & Agricultural Bio-Technology)
- உயிர்த்தகவலியல் மற்றும் மரபு குறியீட்டியல் (Bio-Informatics and Genomics)
- சுற்றுச்சூழல் உயிர்நுட்பம் (Environmental Bio-technology)



- தொழிலிய உயிர்நுட்பம் (Industrial Bio-technology)

16. தமிழ்நாட்டின் உயிர் வளத்தை – சுற்றுச்சூழல் கெடாத வகையிலும், சமூகம் ஏற்கும் வகையிலும் – பொருளாதார வளமாக மாற்ற மாநில அரசுக்கு இந்த வாரியம் உதவி செய்யும். உயிர்நுட்ப வாய்ப்பு பயிற்சி, மனிதவளமேம்பாடு, தொழில்நுட்ப உள் கட்டமைப்பு, சர்ச்சைக்குரிய உயிர் வளப் பாதுகாப்பு, உயிர் அறிவியல், உயிர்வளக் கண்காணிப்பு ஆகியவற்றில் கொள்கை ரீதியான முடிவுகள் எடுக்கவும் அரசுக்கு வாரியம் உதவி செய்யும். விதிமுறைகளை இயற்றுவதற்கும் இவ்வாரியம் முதன்மையாக இருந்து உதவும். சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு ஏற்ற உயிர்நுட்பம் தொடர்பான, 1992இல் ரியோடி ஜெனிரோவில் நடந்த ஐ.நா. சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சி மாநாட்டில் வெளியிடப்பட்ட, அஜெண்டா–21 என்ற செயல்திட்டத்தின் பிரிவு – 16இல் வரையறுக்கப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில் உயிர் தொழில்நுட்பத் துறையில் தமிழ்நாடு முன்னிலை வகிக்க, தொழில்நுட்பம் மற்றும் நிதி ஆதாரங்களைத் திரட்டும் பணியிலும் இந்த வாரியம் மும்முரமாக ஈடுபடுத்தப்படும். இந்தத் துறையில் முன்னேறியுள்ள பிற நாடுகளுடன் இணைந்து செயலாற்றுவதற்கான வாய்ப்புகளையும் வாரியம் ஆராயும்.

### ஐ. உயிர் தொழில்நுட்பத்துக்கு தொழில்துறை அந்தஸ்து

17. வர்த்தக அடிப்படையில் தொடங்கப்படும் அனைத்து உயிர்நுட்ப நிறுவனங்களும், தொழில் துறை நிறுவனங்களாகவே கருதப்படும். எனவே தொழில்துறைக்கான சலுகைகள் இவற்றுக்கும் கிடைக்கும். தமிழ்நாடு மின்சார வாரியத்தால், தொழில்துறை கட்டணத்திற்கு மின் இணைப்பு வழங்கப்படும். இவையனைத்தும் தமிழ்நாடு உயிர்நுட்ப வாரியத்தின் அங்கீகாரம் மற்றும் சான்றின் அடிப்படையில் வழங்கப்படும்.

18. தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு இணையாக உயிர்த்தகவலியல் நிறுவனங்களுக்கும் F.S.I விதிமுறைகள் அளிக்க அனுமதிக்கப்படும். ★



# மருதாயிக் கிழவியின் காகிதப் பைகள்

☐ சி.மோகன்

மருதாயிக் கிழவியின் உடல் பாயில் சுருட்டப்பட்டு காரின் டிக்கியில் வைக்கப்பட்டது. சிறுத்த குள்ள உடல் வெகு சிரமம் தராமல் அதனுள் பொருந்திக்கொண்டது. அண்ணனும் நானும் முன் இருக்கையில் அப்பாவுடன் அமர்ந்து கொள்ள பின் இருக்கையில் தம்பிகளும் தங்கையும் அம்மாவுடன் உட்கார்ந்து கொண்டார்கள். வண்டியை எடுக்கலாமா என்ற பாவனையில் நாயுடு அப்பாவைப் பார்த்தார். அம்மாவின் சிநேகிதியான பக்கத்து வீட்டு அத்தை அம்மாவுடன் இன்னமும் ஏதோ பேசிக் கொண்டிருந்தார். அப்பா தோளைச் சரித்து முகத்தைத் திருப்பி, கிளம்பலாமா என்று அம்மாவிடம் கேட்டபோது நானும் திரும்பினேன். அம்மா தலையசைத்துவிட்டுச் சுற்றியிருந்தவர்களைக் கும்பிட்டார். கண்களில் நீர் கோத்திருந்தது. சோகச் சாயலையும் மேவி முழு நிறைவில் பொலிவுற்றிருந்தது அம்மாவின் முகம். மருதாயிக் கிழவியின் கடைசி நாட்களைக் கோலாகலமாகக் கொண்டாட விரும்பிய அம்மாவின் ஆசை இந்தக் கார் பயணத்தின் மூலம் பூர்த்தியின் விளிம்பைத் தொட்டுவிட்டிருந்தது.

மருதாயிக் கிழவி முடியாமலிருப்பதாகவும் ஒண்டியாகச் சிரமப்படுவதாகவும் ரொம்ப நாள் தாங்காதென்றும் தகவல் வந்தபோது அம்மா அவரை அழைத்துவந்து கடைசி நாட்களில் சீராட்ட விரும்பினார். அப்போதே காரில் போய் கூட்டி வரத்தான் அம்மாவுக்கு உள்ளூர ஆசை. அப்பாகூட, "வாடகைக்குப் போயிருக்கிற கார் நாளைக்கு வந்திரும், வேண்ணா எடுத்துட்டுப் போயேன்" என்று சீண்டிப் பார்த்தார். "இதுக்கு எதுக்குக் காரும் மோரும், வந்தப்புறம் அத நாலு எடத்துக்குக் கூட்டிட்டுப் போனாப் போதும்" என்று சமாளித்துவிட்டார் அம்மா.

பாட்டி வந்து சேர்ந்த போது அக்கம்பக்கத்தாருக்கு அவர் அதிசயமானார். கறுத்துச் சிறுத்த குள்ள உடலில் முதிர்ந்து காய்ந்த மரப்பட்டையின் செதில்களாயிருந்த தோல் சுருக்கங்களில் வயது குடியிருந்தது. அவர் அம்மாவுக்குத்தான் பாட்டி (அம்மாவைப் பெத்த அம்மாவுடைய அம்மா). ஆனாலும் அம்மா அவரை ஆத்தா என்பார். நாங்கள் பாட்டி என்போம். பாட்டிக்கு அப்போது 100 வயசுக்குக் குறையாது. பாட்டியின் வயதை அக்கம்பக்கத்தாரிடம் அம்மா விவரிக்கும் விதமே அலாதி. அம்மா அப்போது தன் 7 குழந்தைகளையும் பெற்றுவிட்டிருந்தார். மூத்தவனுக்கு வயசு இப்போது 19. அவன்

பிறந்தபோது தனக்கு 20 வயசிருக்கும். ஆக, இப்போ தனக்கு வயசு 40. அம்மாவைப் பெத்த அம்மாவுக்கு அம்மாதான் கடைசி. மூன்றாவதாக அம்மாவைப் பெத்துப் போட்டுவிட்டு அவர் போய்ச் சேர்ந்துவிட்டார். அப்போது அதுக்கு 30 வயசுக்குக் குறையாது. அது இருந்திருந்தால் இப்போ அதுக்கு எப்படியும் 70 வயசிருக்கும். அதோட அம்மாதான் இந்த மருதாயிக் கிழவி. அம்மாவுடைய அப்பா இன்னொரு கல்யாணம் செய்து கொண்ட வகையில் ஏதோ பிணக்குப் பட்டுக் கொண்டு கிழவிதான் தன்னையும் இரு அண்ணன்மார்களையும் வளத்து ஆளாக்கியது. அம்மாவோட அம்மாதான் மருதாயிக் கிழவிக்குக் கடைசி. அது வயத்துல இருக்கும்போது தான் கிடைக்குத் தொலையூர் போன கிழவியின் புருஷன் ஏதோ பொம்பள தகராறுல வெட்டுப்பட்டுச் செத்துப்போனார். அப்போ மருதாயிக் கிழவிக்கு 30, 35 வயசிருக்கலாம். ஊர்ல எவ்வளவோ சொல்லியும் மறுபடியும் வாக்கப்படமாட்டேனுடுச்சாம். எப்படிப் பார்த்தாலும் இப்ப அதுக்கு 100 வயசுக்குக் குறையாது என்பார் அம்மா. இதே கணக்கை அப்பாவுடன் வேலை பார்க்கும் சுந்தரம் இன்ஸ்பெக்டர் மனைவியிடம் சொன்னபோது, கிழவியின் புருஷன் பாம்பு கடித்துச் செத்துப் போனதாகச் சொன்னார். அம்மாவிடம் இதுபற்றிக் கேட்டேன். அந்தப் பொம்பளைக்குக் கெடைக்குப் போறதுனா என்னனு தெரியாது. அத வேற வௌக்கமாச் சொல்லணும். அதான் அப்படிச் சொன்னேன் என்றவர், கூடவே, வர்றவங்க போறவங்ககிட்ட என்ன பேசறேனு வாயப்பாத்துக் கிட்டிருக்காம படிக்கிறதப்பாரு என்றார்.

நூறு வயதுக்குக் குறையாத பாட்டிக்குப் பார்வை இருந்தது. கத்திப் பேச வேண்டிய அவசியமிருக்கவில்லை. கறி மெல்ல முடிந்தது. பாட்டி இருந்த நாட்களில் அம்மா அடுப்படியைக் கொண்டாடினார். பலமுறை பிரியாணி செய்தார். முதல்முறை அம்மா பாட்டிக்குப் பிரியாணி கொடுத்தபோது, "இது என்னாத்தா" என்று கேட்டார் பாட்டி. "இதுதான் பாட்டி பிரியும் ஆணியும்" என்றேன் நான். பாட்டிக்கு அந்தச் சம்பவம் நினைவிலிருந்து நழுவிப்போயிருக்க வேண்டும். மலங்க விழித்தார். "சும்மா இர்ரா" என்று சிரித்தபடியே அதட்டினார் அம்மா.

ஒவ்வொரு தேர்வு விடுமுறையின் போதும் தேர்வு முடிந்த மறுநாள் கிராமத்துக்கு பஸ் ஏறிவிடுவேன். ஊரில் பல வீடு நெருங்கிய சொந்தம் என்றாலும் தனியாக இருக்கும் பாட்டியுடன் தான் தங்குவேன். அதுதான் எங்கள் வீடு என்பதாக இருந்தது. நெருங்கிய உறவினர்கள் வீட்டுக்குப் பாட்டி போவதே இல்லை. தூரத்து உறவைத்தான் கொஞ்சமாவது எட்டிப்பார்க்கும். யாரையும் அண்டாத கிழவி என்று பாட்டிக்குப் பேர் இருந்தது. அதே சமயம் யார் பற்றியும் பாட்டி புகார் சொல்லி நான் கேட்டதே இல்லை. மற்றவர்கள்தான், கிழவி என்ன சொல்லுதுப்பு என்று சீண்டுவார்கள். நான் இடையிடையே சித்தப்பா வீடு, மாமா வீடு, தாத்தா வீடு என்று அவர்கள் சாப்பிடக்கூப்பிடும் போது பாட்டியிடம் சொல்லிவிட்டுப் போவேன். போயிட்டு வாப்பு என்று சகஜமாகச் சொல்வார் பாட்டி. அழகம்மாதான் பாட்டிக்கு ஒத்தாசை. அம்மா ஊருக்கு வரும்போதெல்லாம் அழகம்மாவுக்குச் சேலையும் அவர் குழந்தைகளுக்கு இனிப்பும் வாங்கி வருவார். ஒருமுறை பாட்டி, என்னப்பு வேணும் என்று சமையல் பண்ணக்கேட்டபோது, "பிரியாணி பாட்டி" என்றேன் கேலியாக. "என்னாப்பு" என்று மீண்டும் கேட்டார். ஏதோ ஒரு காரியமாக அச்சமயம் அங்கிருந்த ஆட்டுப்பால்கார தாத்தா, "பேராண்டிக்குப் பிரியாணி வேணுமாம். படப்புலருந்து கொஞ்சம் பிரியும் அப்படியே நாலஞ்சு ஆணியும் இருந்தாக் குடு கௌவி" என்றார். நான் சிரித்தேன். பாட்டிக்குக் கோபம்தான் வந்தது. "பிள்ள என்னமோ கேக்குதே என்னனு கேட்டா வெளங்காத பேச்சு பேசறியே" என்று கோபித்துக் கொண்டார். பிரியாணியை அறிந்திராத பாட்டிக்குப் பிரியாணி ரொம்பவும் பிடித்துப் போய்விட்டது. ஞாயிற்றுக் கிழமைகளில் எல்லோருக்குமாகவும் இடையிடையே பாட்டிக்கென்று கொஞ்சமாகவும், அம்மா பிரியாணி செய்தார். பாட்டி வந்து சேர்ந்த மறுநாள் அவரைப் பார்க்க வந்த டாக்டர் விநாயகம், இன்னும் கொஞ்சநாள் தான் இருப்பாங்க. இதயத்துடிப்பும், நாடித்துடிப்பும் தளந்துபோச்சு, அவங்க ஆசப்பட்டதக் கொடுங்க. ஞாயித்துக்கிழமை மதியம் கிளினிக் முடிஞ்சு போகும்போது பாக்கிறேன். இடையில் ஏதாச்சுமென்றால் சொல்லி அனுப்புங்க என்றார். ஆனால் அதற்கடுத்தும் சில ஞாயிற்றுக்கிழமை அவர் வரவேண்டி இருந்தது.

பாட்டியை எங்கள் காரில் உட்கார வைத்து அழகர்கோவில், திருப்பரங்குன்றம், மீனாட்சி அம்மன் கோவில் என்று கூட்டிப் போகவேண்டுமென்ற அம்மாவுடைய ஆசை மட்டும் கடைசி வரை நிறைவேறவில்லை. பாட்டி வந்த ஓன்றிரண்டு நாளில் நாயுடு கணக்குக் கொடுக்க வந்தபோது, "பிளசரு வந்துருக்குனு பாட்டியக் கூட்டிட்டு வா" என்றார் அம்மா. பாட்டியை அழைத்து வந்தேன். வாசல்படியில் உட்கார்ந்து கொண்டபடி பார்த்தார். "ஒரு ரவுண்டு போயிட்டு வரலாமா பாட்டி என்றார்" நாயுடு. இப்ப "வேண்டாம்பு. கோவிலுக்குப் போகலாம்னு பேத்தி சொல்லுச்சு, அப்ப பாத்துக்கலாம்" என்றார் பாட்டி. வண்டியை நாட்டாமைக் கோனார் வீட்டு முன் விடுவதற்காக எடுத்துப் போகும்வரை பாட்டி பார்த்துக் கொண்டு இருந்தார். அடுத்த முறை வாடகைக்கு வெளியூர் போன கார் சிறு விபத்தில் மாட்டிக்கொண்டது. வண்டிக்கு மட்டும் லேசான சேதம். நாயுடு நாணயமானவர் என்றாலும் குடிகாரர் என்ற விஷயம் அப்போதுதான் அப்பாவுக்குத் தெரியவந்தது. அப்பா நாயுடுவை வேலையை விட்டு நிறுத்தினார். வண்டியை விற்க முடிவு செய்தார். வண்டி சரியாகி வந்த சில நாளில் விற்கும்வரை இருந்துவிட்டுப் போகட்டுமென்று நாயுடுவை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொண்டார். வண்டி ஓட்டத்திலிருந்தால்தான் நல்ல விலை போகும் என்று இந்த ஏற்பாடு. பாட்டி இறப்பதற்கு 2, 3 நாள் முன்பு வண்டி ஓட ஆரம்பித்தது.

காலாண்டு விடுமுறைக்கு – பாட்டி வருவதற்கு 2 மாதம் முன்பாக இருக்கும் – நான் ஊர் போயிருந்த போது, "பிளசரு வாங்கியிருக்கீங்கலாம் அப்பு" என்று ஊர் சனம் ஒருவர் விடாமல் கேட்டது. "ஆத்தாவை அதுல ஒருக்கா வரச் சொல்லுங்கய்யா" என்ற அழகம்மா, "ஆமா, பிளசரு

வர்றதுக்கு இங்க என்ன ரோடா இருக்கு" என்றும் தானாகவே சொல்லிக்கொண்டார். எங்கள் ஊரிலிருந்து பஸ் போகும் சாலைகூடக் கண்ணில் படாது. முக்கு ரோடில் இறங்கினால் 3 மைல் நடை, வெள்ளாமை சமயங்களில் அந்த வழி உதவாது. சாயல்குடியில் இறங்கி நடக்க வேண்டும். 4 மைல் நடை. எது எப்படியோ 6 மாசமே எங்களுடனிருந்த கார், தான் பிரிவதற்கு முன்பாக பாட்டியின் உடலோடு போய் எங்கள் கிராமத்தைப் பார்த்துவிட்டது.

பாட்டி எங்களுடன் கிட்டத்தட்ட ஒன்றரை மாதம்தான் இருந்திருப்பார். அதற்குள் ஒரு விநோதப் பழக்கம் அவரைப் பீடித்திருந்தது. கிராமத்தில் தள்ளாமையிலும் துடியாய் தன் பாட்டையும், வயல்காட்டையும், ஆடுகள் கோழிகளையும் கவனித்துக் கொண்டிருந்தவருக்குத் தனி அறையின் சுற்றுச் சுவர்களில் முட்டித் திரும்பும் குறுகிய பார்வை வெளியில் முடங்கிக் கிடக்க நேர்ந்துவிட்டது காரணமாக இருக்கலாம். ஒரு நாள் காபித்தூள் வாங்கிவந்து அடுப்படியிலிருந்த அம்மாவிடம் கொடுத்தபோது உள்ளறையிலிருந்து, கோவாலு, கோவாலு என்று பாட்டி கூப்பிட்டார். ராக இழுப்போடுதான் பாட்டி எப்போதுமே கூப்பிடுவார். முதல் உச்சரிப்பு, இரண்டாவது உச்சரிப்புக்கு எடுப்பென தணிந்தே இருக்கும். என்ன பாட்டி என்று கேட்டபடியே போனேன்.

"என்னப்பு வாங்கிட்டு வந்த"

"காபித்தூள் பாட்டி"

"பையில போட்டுக் கொடுத்தாங்களா, பொட்டலமாப்பு"

"கவர்லதான் பாட்டி"

"அதக் கொஞ்சம் கொண்டாப்பு"



கண்ணாடித்தாள் கவரைக் கொண்டுபோய் கொடுத்தேன். இன்னமும் அங்கங்கே சில புள்ளிகளாய் கவரில் ஒட்டியிருந்த காபித்தூளைப் பாட்டி உதறியபோது அந்தத் தாளின் சடசடப்பு அவருக்கு விசித்திரமாகப் பட்டிருக்க வேண்டும். விரல்களால் மேலும் சில முறை தட்டி நாசூக்காக உதறியவர், கண்ணாடித் தாளின் சத்தம் கிறுகிறுக்கச் செய்வதுபோல் கண்மூடி லயித்திருந்தார். முகத்தின் தேன்கூட்டுச் சுருக்கங்களில் மெல்லிய அதிசயச் சிரிப்பு ஒடுங்கியிருந்தது. நான் பாட்டியை ஆச்சரியத்தோடு பார்த்தபடி இருந்தேன். பின்னர் தன்னை விடுவித்துக் கொண்டவராக, கவரைத் தலையணை அருகில் வைத்துவிட்டு, "சரிப்பு நீ போய் படி" என்றார். "எதுக்குப் பாட்டி இது" என்றேன். "சும்மாதாம்பு" என்றவர் தலையணை அடியிலிருந்து ஒரு பெரிய காகிதக் கவரை எடுத்தார். அதன் அடிப்பகுதி லேசாக உப்பியிருந்தது. அந்தப் பெரிய கவர், பாட்டி வந்த அன்றே அம்மா எடுத்துவந்த 2 சேலைகள் அடங்கியிருந்த ஜவுளிக்கடை கவர். அம்மா சேலைகள் வாங்கி வந்தபோது, "இதெல்லாம் எதுக்குத்தா, ஒன் பழசத் தந்தா போதாதா" என்றார் பாட்டி. "நாளைக்கு டாக்டரு உன்னப் பாக்க வர்றப்ப புதுசு உடுத்தியிருக்கணும் கிழவி.



-அதுக்குத்தான்" என்றார் அம்மா. அன்று சேலைகள் இருந்த காகிதப் பைக்கும் மருந்துக் கடை கவர், அல்வா கடை கவர் என்று ஏழெட்டு ஒன்றுக்குள் ஒன்றாகவும் தனியாகவும் பொதிந்திருந்தன. காபித்தூள் கவரும் உள்ளே போயிற்று.

பாட்டியின் இந்தச் செயல் எனக்கு மிகவும் வேடிக்கையாக இருந்தது. நான் வெவ்வேறு காலங்களில் தீப்பெட்டிப்படம், ஃபிலிம், ஸ்டாம்ப் என சேர்த்திருந்த போதிலும் பாட்டியின் கவர் சேகரிப்பு விசித்திரமாகவே பட்டது. இனம் புரியா கலக்கமும் ஏற்பட்டது. காலையில் பள்ளிக்கூடத்துக்குத் தனியாகப் போகும்போது அச்சத்தையும், மாலையில் நண்பர்களுடன் திரும்பும்போது கும்மாளத்தையும் விளைவிக்கிற, எங்கள் பள்ளிக்கூடச் சந்து முனையில் அவ்வப்போது தென்படுகிற பைத்தியத்தின் செயல் ஏனோ நினைவுக்கு வந்து கலவரமூட்டியது. அழுக்கும் கந்தையுமாக அலையும் அந்தப் பைத்தியத்தின் கால்சட்டைப் பைகள், மேல்சட்டைப் பைகள், கையிடுக்கு, உள்ளங்கை என எங்கும் காகிதக் கந்தல்கள் பிதுங்கி வழியும். "எதுக்கு பாட்டி சேக்குறீங்க" என்றேன். "சும்மாதாம்பு" என்று லேசாகச் சிரித்தவர், காகிதப் பையை மீண்டும் தலையணைக்கடியில் வைத்துக் கொண்டார். திடீரென, என் இடது கையைப் பிடித்துத் தடவியபடியே, "நேத்து ஒரு கனா கண்டேம்பு" என்றார். அதுல "உன்னக் காணோம்னு வீடே ஆளாப் பறக்குது. உங்காத்தா, கோவாலு, கோவாலு என்று கூப்பிட்டபடியே அங்கேயும், இங்கேயும் ஓடிக்கிட்டிருக்கு. இந்த எடம் மாதிரிதான் இருக்கு நா இருக்கிறது. ஆனாக்க சுத்தி சிறுசும் பெரிசுமாக காயிதப் பைங்க அரிசிமூட்ட கணக்கா தண்டி தண்டியா குவிஞ்சு கெடக்கு. அப்ப, பாட்டி பாட்டினு நீ கூப்பிடற சத்தங் கேக்குது. எங்கடானு பாத்தா ஒரு காயிதப் பை மூட்டைக் குள்ளேருந்து கூப்பிட்டுக்கிட்டிருக்க. அப்படியே நீ கூப்பிட்ட சத்தத்துக்கு முளிச்சுக்கிட்டேம்பு" என்றார்.

கனவில் கவிந்திருந்த வசீகரமும் கலக்கமும் ஒன்றையொன்று மேவி என்னுள் படிந்ததில் நான் எதுவும் பேசாதிருந்தேன். ஆனால், அதன்பிறகு, பாட்டிக்கும் வெற்றுக் காகிதப் பைகளுக்குமான உறவில் என்னையும் சந்தோஷமாகப் பிணைத்துக் கொண்டேன். என் பங்குக்கு அழைப்பிதழ் கவர், அப்பா ஆபீஸ் கவர், தபால் கவர் என்று அவ்வப்போது பாட்டியிடம் கொடுத்தேன். கவர் இருந்தா போட்டுக் கொடுங்க என்று கடைகளில் கேட்டு வாங்கினேன். அதன் மூலம், பீடிக்கட்டு கவர், பாக்கு கவர் எனக் கிடைத்தன. ஏதேனும் பொருள் தீர்ந்து போனதாக அம்மா பேச்சுவாக்கில் சொல்லியிருந்தால், "நான் பள்ளிக்கூடம் விட்டு வந்ததும், ஆத்தா ஏதோ தீந்து போச்சுனு சொல்லுச்சு, என்னனு கேட்டு வாங்கிட்டு வாப்பு" என்று குதூகலிக்கும் அளவு பாட்டியின் மோகம் தீவிரமடைந்தது. பாட்டியின் விசித்திரமான குதூகல உலகில் நானும் கும்மாளமிட்டுக் களித்திருந்தேன்.

பாட்டி இவ்வளவு நாள் இருந்தது விநாயகம் டாக்டருக்கு ஆச்சரியமளித்தது. ஆனால், கடைசியாக வந்த ஞாயிறன்று, அதிகமாப் போனா 2, 3 நாள்தான். அதுக்கேத்த மாதிரி பாத்துக்குங்க என்று அழுத்தமாகச் சொன்னார். அப்போதும் பாட்டியின் உயிர் அதற்கடுத்த ஞாயிறு காலைதான் பிரிந்தது. உயிரின் கடைசிக் குமிழ்கூட தன் முழுப் பாய்ச்சலையும் உடலுக்குத் தந்துவிட்டுப் பிரிந்த வெகு சுபாவமான மரணம் அது.

அந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி போல ஆப்பமும் தேங்காய்ப் பாலும் பாட்டிக்குக் கொடுக்கப்போன

அம்மா, பாட்டி மூச்சுவிட மிகவும் அவஸ்தைப்படுவதைப் பார்த்து, "ஓடிப்போய் டாக்டரைக் கூட்டி வா" என்று என்னை விரட்டினார். எங்கள் வீட்டுச் சந்துமுனை பிரதான சாலையில் சேருமிடத்துக்கு நேரெதிரில் டாக்டரின் கிளினிக். டாக்டர் வந்திருக்கவில்லை. வரும் நேரம் தான். தவிப்போடு வாசலில் காத்திருந்தேன். எங்கள் வீடு தெரியும்படியாக நின்று கொண்டு சந்தையும், டாக்டர் கார் வரக்கூடிய வலப்புற திசையையும் பார்த்துக் கொண்டு நிலை கொள்ளாதிருந்தேன். அடுத்த சில நிமிஷங்களில் டாக்டர் கார் கண்ணில் பட்டது. அவர் காரிலிருந்து இறங்குவதற்கு முன்பாகவே பக்கத்தில் போய் குனிந்து சொன்னேன். காரை நிறுத்திவிட்டு அவர் உள்ளே போனபோது ஏற்கெனவே காத்திருந்த நான்கைந்து பேர் எழுந்து நின்றார்கள். அவர் அறைக்குள் சென்றுவிட்டு உடனே திரும்பியவர், வா, போகலாம் என்று நடந்தார். நாங்கள் நுழைந்தபோது, முன்னறையிலிருந்த அப்பா டாக்டரைப் பார்த்து, முடிஞ்சிருச்சு என்றார். உள்ளறைக்கு டாக்டர் போன போது, அப்பாவும் நானும் கூடப்போனோம். பாட்டியின் தலைமாட்டில் அம்மா உட்கார்ந்திருந்தார். அண்ணன் மட்டும் நின்று கொண்டிருக்க தம்பிகளும் தங்கையும் சுற்றி உட்கார்ந்திருந்தார்கள். பக்கத்து வீட்டு அத்தை அம்மாவுக்குப் பக்கத்திலிருந்தார். நான் அண்ணன் பக்கத்தில் போய் நின்று கொண்டேன். டாக்டர் பாட்டியின் கையை லேசாகத் தூக்கிப் பார்த்துவிட்டு, ''ஆக வேண்டியதைப் பாருங்க. எங்க காரியம் பண்ணப் போறீங்க'' என்று அம்மாவைப் பார்த்துக் கேட்டார். "ஊருக்குத்தான் கொண்டு போகணும்" என்றார் அம்மா. "சந்தோஷமா பாத்துக்கிட்டீங்க, விசேஷமா அனுப்பி வைங்க" என்றார் டாக்டர். அம்மா தலையசைத்தார்.

அடுத்த சில நிமிடங்களில் காரோடு நாயுடு வந்து சேர்ந்தார். காரிலேயே நாட்டாமைக் கோனாரின் மூன்று சம்சாரங்களும் அவருடைய வளர்ப்பு மகனான மாணிக்கம் மாமாவும் வந்திறங்கினார்கள். பெண்கள் மூவரும் அம்மாவைக்கட்டிப்பிடித்து கொஞ்ச நேரம் ஒப்பாரி வைத்தனர். அப்பாவும் மாணிக்கம் மாமாவும் அடுத்து ஆக வேண்டியதைப் பற்றிப் பேசினார்கள். அப்பா அம்மாவைக் கூப்பிட்டு என்னென்ன வாங்க வேண்டும் என்று கேட்டார். அம்மா சொன்னபடி, பூக்கள், மாலைகள், பொறி, வெல்லக்கட்டி எல்லாம் வாங்க மாணிக்கம் மாமா கிளம்பினார். போகும்போது அம்மா, மாணிக்கம் மாமாவிடம், அப்படியே பத்திருபது ரூபாய்க்கு பொடிச் சில்லரையா மாத்திட்டு வாங்க என்றவர், சுடுகாட்டுக்குத் தூக்கிட்டுப் போறபோது, போற வழியெல்லாம் பூவும், வெல்லமும், பொறியும், காசும் தூவிக் கொண்டு போகணும் அதுக்குத்தான் என்றார்.

இருட்டுவதற்குள் ஊர் போய்ச் சேர்ந்துவிட வேண்டுமே என்ற பதட்டத்தில் அப்பா இருந்தார். 1 மணிக்குள் கிளம்பினால்தான் 4.30, 5க்குள் வெளிச்சத்தோடு போய்ச் சேரலாம் என்று அவசரப்படுத்திக்கொண்டே இருந்தார். ஊருக்குள் கார் போகுமா என்ற கவலை வேறு. இப்ப வெள்ளாமை கிடையாது. வயக்காட்டுக்குள்ளே வண்டிப் பாதை இருக்கும். போயிடலாம் என்று அம்மா சொன்னது அவருக்குச் சமாதானமாக இருக்கவில்லை. பாதை கிடையாது. இருட்டிவிட்டால் வேறு வினையே வேண்டாம் என்று பரபரத்துக் கொண்டிருந்தார் அப்பா. எங்கள் ஊரில் அப்போது மின்சாரம் கிடையாது. இது நடந்த சில வருஷங்களுக்குப் பிறகுதான் 100 சதவீத மின்னிணைப்பு என்ற திட்டம் எங்கள் கிராமக் கண்மாய்க்கரை வேப்பமரத்தடியில் ஒரு கம்பத்தை நிறுத்தி 40 வால்ட்ஸ் பல்பு ஒன்றை எரியவிட்டது.

மாணிக்கம் மாமா சாமான்களோடு வந்தார். அக்கம் பக்கத்தார் கூடிவிட்டிருந்தனர். பாட்டியைக் கூடத்தில் கிடத்தினார்கள். பக்கத்து வீட்டு அத்தை அவர்கள் வீட்டிலிருந்து காபி போட்டுக்கொண்டு வந்து எங்கள் எல்லோருக்கும் கொடுத்தார். அதற்குப் பிறகு அம்மா, நாங்கள் போட்டுக் கொள்வதற்கும், கொண்டு போவதற்குமான துணிமணிகளை எடுத்துக் கொடுத்தார். அண்ணனும் நானும் அவற்றை ஒரு பெரிய பையில் வைத்தோம். அம்மா திடீரென நினைத்துக் கொண்டவராக அப்பாவைப் பார்த்து, "பட்டுச் சேலை ஒண்ணு எடுக்கணும்" என்றார். ''ஊர்ல போய் குளிப்பாட்டி சாத்திரதுக்குத்தானே. போற வழியிலே எடுத்துக்கலாம்" என்றார் அப்பா. எல்லோரும் கிளம்ப ஆயத்தமானோம்.

பாட்டியின் உடலை வண்டியில் எங்கே எப்படி வைப்பது என்ற பிரச்சனையை மாணிக்கம் மாமா எழுப்பினார். உடலை வண்டியில் வைத்து நாங்கள் எல்லோரும் உட்கார்ந்து கொள்வதென்பது, எப்படி யோசித்துப் பார்த்தாலும் சரி வரவில்லை. நாயுடுதான் டிக்கியில் வைத்துவிடலாமென்று யோசனை தெரிவித்தார். ஒரு நிமிஷம் சங்கடம் சூழ்ந்து எல்லோரையும் இறுக்கமடையச் செய்தது. அப்பா அம்மாவைப் பார்த்தார். அம்மா ஒன்றும் சொல்லவில்லை. மாணிக்கம் மாமா, டிக்கியைச் சுத்தம் பண்ணி பாயில் வைச்சுடலாம் என்று சொன்னதோடு, நாயுடு, "டிக்கியை சுத்தமாக கிளீன் பண்ணுய்யா" என்றார். அம்மா பாய் கொண்டு வந்து மாமாவிடம் கொடுத்தார். பாயில் பாந்தமாகச் சுருட்டி மாமாவும் நாயுடுவும் பாட்டியின் உடலை டிக்கியில் வைத்தார்கள்.

நான் எங்கள் உடைகள் இருந்த பையைத் தூக்கிக் கொண்டபோது, பாட்டியின் காகிதப் பை நினைவில் தாக்கியது. பாட்டி இருந்த உள்ளறைக்கு ஓடினேன். பாட்டியின் மொந்தையான காகிதப் பை, சிறு குழந்தையின் தலையணை போல, அநாதையாக ஒரு மூலையில் கிடந்தது. பாட்டியின் உடலைக் கூடத்துக் கொண்டு போனபோது, தலையணையடியில் இருந்த அந்தப் பையை யாரோ கையாலோ காலாலோ தள்ளியிருக்க வேண்டும். அதை எடுத்துக் கைகளில் வைத்துக் கொண்டபோது மனமும் கண்களும் கசிந்தன. எங்கே அவனைக் காணோம் என்றபடி அப்பா என்னைக் கூப்பிடுவது கேட்டது. நான் அதை எங்கள் துணிமணிப் பைக்குள் திணித்துக் கொண்டு காரை நோக்கி ஓடினேன்.

– ரகசிய வேட்கை நூலிலிருந்து..
வெளியீடு : அகரம், கும்பகோணம்

● ● ●

நான் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்திற்கு வந்து நிகழ்ச்சியிலே கலந்து கொள்வது இது ஆறாவது முறையாகும். 31.8.1989 அன்று இந்த மருத்துவப் பல்கலைக்கழகத்தின் தொடக்க விழா நிகழ்ச்சிக்கு நான் வந்து கலந்துகொண்டேன். இந்தப் பல்கலைக்கழகம் 1988-ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டாலுங்கூட இதனுடைய தொடக்கவிழா நடைபெறாமலிருந்து நடைபெறக்கூடிய சூழ்நிலையிலே எதிர்பாராத காரணங்களால் நிறுத்தப்பட்டு, பின்னர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் அந்தப் பல்கலைக்கழகத்தை அதே பெயரில் டாக்டர் எம்.ஜி.ஆருடைய பெயரிலேயே அமைக்க வேண்டுமென்ற உறுதி பூண்டு 31.8.89-இல் இந்தியக் குடியரசுத் தலைவரை அழைத்து விழா கொண்டாடி பல்கலைக்கழகத்தைத் தொடங்கி வைத்தோம்.

பின்னர் 1997-ஆம் ஆண்டு நிகழ்ந்த ஏழாவது பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்தும் வாய்ப்பையும் பெற்றேன்.

பின்னர் 1998-ஆம் ஆண்டு நடைபெற்ற எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவில், எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைக்கின்ற அந்த வாய்ப்பையும் பெற்று அந்த விழாவிலும் கலந்து கொண்டேன்.

22.4.1999 அன்று ஒன்பதாவது பட்டமளிப்பு விழா நிகழ்ச்சியில் உரையாற்றுகின்ற வாய்ப்பும் பெற்றேன்.

# தொலை மருத்துவ மையம்

**எம்.ஜி.ஆர். பெயரை மேடையில் சொல்லாதவர்களைக் கண்டித்தேன்**

இதிலே வேடிக்கை என்னவென்றால் அதற்கு முன்பு நான் முதல் அமைச்சர் பொறுப்பையேற்றவுடன் ஒருமுறை ஒரு மருத்துவத்துறை நிகழ்ச்சியிலே கலந்துகொண்ட போது அதிலே கலந்து கொண்ட, ஏன் நம்முடைய அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி உட்பட மற்ற அதிகாரிகள் அனைவருமே இந்தப் பல்கலைக்கழகத்தின் பெயரைக் குறிப்பிட வேண்டிய அவசியம் வந்தபோது அந்தப் பெயரை விட்டுவிட்டே மருத்துவப் பல்கலைக்கழகம் என்றே குறிப்பிட்டார்கள்.

இறுதியிலே நான் உரையாற்றியபோது, அதற்காக அவர்களையெல்லாம் கண்டித்துவிட்டு "இது என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆருடைய பெயரால் அமைக்கப்பட்ட பல்கலைக்கழகம். இதிலே ஆட்சிமாறி விட்ட காரணத்தால் அந்தப் பெயரை மாற்றிவிட முடியாது. அது குறுகிய நோக்கம்" என்று குறிப்பிட்டு எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் என்பதைத் திரும்பத் திரும்பச் சொல்லி பின்னர் 89-ஆம் ஆண்டு இதனுடைய தொடக்க விழாவை நிகழ்த்தினேன்.

**ஏழாவது எட்டாவது முறையும் நான் வந்து கலந்து கொள்வேன்**

பின்னர் 90-ஆம் ஆண்டு இப்பல்கலைக் கழகத்தின் முதல் பட்டமளிப்பு விழாவில் உரை ஆற்றுகின்ற வாய்ப்பைப் பெற்று அதிலே கலந்து கொண்டேன்.

இன்றைக்கு இந்த தொலை மருத்துவ மையத்தைத் தொடங்கி வைக்க, குருதி ஏற்றத்துறையின் புதிய கட்டடத்தைத் தொடங்கி வைக்க நடைபெறும் நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு ஆறாவது முறையாகவும் கலந்து கொண்டிருக்கிறேன். ஏழாவது, எட்டாவது முறையும் கலந்து கொள்வேன் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**தொலை மருத்துவத்திற்கு விரைவில் வேறு பெயர்**

தொலை மருத்துவம் என்பது இன்னொரு அபிப்பிராயத்தை தொலை தூரத்திலிருந்து பெற வேண்டும் என்பதற்காக சூட்டப்பட்டுள்ள பெயர் என்று கருதுகிறேன். தொலைமருத்துவம் என்பதில் தொலை என்பது தூரத்தைக் குறிப்பிடுவதற்காக உள்ளது என்றாலுங்கூட, தொலை என்பது அவ்வளவு நல்ல சொல்லாக எனக்குப் படவில்லை. "விட்டுத் தொலை" என்பதைப் போல - தொலை மருத்துவத்தை விட்டுத் தொலை என்று ஆகிவிடுமோ என்று நான் அஞ்சுகிறேன். எனவே இந்தத் தொலை மருத்துவம் என்பதற்கு மாறாக இன்னொரு பொருத்தமான பெயரைக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. விரைவில் அதை தக்கவர்களோடு கூடிப்பேசி அந்தப் பொருத்தமான பெயரைக் கண்டுபிடித்து அந்தப் பெயர் இதற்குச் சூட்டப்படும்.

- முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்

8-9-2000 அன்று டாக்டர் **எம்.ஜி.ஆர்.** மருத்துவப் பல்கலைக்கழகத்தில் தொலை மருத்துவ மையத்தைத் தொடங்கவைத்தும் குருதியேற்ற மருத்துவத் துறையின் புதிய கட்டடத்தை திறந்துவைத்தும் ஆற்றிய உரை.

**இரண்டு மருத்துவர்கள் - ஒரே கருத்தைச் சொல்லமாட்டார்கள்**

மருத்துவத் துறையிலே இன்னொரு அபிப்பிராயத்தைப் பெறுவது இயல்பு. பெற வேண்டிய அவசியமுண்டு. ஆனால் மருத்துவர்கள் இரண்டு பேர் ஒரே கருத்தைச் சொல்ல மாட்டார்கள். இரண்டு கடிகாரம் ஒரே நேரத்தை எப்படி காட்டாதோ அதைப்போல இரண்டு மருத்துவர்கள் ஒரே கருத்தைச் சொல்லமாட்டார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

உதாரணம் சொல்ல வேண்டுமேயானால் பல ஆண்டுகளுக்கு முன்பு என்னுடைய சின்ன மருமகன் செல்வத்திற்கு இதய நோய் வந்து சென்னை பொது மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டிருந்தான். அப்போது நான் முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கிறேன். அந்த நேரத்தில் நான் மதுரையிலே இருக்கிறேன். இங்கே நம்முடைய வீராசாமி போன்றவர்கள் மற்றும் அமைச்சர்கள் வாதாடினார்கள் என்று கேள்விப்பட்டேன். உள்ளே நோயாளி இருக்கிறார். அவர் தூங்க வேண்டும் என்பதற்காக வெளியே அமர்ந்து டாக்டர்கள் எல்லாம் பெத்தடினா அல்லது வேலியமா அல்லது வேறு மருந்தா என்று மாநாடு நடந்து அதிலே எந்த முடிவும் ஏற்படாமல் சச்சரவுதான் ஏற்பட்டது என்ற அந்த சூழ்நிலையிலே, செவிலி (நர்ஸ்) செல்வத்தின் அறையிலிருந்து வெளியே வந்தார்.

நோயாளி எப்படியிருக்கிறார் என்று அவரிடம் டாக்டர்கள் கேட்ட போது அவர் தூங்கி அரைமணி நேரம் ஆகிறது என்று சொன்னார்.

**பாஸ்டனிலிருந்து கருத்துக்களை பெறக்கூடிய வகையில் விஞ்ஞானப் புதுமை**

தூங்குவதற்கு என்ன மருந்து கொடுக்கலாம் என்று டாக்டர்கள் யோசித்துக் கொண்டிருந்தபோது நோயாளி



எல்லாம் அவருடைய உடல் நிலையைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**செல்வத்தை தூங்க வைக்க டாக்டர்கள் நடத்திய "மாநாடு"**

ஒருநாள் இரவு கொஞ்சம் நோய் அதிகமாக ஆகி நிலைமை கவலைக்கிடமாக இருந்தபோது செல்வம் தூங்க வேண்டுமென்று டாக்டர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். அந்த நேரத்தில் தூங்குகின்ற ஓய்வு அளிக்க வேலியம் என்ற மாத்திரையைக் கொடுக்கலாமா? அல்லது பெத்தடின் ஊசி போடலாமா என்ற இருவேறு கருத்துக்களுக்காக இரண்டு மணி நேரம் டாக்டர்கள் எல்லாம் தூங்கி விட்டார். இது என்னுடைய வாழ்க்கையிலே நான் அறிந்த ஒரு நிகழ்ச்சி. இப்படியேதான் எல்லா மாற்று யோசனைகளும், மாற்றுக் கருத்துக்களும் இருக்குமென்று எண்ண வேண்டாம்.

பாஸ்டன் போன்ற இடங்களிலிருந்து மருத்துவத் துறையிலே தேவைப்படுகின்ற கருத்துக்களை உடனடியாகப் பெறக்கூடிய பலன் இன்றைக்கு ஏற்படுகின்றது. அத்தகைய விஞ்ஞானப் புதுமை ஏற்பட்டுள்ளது.

இது எப்படி வந்தது என்பதற்கான காரண காரிய விளக்கங்களையெல்லாம் தம்பி பாலு அவர்கள் இங்கே விவரித்தார்கள். அந்த அளவிற்கு நான்

அவைகளையெல்லாம் படிக்கவில்லை. அவர் இதற்காகவே படித்துக் கொண்டு வந்திருக்கிறார், எப்பொழுது எங்கெங்கே இதை ஆரம்பித்தார்கள் என்று நான் இன்று அவசர வேலையாக பெங்களூர் சென்றுவிட்டு வந்த காரணத்தால் அதையெல்லாம் படித்துக் கொண்டு வரவில்லை.

**தொலை மருத்துவம் பயன்படுத்தப்படும் இடங்கள்**

இந்தத் தொலை மருத்துவம் பயன்படுத்தப்படுகின்ற இடங்கள் தொலைத் தொடர்பு வழி ஆலோசனைகள் (Teleconsultations) இரண்டாவது கருத்து தேவைப்படும் அவசரச் சிகிச்சைகளுக்கு இந்த மருத்துவம் பயன்படுகிறது என்பது மிக முக்கியமான ஒன்றாகும்.


தொடக்க நிலையில் மருத்துவப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், செவிலிப் பயிற்சியாளர்களுக்குப்

மருத்துவ நிர்வாகம் (Medical Administration) என்பதில் மருத்துவப் பணிகளில் நிர்வாகத் தேவைகளை ஈடு செய்திட தொலை மருத்துவம் பயன்படுகிறது.

மருத்துவ ஆராய்ச்சிகள் (Research) என்பதில் மருத்துவம் தொடர்பான ஆய்வுப் பணிகளுக்குத் தேவைப்படும் புள்ளி விவரங்களைப் பராமரிப்பதற்கும், புள்ளி விவரங்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் தொலை மருத்துவம் பயன்படுகிறது.

**இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் தொலை மருத்துவம் அறிமுகமாகிறது**

எனவே இப்படி எல்லா வகையிலும் பயன்படுகின்ற இந்த மருத்துவத்தை இன்றைக்கு இந்தியாவிலே நம்முடைய தமிழகத்திலே முதன்முதலாக அரசின் சார்பிலே இந்தப் பல்கலைக்கழகத்திலே அறிமுகப்படுத்துவது




பயிற்சி அளிப்பதற்கும் தொலை மருத்துவம் பயன்படுகிறது என்றும் கூறப்படுகிறது.

கிராமப் புறங்களில் பணியாற்றும் மருத்துவர்கள், வல்லுநர்களின் கருத்தறிய விரும்பும் போது தொலை மருத்துவம் பயன்படுகிறது என்றும் சொல்லப்படுகிறது.

வீடுகளில் மருத்துவம் (Home Health) என்பதில் தொழில் நுட்பம் நவீன மயமாகி வருதலால், தொடர் மருத்துவச் செலவினைக் குறைப்பதற்கு வீடுகளில் மருத்துவப் பணிகளை மேற்கொள்ள தொலை மருத்துவம் பயன்படுகிறது.

உள்ளபடியே நான் பெருமிதம் கொள்கின்ற ஒரு நிகழ்ச்சியாகும். அதற்கு உதவிகரமாக இருந்த துணை வேந்தர் ஆனந்தக்கண்ணன் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் இதயமார்ந்த பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரத்தத்தின் மூலம் பரவுகின்ற நோய்களைத் தடுக்கவும் அவைகளைக் கட்டுப்படுத்தவும் இரத்தம் சுத்தமாக ஆக்கப்பட வேண்டும், தூய்மையாக ஆக்கப்பட வேண்டும். உயிர் காக்கக் கூடிய இரத்தத்தை, சரியாகச் சோதனை செய்து செலுத்தப்படவில்லை என்றால் அது மேலும் பயங்கரமான நோய்களை உருவாக்குவதற்குக் காரணமாகி விடும்.

இன்றைய சூழலில், எய்ட்ஸ் நோய் உலகை பயமுறுத்திக் கொண்டுள்ளது. அந்த நோய்க்குக் காரணமான எச்.ஐ.வி.கிருமி பரவுவதற்கும், அதைப் போலவே மஞ்சள் காமாலை போன்ற பல கொடுமையான நோய்களுக்குரிய கிருமிகள் பரவுவதற்கும் இரத்தம் காரணமாக அமைய வாய்ப்புகள் நிறைய உள்ளன.

**தேர்ச்சி பெற்ற வல்லுநர்களைப் போதிய அளவில் உருவாக்க பட்ட மேற்படிப்பு**

எனவே, தரமான இரத்தத்தைத் தேவைக்கேற்ப, தகுந்த முறையில் கொடுப்பதற்கு இந்தத் துறையில் தேர்ச்சி பெற்ற வல்லுநர்களைப் போதிய அளவில் உருவாக்கவே, பட்ட மேற்படிப்பை இப்பல்கலைக்கழகம் அறிமுகப் படுத்துகிறது.

இந்தத் துறையில் ஆய்வு மேற்கொள்ளவும் முன்னேறி இருக்கும் மற்ற துறைகளுக்கு ஈடாக செயல்படவும் இந்தத்துறை உருவாக்கப்படுகிறது என்பதை நான் அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

உயிர் வாழுகின்ற ஒவ்வொரு உடலுக்கும் இன்றியமையாத திரவம் இரத்தமாகும். இதன் பணிகள் மிகவும் மகத்தானவை. திசுக்களுக்கு பிராண வாயுவை அளிப்பது, உடலின் நோய் எதிர்ப்புச் சக்திக்குரிய அணுக்களைச் சுமப்பது, இரத்தப்போக்கை நிறுத்தி இரத்தத்தை உறையச் செய்யும் அணுக்களைச் சுமப்பது, உடலுக்குத் தேவையான புரதச் சத்துக்களையும் உப்புச் சத்துக்களையும் விநியோகிப்பது போன்ற பணிகளை இரத்தம் செய்கிறது.

**தமிழக அரசின் உதவியுடன் - அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் ரத்த வங்கி**

எனவே இரத்த வங்கி என்பது ஒருவரிடம் இருந்து தானமாகப் பெறும் இரத்தத்தினை வகைப்படுத்தி, நோய்க் கிருமிகள் இல்லாதவாறு பரிசோதித்து முறையாகத் தேவைப்படுவோருக்குக் கொடுப்பதற்கு உள்ள எல்லாவிதமான வசதிகளையும் இந்த வங்கி கொண்டிருக்கும். நமது தமிழக அரசின் உதவியுடன் இத்தகைய ரத்த வங்கிகள் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் அமைக்கப்பட்டுச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இதுவும் சிறப்பாகச் செயல்படும் என்கின்ற என்னுடைய நம்பிக்கையை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த விழாவில் நம்முடைய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் வீராசாமி அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். மருத்துவக் கல்லூரி மற்றும் பல் மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கெல்லாம் கணினி மற்றும் இணையப் (இண்டர்நெட்) பயிற்சி அளிக்க இந்த ஆண்டு முதல் ஆணையிடப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள்.

**மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்குக் கணினி பயிற்சி அளிக்கும் திட்டம்**

இந்த ஆண்டு முதல் அனைத்து அரசு மருத்துவக் கல்லூரிகளிலும், பல் மருத்துவக் கல்லூரிகளிலும் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 56 இலட்சம் செலவில் கணினிப் பயிற்சி அளிக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்தப் பயிற்சியில் ஐம்பது மணி நேரம் கருத்தியல் பாடமும் (தியரி) நூறு மணி நேரம் நடைமுறைப் பயிற்சியும் (பிராக்டிகல் டிரெயினிங்) அளிக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கான ஆணை நேற்றைய தினம் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியையும் நான் இங்கே அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய துணை வேந்தர் ஆனந்தக் கண்ணன் அவர்கள் இரண்டு மூன்று கோரிக்கைகளை இங்கே வைத்து எளிய கோரிக்கை, இனிமையான கோரிக்கை என்றெல்லாம் சொன்னார்கள். கோரிக்கை வைப்பவர்களுக்கு இனிமையாகத்தான் இருக்கும். அதனை ஏற்பவர்களுக்குத்தான் அதன் கஷ்டம் தெரியும். கஷ்டம் இருந்தாலும்கூட நிச்சயமாக அந்தக் கோரிக்கைகள் ஏற்கப்படும். அவைகள் நிறைவேற்றப்படும் என்ற உறுதியை துணை வேந்தர் அவர்களுக்குத் தெரிவித்து அமைகிறேன்.★

## நாக்குக்கு உள்ள பெருமை

ஊரில் உள்ள அறிஞர்களுக்கு விருந்து வைக்க எண்ணினான் அந்த ஊர் தலைவன். அடிமை ஈசாப்பைக் கூப்பிட்டு, நல்ல கறி வாங்கி வந்து, சுவையாக சமைக்கும் படி கட்டளையிட்டான். ஈசாப் பணமும் பையும் எடுத்துக் கொண்டு கறிக் கடைக்குச் சென்றான். அங்கு கிடைத்த நாக்குகளை எல்லாம் வாங்கி வந்து நன்கு சமைத்து வைத்தான்.

அறிஞர்கள் வந்து கூடினர். விருந்து தொடங்கியது. நாக்குக் கறி பரிமாறப்பட்டது. "மிக நன்றாய் இருக்கிறது" என்று கூறி, சுவைத்துச் சாப்பிட்டார்கள். திரும்பவும் கறி கேட்டனர்.

மறுபடியும் நாக்குக் கறியே பரிமாறப்பட்டது. அது விருந்தினருக்கு வியப்பாக இருந்தது. "வேறு கறி இல்லையா?" என்றார்கள். தலைவன் ஈசாப்பை அழைத்துத் திட்டினான். "நல்ல கறி வாங்கிவந்து சமைக்கச் சொன்னேனே; நாக்குக் கறி மட்டுமே வாங்கி வந்திருக்கிறாயே?" என்றான் தலைவன். அப்போது, ஈசாப், "நாக்குகளைவிட நல்லது எது? கல்வி கற்கக் கருவியாயிருப்பது நாக்கு; அறிவுரை அளிப்பது நாக்கு; நாக்கால் தானே உலகில் நல்ல செயல்கள் எல்லாம் நடைபெறுகின்றன. நாக்கு இல்லாவிட்டால், வாழ்க்கை ஏது?" என்றான். எல்லோரும் ஈசாப்பின் அறிவைப் பாராட்டி விட்டுக் கலைந்து சென்றனர். ★

இங்கே நடைபெறுகின்ற இந்தப் பெருவிழாவில் 49 கோடி ரூபாய்க்கான வளர்ச்சிப் பணித் திட்டங்கள், நலத்திட்ட உதவிகள் அனைத்தும் வழங்கப்பட இருக்கின்றன. 15 கோடியே 39 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவில் 17 ஆயிரத்து 342 பயனாளிகளுக்குப் பல்வேறு துறைகள் மூலம் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. அடையாளமாக ஐந்தாறு பேர்களுக்கு மாத்திரம் மேடையிலே அவைகள் வழங்கப்பட்டன. பின்னர் அதிகாரிகள் மூலமாக அனைவருக்கும் இந்த உதவிகள் போய்ச் சேரும்.

21 கோடியே 22 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் 1,235 புதிய கட்டடங்களுக்கும், திட்டங்களுக்கும் அடிக்கற்கள் நாட்டப்பட உள்ளன. 12 கோடியே 59 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 157 கட்டடங்களும் நிறைவேற்றப் பட்டுள்ள திட்டங்களும் திறந்து வைக்கப்பட்டுள்ளன. எனவே இந்தத் திட்டங்களோடு பாசனத்திட்டப்பணிகள் தேவையான அத்தியாவசியமான பாசனத் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்த தொகை 568 கோடி ரூபாய். இந்த ஆட்சியில் பாசனத் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்த தொகை 1,902 கோடி ரூபாய்.

அந்த 568 கோடியில் அடிக்கல்லோடு நின்று போன திட்டங்களும் பல உண்டு. ஆனால் 1,902 கோடியில் இந்த அரசு ஒதுக்கீடு செய்த தொகை பாசனத் திட்டங்களுக்காக பெரும்பகுதி செலவு செய்யப்பட்டு எஞ்சியுள்ள தொகையும் இன்னும் சில மாதங்களில் நிறைவேற்றப்பட இருக்கின்றன.

சிறுபாசனத் திட்டங்களுக்காக அனுமதி வழங்கியதில் கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் அனுமதி வழங்கப்பட்ட சிறுபாசனத் திட்டங்களின் எண்ணிக்கை 57. இந்த அரசு நான்காண்டு காலத்தில் சிறுபாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட முனைந்து நிறைவேற்ற அனுமதி வழங்கிய திட்டங்களின் எண்ணிக்கை 88.

# மோர்தானா அணை

என்ற முறையில் உங்களுடைய நீண்டகால கனவான மோர்தானா அணையின் திறப்பு விழாவும் நடைபெற்றிருக்கிறது.

**பாசனதிட்டப் பணிகள் : ஒரு ஒப்பீடு**

பாசனத் திட்டப் பணிகளை நிறைவேற்றுவதில் தம்பி துரைமுருகன் இங்கே ஒரு ஒப்பீடு காட்டினார். ஒரு ஒப்பீடு மாத்திரம் அல்ல, கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் நடைபெற்ற திட்டங்களின் ஒப்பீடும் இந்த இன்னும் ஐந்தாண்டு நிறைவு பெறாத நான்காண்டு கால ஆட்சியில் நடைபெற்றுள்ள திட்டங்களின் ஒப்பீடும் கூர்ந்து நோக்கத்தக்கவை.

கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் தமிழகத்தில் பாசனத்திட்டங்களுக்காக விவசாயிகளுக்குத்

பாசனத் திட்டங்களால் பயனடைந்த நிலப்பரப்பு என்று எடுத்துக் கொண்டால் கடந்த ஐந்தாண்டுகளில் பாசனத் திட்டங்கள் மூலம் பயனடைந்த நிலம் 11 ஆயிரத்து 809 எக்டர் இந்த நான்காண்டு காலத்தில் நிறைவேற்றியுள்ள பாசனத் திட்டங்களின் பயனாக பயன்பெற்றுள்ள


**வேலூர் மாவட்டம் குடியாத்தம் வட்டத்தில்<br>ரூ.100 கோடி செலவில் கட்டப்பட்ட<br>மோர்தானா அணையை 2–9–2000 அன்று<br>திறந்துவைத்து<br>முதலமைச்சர் கலைஞர் அவர்கள்<br>ஆற்றிய உரையிலிருந்து...**

நிலங்களின் அளவு 40 ஆயிரத்து 33 எக்டர். இந்த வேறுபாட்டை நீங்கள் புரிந்து கொள்வீர்களேயானால் நான் இதை ஒன்றும் அரசியல் காரணங்களுக்காக பயன்படுத்த விரும்பவில்லை. இந்த நான்காண்டு காலத்தில் இந்த ஆட்சி விவசாயப் பெருங்குடி மக்களுக்காக இந்தத்துறையிலும் தனது கவனத்தைப் பெரிதும் செலுத்தியிருக்கிறதே என்பதை தெரிவிப்பதற்காகவே இதை நான் குறிப்பிட்டேன்.

மோர்தானா அணை கட்டி முடிக்கப்பட்டதன் பயனாக குடியாத்தம் வட்டத்தில் பதினைந்து கிராமங்களும், காட்பாடி வட்டத்தில் 16 கிராமங்களும், வேலூர் வட்டத்தில் 19 கிராமங்களும் ஆக மொத்தம் 50 கிராமங்களில் உள்ள 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலம் பாசன வசதி பெறக்கூடிய ஒரு ஆதாயத்தை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அளித்திருக்கிறது. இதன் காரணமாக ஏறத்தாழ நான்காயிரம் விவசாயக் குடும்பங்களுக்கும், ஏறத்தாழ பத்தாயிரம் விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கும் பயன் ஏற்படும் என்று புள்ளி விபரம் கூறுகிறது. இந்தப் பயனை விளைவிக்கக் கூடிய திட்டத்தைத்தான் இன்று உங்கள் முன்னால் உங்கள் வாழ்த்துக்களோடு, உங்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தோடு நான் இங்கே திறந்து வைத்திருக்கிறேன்.

இங்கே நண்பர் ஞானசேகரன் குறிப்பிட்டார். 1962–ஆம் ஆண்டு வாக்கிலே பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் இதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது என்று குறிப்பிட்டார். ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு இந்த ஆட்சியில் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது என்றால், காமராஜர் ஆட்சியில் தொடங்கப்பட்ட நல்ல திட்டங்களை எல்லாம் இந்த காமராஜர் ஆட்சி தொடர்ந்து நடத்தும் என்பதற்கு இது ஒரு நல்ல சான்று என்பதை என்னுடைய நண்பர் ஞானசேகரன் அவர்களுக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.


காமராஜர் அடிக்கல் நாட்டியதாயிற்றே என்பதற்காக நாங்கள் விட்டுவிடவில்லை. இடையிலே வந்தவர்கள் விட்டுவிட்டார்கள். ஆனால் நாங்கள் காமராஜர் அடிக்கல் நாட்டிய திட்டம் ஆயிற்றே அதை வீண் போக விடக்கூடாது என்ற அந்த மன உறுதியோடு அந்த பெருந்தலைவருக்குப் பெருமையளிக்கக் கூடிய வகையில் இந்தத் திட்டத்தை இன்றைக்கு நாங்கள் நிறைவேற்றி வருகிறோம் என்பதை நண்பர் ஞானசேகரன் அவர்களும் உணருவார். அதனால்தான் அவர் இதைக் குறிப்பிட்டார் என்றே கருதுகிறேன்.



1990–ஆம் ஆண்டு நான் மூன்றாவது முறையாக முதலமைச்சராக இருந்தபோது அதற்கு முன்பே 1972–ஆம் ஆண்டில் இதற்கு, காமராஜருக்குப் பிறகு இரண்டாவது முறையாக அடிக்கல் நாட்டப்பட்டது. இதைத் தொடங்கி வைக்கப்பட வேண்டும் என்று அடிக்கல் நாட்டப்பட்டு அதன் பின்னர் ஆட்சி 1976–

ஆம் ஆண்டு கலைக்கப்பட்டுவிட்ட காரணத்தால் இந்தத் திட்டம் தொடராமல், பின்னர் மூன்றாவது முறையாக நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அந்தக் காலக்கட்டத்திலே 90–91–ஆம் ஆண்டு பட்ஜெட்டில் நான் அறிவித்தேன். இந்தத் திட்டம் மீண்டும் தொடங்கப்படும் என்று கூறினேன்.

ஆனால் அது என்னவோ, மோர்தானாவிற்கும் எங்கள் ஆட்சிக்கும் உள்ள ராசி இதை அறிவித்தாலே உடனடியாக ஆட்சி கலைக்கப்பட்டுவிடும். முதல் முறையும் அப்படித்தான் கலைக்கப்பட்டது. இரண்டாவது முறையும், 90–ஆம் ஆண்டு அறித்தேன். 91–இல் ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. இப்போது மீண்டும் இதை அறிவித்து தொடர்ந்து நடத்தி என்னுடைய அருமைத் தம்பி, பொதுப்பணித்துறை அமைச்சர் துரைமுருகனின் அயராத முயற்சியினால் இந்தத் திட்டத்தை மிக வேகமாக நேர்த்தியாக இன்றைக்கு கட்டி முடித்து, இன்னும் கால்வாய்கள் மாத்திரம் பாக்கியிருக்கிறது



என்றாலும் கூட அகைளையும் ஓராண்டு காலத்திற்குள்ளாக செய்து முடித்துவிடக் கூடிய அளவிலே திட்டத்தைத் தயாரித்து இந்தத் திட்டத்தை மிகச் சிறப்பாக அவர் நிறைவேற்றிக் காட்டியிருக்கிறார். எனவே தம்பிக்கு உங்கள் அனைவரின் சார்பாக பாராட்டுக்களையும், நல்வாழ்த்துக்களையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தினுடைய அணைக்கட்டு கட்டுமானப் பணியின் மதிப்பீடு ஏறத்தாழ 48 கோடி ரூபாய். கால்வாய் அமைக்கும் திட்டத்தின் மதிப்பீடு 53 கோடி ரூபாய். ஆக மொத்தத் திட்டச் செலவு 101.58 கோடி ரூபாய்.

இந்த அரசு பொறுப்பேற்று தம்பி துரைமுருகன் இங்கே சுட்டிக்காட்டிய பல அணைக்கட்டுத் திட்டங்களை, நீர்ப்பாசனத் திட்டங்களையெல்லாம் இங்கே அடுக்கடுக்காக சொல்லிக் காட்டினார். அவருடைய நினைவாற்றலுக்கு மாத்திரம் அல்ல. செயலாற்றலுக்கும் இது ஒரு எடுத்துக்காட்டு.

அந்தத் திட்டங்கள் அன்னியில் நான் மீண்டும் பொறுப்பேற்றவுடன் 89–90–இல் சில திட்டங்கள் தொடங்கப்பட்டன. உலக வங்கியின் உதவியோடு, நீர்வள ஆதார தொகுப்புத் திட்டம் என்று அதற்குப் பெயர் (Water Resources Consolidation Project under World Bank Scheme) இப்படி ஒன்பது பாசனத்திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அந்த ஒன்பது பாசனத் திட்டங்களில் ஒன்றுதான் இன்று திறக்கப்பட்டுள்ள இந்த மோர்தானா அணைக்கட்டுத் திட்டமும்.

இதைத் தவிர நெல்லை மாவட்டத்தில் இராதாபுரம் வட்டத்தில் 14 கோடியே 93 இலட்சம் மதிப்பீட்டில் நம்பியார் நீர்த்தேக்கம், குமரி மாவட்டம் தோவாளை வட்டத்தில் 7 கோடியே 81 இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பொய்கை ஆறு நீர்த் தேக்கத் திட்டம், நெல்லை மாவட்டத்தில் செங்கோட்டை வட்டத்தில் 57

கோடியே 53 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் அடவிநயினார் கோயில் நீர்த் தேக்கத் திட்டம், நாங்குனேரி வட்டத்தில் 17 கோடியே 69 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் கொடுமுடி ஆறு நீர்த் தேக்கத்திட்டம், நாங்குனேரி வட்டத்தில் 38 கோடியே 19 இலட்ச ரூபாய் செலவில் வடக்கு பச்சையாறு நீர்த்தேக்கத் திட்டம். விருதுநகர் மாவட்டம் திருச்சுழி வட்டத்தில் 2 கோடியே 54 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் கிருதுமால் நதி நீர்த் தேக்கத் திட்டம், தேனி மாவட்டம் பெரியகுளம் வட்டத்தில் 26 கோடியே 90 இலட்ச ரூபாய் செலவிலே சோத்துப்பாறை நீர்த்தேக்கத்திட்டம், வேலூர் மாவட்டம் குடியாத்தம் வட்டத்தில் ஒரு கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் ராஜதோப்பு, கானாறு நீர்த்தேக்கத் திட்டம். ஆகிய திட்டங்களின் கட்டுமானப் பணிகளும் மிக வேகமாக நடைபெற்று வருகின்றன.

இந்த ஒன்பது பாசனத் திட்டங்களின் மூலம் மொத்தம் பதினைந்தாயிரத்து 39 ஹெக்டர் நிலம் கூடுதலாக பாசன வசதி பெறும். இப்போது கட்ட வேண்டிய அல்லது கட்டப்பட இருக்கிற திட்டங்களெல்லாம் மிகப் பிரமாண்டமான பெரிய அணைக்கட்டுத் திட்டங்கள் அல்ல. அப்படிப்பட்ட பிரமாண்டமான திட்டங்களெல்லாம் வெள்ளைக்காரன் காலத்திலேயே பல திட்டங்கள் கட்டி முடிக்கப்பட்டு நடைமுறைக்கு வந்துவிட்டது. அதற்குப் பிறகு வந்த காங்கிரஸ் ஆட்சியிலும், சில பெரிய அணைக்கட்டுத் திட்டங்கள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. நடுத்தரத் திட்டங்கள் சிறிய சிறிய பாசனத்திட்டங்கள் என்றாலும் கூட பத்தாயிரம் பேருக்கு, ஐந்தாயிரம் விவசாயிகளுக்குப் பயன்படக்கூடிய அளவிலே உள்ள திட்டங்களையெல்லாம் நாம் மறந்துவிடக் கூடாது. அவைகளையெல்லாம் சிறு துளி பெரு வெள்ளம் என்பதைப்போல நிறைவேற்றினால் தான் எல்லா விவசாயிகளும் பயன்பெற முடியும் என்ற எண்ணத்தோடு அந்தத் திட்டங்களை யெல்லாம் இன்றைக்கு இந்த அரசு நிறைவேற்றி வருகிறது.

இந்த அரசு நல்ல காரியங்களைச் செய்கிறது என்ற அந்த எண்ணம் உங்களுக்கும் இருக்கின்றது என்ற காரணத்தினாலே தான் இந்த விழாவிற்கு நான் இன்று காலையிலே சென்னையிலிருந்து புறப்பட்டு இங்கே வருகின்ற வரையிலே சாலையின் இருமருங்கிலும் ஏராளமான பொது மக்கள் உழவர்கள், தொழிலாளத் தோழர்கள், மாணவர்கள், ஆசிரியப் பெருமக்கள், இளைஞர்கள், அருமைத் தாய்மார்கள், சகோதரிகள் என்னை வாழ்த்தி வரவேற்றனர். அதைப்போல இங்கேயும் பல்லாயிரக்கணக்கிலே நீங்கள் குழுமியிருந்து என்னை வாழ்த்தி வரவேற்கிறீர்கள் என்றால் ஏதோ என்னுடைய ஆட்சிக் காலத்தில் இந்த நான்கு முறை பொறுப்பேற்ற ஆட்சிக் காலத்தில் என்னால் இயன்றதை உங்களுக்குச் செய்திருக்கிறேன். இன்னும் செய்ய வேண்டியவை இல்லாமல் இல்லை.

இங்கே நண்பர் ஞானசேகரன் சுட்டிக்காட்டியதைப் போலவும் மத்திய அமைச்சர் சண்முகம் அவர்கள் இங்கே கோரிக்கை வைத்ததற்கு இணங்கவும் இன்னும் பல காரியங்கள் நிறைவேற்றப்பட வேண்டியவை இருக்கின்றன. ஆறு கோடி மக்கள் வாழ்கின்ற இந்த மாநிலத்தில் எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் செய்து முடித்து விட முடியுமென்பது இயலாத காரியம். யாராலும் முடியாது. அலாவுதீனின் அற்புத விளக்கைக் கையிலே வைத்திருந்தாலும் கூட அதைச் செய்து முடிக்க முடியாது.

ஏனென்றால் பெரிய நிலப்பரப்பு இது. பெருவாரியான மக்கள் தொகையைக் கொண்ட மாநிலம் நம்முடைய மாநிலம். இந்த மாநிலம் இந்தியாவிலே இருக்கின்ற எல்லா மாநிலங்களோடும் போட்டி போட்டுக் கொண்டு, அருமை நண்பர் வீராசாமி இங்கே எடுத்துக் காட்டியதைப் போல இன்றைக்கு முன்னணியிலே நிற்கிறதென்றால் அரசினுடைய நிர்வாகத்திறமை மாத்திரமல்ல, பொதுமக்களாகிய நீங்கள் தருகின்ற ஒத்துழைப்பும்தான் அதற்கு மிக முக்கியமான காரணம் என்பதை நான் இங்கே எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## உழவர் சந்தைத் திட்டம்

நல்லவைகளைச் செய்து கொண்டிருக்கிறோம். கேலிக்குள்ளாக்கப்பட்ட பல திட்டங்கள் எல்லாம் இன்றையதினம் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக உழவர் சந்தை என்று கடந்த ஆண்டு தொடங்கினோம். உழவர் சந்தையினால் உபயோகம் இல்லை என்று சொல்லப்பட்டது. இதுவரையிலே 65 உழவர் சந்தைகள் திறக்கப்பட்டுள்ளன. அந்த 65 உழவர் சந்தைகளில் விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் எடை மாத்திரம் 10 கோடியே 90 இலட்சத்து 22 ஆயிரத்து 649 கிலோ. அந்தக் காய்கறிகளின் மதிப்பு 70 கோடி ரூபாய். இலட்சக்கணக்கான விவசாயிகள் அதைப் போல இலட்சக்கணக்கான நுகர்வோர் இந்தத் திட்டத்தின் மூலம் பயன் பெற்றிருக்கிறார்கள்.

## வருமுன் காப்போம் திட்டம்

அதைப் போலவே வருமுன் காப்போம் என்ற ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தி அது வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நேற்றுகூட நீங்கள் பத்திரிகைகளிலே ஒரு விளம்பரம் பார்த்திருப்பீர்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே வாழ்கின்ற ஒரு பெண்மணி இருதய நோய் தனக்கிருப்பதை இந்த வருமுன் காப்போம் முகாமிலே சென்றுதான் தெரிந்து கொண்டு அங்குள்ள மருத்துவர்கள் அங்கே சிகிச்சை செய்தால் போதாதென்று அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே பெரிய மருத்துவமனைக்கு அந்தப் பெண்ணை அரசின் செலவிலேயே அனுப்பி வைத்து இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டு இப்போது சுகமாக இருக்கிறேன் என்று அந்தப் பெண்மணி இருபது வயது நிரம்பிய பெண்மணி எனக்கெழுதிய கடிதம் அந்தப் பெண்ணின் படத்தோடு நேற்று பத்திரிகைகளில் வெளியாகி இருக்கின்றது.

இது ஏழை எளிய கிராமப்புறத்து மக்கள் ஆங்காங்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அவர்களுடைய முயற்சியால் மருத்துவர்களின் ஒத்துழைப்போடு

நடத்தப்படுகின்ற வருமுன் காப்போம் முகாம்களிலே கிடைத்த பலன் என்னவென்று பார்த்தால், இதுவரை இந்த முகாம்கள் 5,752 நடைபெற்றுள்ளன. இதிலே பரிசோதனை செய்து கொண்ட மக்களுடைய எண்ணிக்கை 54 இலட்சத்து 86 ஆயிரம் பேர். இதிலே தொடர் சிகிச்சைக்கு நான் குறிப்பிட்டேனே குமரி மாவட்டத்தில் ஒரு பெண்மணி இருதய சிகிச்சைக்காக பெரிய மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டதை அதைப் போல – அந்த முகாம்களில் செய்யும் மருத்துவம் போதாது, பெரிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தோடு அனுப்பி வைக்கப்பட்டவர்கள், பரிந்துரை செய்யப்பட்டவர்கள் இரண்டு இலட்சம்பேர். இந்தப் பயனாளிகளுக்கெல்லாம் இலவசமாக வழங்கப்பட்ட மருந்து மதிப்பு இரண்டு கோடியே 80 இலட்சம் ரூபாய்.

**கால்நடை பாதுகாப்புத் திட்டம்**

இதைப்போல மனிதர்களுக்கு மாத்திரமல்ல, வாயில்லா ஜீவன்களான கால்நடைகளுக்கும் இந்த உதவியைச் செய்ய வேண்டும், அது விவசாயிகளுக்குப் பெரிதும் பயனளிப்பதாக இருக்குமென்று கால்நடை பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்கி இது வரையில் 2,469 முகாம்கள் கால்நடை பாதுகாப்புக்கான முகாம்கள் நடைபெற்றுள்ளன. அதிலே பயனடைந்த கால்நடைகளின் எண்ணிக்கை 31.8.2000 வரை 66 இலட்சத்து 42 ஆயிரத்து 691. இதிலே பசுக்கள் 17 இலட்சம், எருமைகள் 3 இலட்சம், செம்மறி ஆடுகள் 20 இலட்சம், வெள்ளாடுகள் 12 இலட்சம், கோழிகள் 12 இலட்சம், இதர கால்நடை இனங்கள் 25 ஆயிரம். இலவசமாக இவற்றுக்கு வழங்கப்பட்ட மருந்துகளின் மதிப்பு 1 கோடியே 19 இலட்சத்து 29 ஆயிரத்து 223 ரூபாய்.

இப்படி கால்நடைகளிலிருந்து மனிதர்கள் வரையிலே எல்லோருக்கும் இந்த அரசு சேமநலத்திட்டங்களை ஒழுங்காக திறமையோடு ஆர்வத்தோடு அக்கறையோடு நடத்தி வருகின்றது. அதனுடைய ஒரு கூறாகத்தான் விவசாயிகளுடைய நன்மைக்காக பல திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது. அதனுடைய ஆக்க பூர்வமான ஒரு முயற்சியாகத்தான் இன்றைக்கு இந்த அணைக்கட்டுத் திட்டத்தைத் தொடங்கி அதை திறந்து வைக்கும் நிகழ்ச்சியும் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

நல்லது செய்கிறோம், நல்லது செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு தான் ஆட்சிக்கு வந்தோம். இந்த ஆட்சி நல்லாட்சியா அல்லவா என்ற கருத்து நான் சொல்லியல்ல, உங்களுடைய மனசாட்சி உங்களுக்குச் சொல்லக்கூடிய கருத்து ஆகும். எனவே இந்த ஆட்சியை இந்த ஆட்சியினுடைய செயல்களை நீங்கள் ஆதரிப்பது, ஆட்சியிலே உள்ள எங்களை ஆதரிப்பதாக அர்த்தமாகாது, உங்களுக்கு மேலும் மேலும் நன்மைகளைச் செய்து கொள்வதாகத்தான் இதற்குப் பொருள் என்று கூறி இந்த நல்ல திட்டத்தைத் தொடங்குகின்ற நேரத்திலே நீங்கள் எல்லாம் பெருவாரியாக திரண்டு வந்து உங்களுடைய வாழ்த்துக்களை வழங்கியதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெற்றுக் கொள்கிறேன். ★

---

## உழைப்பே செல்வம் தரும்



ஒரு விவசாயி மரணப்படுக்கையில் இருந்தான். தனக்குப்பின் தன் மக்கள், தன்னைப் போலவே நிலத்தை உழுது பயிரிடுவார்களா என்ற எண்ணம் அவன் உள்ளத்தில் எழுந்தது.

மக்களைக் கூப்பிட்டான். மக்கள் நால்வரும் தந்தையின் படுக்கையைச் சுற்றி நின்றனர்.

"என் அருமை மக்களே! என் வாழ்க்கையில் நான் பாடுபட்டுத் தேடியப் பொருளை எல்லாம் நம்முடைய திராட்சைத் தோட்டத்தில் புதைத்து வைத்திருக்கிறேன். எந்த இடத்தில் வைத்தேன் என்பது எனக்கு நினைவு இல்லை. ஆதலால், தோட்டம் முழுவதையும் நன்கு தோண்டிப் பாருங்கள்" என்று சொல்லி முடிந்ததும் தந்தையின் உயிர் பிரிந்தது.

தந்தை இறந்தபின், அவருக்கு செய்ய வேண்டிய இறுதி கடன்களைச் செய்தனர். பிறகு ஆளுக்கொரு மண் வெட்டியையும், கடப்பாரையையும் எடுத்துக் கொண்டு திராட்சைத் தோட்டத்துக்குச் சென்று தோண்டினார்கள். ஆனால் தந்தை சொன்ன செல்வம் கிடைக்கவில்லை. மனத்தை தேற்றிக் கொண்டு தோட்டத்தைச் சமப்படுத்தி, எரு விட்டு திராட்சை நட்டனர். அது செல்வம் கொழிக்கும் நிலமாகியது. ★

கை, கால் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பை அதிகரிக்கும் நோக்கத்துடன் முந்நூறு பேருக்குக் கணினிப் பயிற்சி இலவசமாக அளிக்கப்படும் என இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பினையொட்டி, சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் 6 பயிற்சி மையங்கள் 34 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் அமைத்து முந்நூறு பேருக்குக் கணினிப் பயிற்சி இலவசமாக வழங்குவதற்கு முதலமைச்சர் 29.8.2000 அன்று ஆணையிட்டுள்ளார். இந்தக் கணினிப் பயிற்சி மூன்று மாத காலம் நடைபெறும். பயிற்சிக்குத் தேர்வு செய்யப்படும் ஊனமுற்றோர் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு முந்நூறு ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்படும்.

## முந்நூறு ஊனமுற்றவர்களுக்குக் கணினிப் பயிற்சி

## இருநூறு இடங்களில் நெல் உலர்த்தும் களங்கள்

தமிழக சட்டமன்றத்தில் 24.3.2000 அன்று இந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை அளித்து உரையாற்றுகையில், அறுவடைக்குப் பின் சேதாரம் கணிசமாகக் குறைந்து விவசாயிகளுக்குப் பயனளிக்கும் வகையில் கிராமங்களில் சிமெண்டால் ஆன உலர்களங்கள் ''நமக்கு நாமே'' திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்படுமென்று முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப் பட்டது. அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து,, ஒவ்வொன்றும் ஒரு இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபாய் செலவில் மொத்தம் மூன்று கோடியே ஐம்பது இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக உள்ள 27 மாவட்டங்களில் ''நமக்கு நாமே'' திட்டத்தின் கீழ் இருநூறு இடங்களில் நெல் உலர்த்தும் களங்களை அமைத்திட முதலமைச்சர் கலைஞர் 30.8.2000 அன்று ஆணையிட்டுள்ளார். •

# செய்திச் சரம்

## தமிழக கிராண்ட் மாஸ்டர்கள்

தமிழகத்தைச் சேர்ந்த, இந்தியாவின் முதல் பெண் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற எஸ். விஜயலட்சுமி மற்றும் சமீபத்தில் சென்னைக்கு அருகிலுள்ள கேளம்பாக்கத்தில் நடைபெற்ற பென்டாமீடியா கிராண்ட் மாஸ்டர் செஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் பெற்ற கே. சசிகிரண் ஆகியோர் 30.8.2000 அன்று தமிழ் நாடு செஸ் சங்கத்தின் செயலாளரான திரு. மானுவேல் ஆரானுடன் தலைமைச் செயலகத்தில் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். 19.9.2000 அன்று தமிழகத்தைச் சார்ந்த செஸ் கிராண்ட் மாஸ்டர் திரு. விஸ்வநாதன் ஆனந்த் மற்றும் முன்னாள் ஹாக்கி விளையாட்டு வீரர் திரு வி.ஜே.பிலிப்ஸ் ஆகிய இருவரும், இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர் திரு. பொங்கலூர் நா.பழனிசாமி அவர்கள் முன்னிலையில் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். அவ்வமயம் இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை செயலாளர் திரு கே.அஷோக்வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப. மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர்.

தமிழகத்தைச் சேர்ந்த இம்மூன்று செஸ் வீரர்கள் மற்றும் ஹாக்கி விளையாட்டு வீரர் பன்னாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி வாகை சூடி தமிழகத்திற்குப் பெருமைத் தேடித்தருவது குறித்து மகிழ்ச்சி அடைந்த தமிழக முதலமைச்சர் இவ்வீரர்கள் மேலும் பல வெற்றிகளைக் குவித்திட வாழ்த்துகளை வழங்கினார்.

## கே.சசிகிரண்

சென்னையைச் சேர்ந்த 19 வயதான கே.சசிகிரண் சென்னைக்கு அருகிலுள்ள கேளம்பாக்கத்தில் நடைபெற்ற பெண்டாமீடியா கிராண்ட் மாஸ்டர் செஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் பெற்றார். பன்னாட்டு அளவுகோலின்படி விஸ்வநாதன் ஆனந்திற்குப் பின் அதிக புள்ளிகள் பெற்றவர். 1999-ஆம் ஆண்டு வியட்நாமில் நடைபெற்ற ஆசிய ஜூனியர் செஸ் பட்டம், 2000-ஆம் ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற குட்ரிக் இன்டர் நேஷனல் ஓபன் மற்றும் சாங்கிலியில் நடைபெற்ற இன்டர்நேஷனல் ஓபன் ஆகிய போட்டிகளில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் கிராண்ட் மாஸ்டரானார். அக்டோபர் 1999-ஆம் ஆண்டு சீனாவில் நடைபெற்ற ஆசிய குழு சாம்பயின்ஷிப்பிற்கான போட்டியில் இந்தியாவின் சார்பாகக் கலந்து கொண்டார். நான்கு பேரைக் கொண்ட இக்குழு மூன்றாம் இடத்தைப் பிடித்தது. தேசிய அளவில் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ள இவர் சென்னையில் இந்தியன் ஆயில் மற்றும் எரிவாயு கழகத்தில் பணிபுரிந்து வருகின்றார். •

## விஜயலட்சுமி சுப்பராமன்

ஜூலைத் திங்கள் ஹைதராபாத்தில் நடந்த விப்ரோ இண்டர்நேஷனல் கிராண்ட் மாஸ்டர் செஸ் போட்டியில் வென்றதன் மூலம் இந்தியாவின் முதல் பெண் கிராண்ட் மாஸ்டர் ஆனார். சென்னையைச் சேர்ந்த இவர் கல்கத்தாவில் 1996–ஆம் ஆண்டு நடந்த மகளிருக்கான காமன்வெல்த் பட்டம், 1998–ஆம் ஆண்டு ஸ்பெயினில் நடந்த லினோஸ் ஓபன் மற்றும் 2000–இல் உதய்பூரில் நடந்த ஆசிய சாம்பியன்ஷிப் மற்றும் தற்போது ஹைதராபாத்தில் நடந்த போட்டிகளின் மூலம் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் இச்சாதனையை அடைந்தார். அக்டோபர் திங்கள் 1999–ஆம் ஆண்டு சீனாவில் நடைபெற்ற ஆசிய மகளிர் குழு சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் சார்பாகக் கலந்து கொண்டவர்களில் இவரும் ஒருவர். இக்குழு மூன்றாம் இடத்தைப் பிடித்தது. 30–க்கும் மேற்பட்ட பன்னாட்டு அளவிலானப் போட்டிகளில் கலந்து கொண்ட இவர் தனது 10 வயது முதல் விளையாடத் துவங்கினார். தற்பொழுது சென்னையில் இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார். தமிழக அரசு இவருக்கு சென்னை அண்ணாநகரில் ரூ.13.60 இலட்சம் மதிப்புள்ள உயர்தர வருவாய் பிரிவுக்கான வீடு ஒன்று 1.6.2000 அன்று வழங்கியுள்ளது. ★

## விஸ்வநாதன் ஆனந்த்

சென்னையைச் சார்ந்த திரு விஸ்வநாதன் ஆனந்த் 1985–இல் தனது 16 வயதிலேயே தேசிய சாம்பியன் பட்டம் வென்றவராவார். செஸ் விளையாட்டில் பல சாதனைகள் சிறப்பான முறையில் புரிந்தமைக்காக 1985–ஆம் ஆண்டு மத்திய அரசு இவருக்கு ''அர்ஜுனா விருது'' வழங்கி கௌரவித்தது. 1987–ஆம் ஆண்டு உலக கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெற்ற திரு விஸ்வநாதன் ஆனந்த் அதே ஆண்டு ''பத்மஸ்ரீ'' விருதும் பெற்றார். 1996–ஆம் ஆண்டு ஜெனிவாவில் நடைபெற்ற சதுரங்க கிராண்ட் ப்ரீ போட்டியில் உலக சாம்பியனான கேரி காஸ்பரோவை வென்று முதலிடம் பெற்றார். 2000–ஆம் ஆண்டில் சீனாவில் சென்யாங் நகரில் உலக சதுரங்க இணையம் நடத்திய போட்டியில் சாம்பியன்ஷிப் பட்டம் பெற்ற வீரரான இவர், தற்போது உலகின் இரண்டாம் நிலை ஆட்டக்காரராகத் திகழ்கிறார். ★

## வி.ஜே.பிலிப்ஸ்

ஹாக்கி விளையாட்டில் சிறப்பான பல சாதனைகள் புரிந்த திரு வி.ஜே.பிலிப்ஸ் 1999–ஆம் ஆண்டிற்கான சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான "அர்ஜுனா விருது" பெற்றவராவார். தென்னக இரயில்வேயில் உதவி விளையாட்டு அலுவலராகப் பணிபுரியும் திரு வி.ஜே.பிலிப்ஸ், இந்திய அணிக்காக பல போட்டிகளில் கலந்து கொண்டு விளையாடியுள்ளார். குறிப்பாக 1972–ஆம் ஆண்டு முனிச் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் வெண்கலம், 1973–ஆம் ஆண்டு ஆம்ஸ்டர்டாம் நகரில் நடைபெற்ற 2வது உலகக் கோப்பைக்கான போட்டிகளில் வெள்ளி, 1974–ஆம் ஆண்டு டெஹ்ரான் நகரில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் வெள்ளி, 1975–இல் கோலாம்பூரில் நடைபெற்ற 3வது உலகக்கோப்பைக்கான போட்டிகளில் தங்கம் மற்றும் 1978–இல் பாங்காக்கில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் வெள்ளி பதக்கங்களை வென்ற இந்திய அணியில் விளையாடியுள்ளார். மேலும், 1978–இல் நடைபெற்ற இந்திய பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான டெஸ்ட் தொடர் மற்றும் அர்ஜென்டினாவில் நடைபெற்ற உலகக் கோப்பைக்கான போட்டிகளில் இந்திய அணிக்குத் தலைமை தாங்கி விளையாடியுள்ளார். இந்திய அணிக்குத் தலைமை தாங்கிய முதல் தமிழக வீரர் இவர். ★

## நெல் கொள்முதல் விலை உயர்வு

இந்த ஆண்டின் நெல் கொள்முதல் விலை, கடந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட விலையை விட 20 ரூபாய் கூடுதலாக நிர்ணயம் செய்யப்பட்டு மத்திய அரசினால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, தமிழகத்தில் இந்த ஆண்டு காவிரி டெல்டா பகுதியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நேரடிக் கொள்முதல் நிலையங்களிலும், இதர பகுதிகளில் உள்ள வட்டக் கிடங்குகளிலும் 1.9.2000 முதல் கொள்முதல் செய்யப்படும் சாதாரண ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு கடந்த ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட கொள்முதல் விலையான 490 ரூபாய் என்பதை 510 ரூபாய் என்றும், "ஏ" கிரேடு ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு கடந்த ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட கொள்முதல் விலையான 520 ரூபாய் என்பதை 540 ரூபாய் என்றும் உயர்த்தி முதலமைச்சர் கலைஞர் 31.8.20000 அன்று ஆணையிட்டுள்ளார்.

இஃதன்னியில், 1.9.2000 முதல் கொள்முதல் செய்யப்படும் சாதாரண ரக நெல்லிற்கும், "ஏ" கிரேடு ரக நெல்லிற்கும் இடைநிகழ் செலவாக குவிண்டால் ஒன்றுக்கு 35 ரூபாய் கூடுதலாக வழங்குவதற்கு தமிழக அரசு ஏற்கனவே ஆணையிட்டுள்ளதையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் சாதாரண ரக நெல் ரூ.545 என்றும், "ஏ" கிரேடு நெல் ரூ.575 என்றும் விலை நிர்ணயிக்கப்படுகிறது. ●

## தேசிய உற்பத்தித்திறன் விருதுகள்

புதுதில்லியிலுள்ள தேசிய உற்பத்தித்திறன் குழு (National Productivity Council) 1997-98 மற்றும் 1998-99ஆம் ஆண்டுகளுக்கு வழங்கிய விருதுகளில் பெரும்பாலான வற்றை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் பெற்றுள்ளன. இவற்றில் 1997-98-க்கான 9 மொத்த விருதுகளில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் கீழ்க்கண்ட 7 விருதுகளைப் பெற்றுள்ளன.

**தரைவழி போக்குவரத்து [பயணிகள்] நகர்பிரிவு**

1. **சிறந்த உற்பத்தித் திறன் விருது:**
   தமிழ் நாடு அரசு போக்குவரத்துக் கழகம், வேலூர்
2. **நன்மதிப்புச் சான்றிதழ்:**
   மாநகர் போக்குவரத்துக் கழகம்,
   [சென்னை கோட்டம்-2] சென்னை

**தரைவழி போக்குவரத்து [பயணிகள்] மலை பிரிவு**

1. **சிறந்த உற்பத்தித் திறன் விருது:**
   தமிழ் நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
   கோயம்புத்தூர்.
2. **இரண்டாவது சிறந்த உற்பத்தித்திறன் விருது:**
   தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
   உதகமண்டலம்.

**தரைவழி போக்குவரத்து [பயணிகள்] புறநகர்பிரிவு**

1. **சிறந்த உற்பத்தித் திறன் விருது:**
   தமிழ் நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
   கும்பகோணம்.
2. **இரண்டாவது சிறந்த உற்பத்தித்திறன் விருது:**
   தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், ஈரோடு.
3. **நன்மதிப்புச் சான்றிதழ்:**
   தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம்.

இதேபோல், 1998-99-ஆம் ஆண்டிற்கான மொத்தமுள்ள 5 விருதுகளில் கீழ்கண்ட 4 விருதுகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் பெற்றுள்ளன.

**தரைவழி போக்குவரத்து [பயணிகள்] நகர்பிரிவு**

**சிறந்த உற்பத்தித்திறன் விருது:** மாநகர் போக்குவரத்துக் கழகம், [சென்னை கோட்டம்-2] சென்னை

**தரைவழி போக்குவரத்து [பயணிகள்] புறநகர்பிரிவு**

1. **சிறந்த உற்பத்தித் திறன் விருது:**
   தமிழ் நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருச்சி
2. **இரண்டாவது சிறந்த உற்பத்தித்திறன் விருது:**
   தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம்
3. **நன்மதிப்புச் சான்றிதழ்:**
   தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர்

மேற்கண்ட விருதுகள் அனைத்தும் புதுதில்லி விஞ்ஞான் பவனில் 24.8.2000 அன்று மாலை மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு.முரசொலி மாறன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மேதகு குடியரசு துணைத்தலைவர் திரு.கிருஷ்ணகாந் அவர்களால் வழங்கப்பட்டது. ●

## வலைத்தளத்தில் அரசு ஆணைகள்

நேர்மையான, ஒளிவுமறைவற்ற, வெளிப்படையான நிர்வாகத்தை வழங்கிட இந்த அரசு தொடர்ந்து உறுதியான முயற்சிகளை மேற்கொள்ளும் என்று முதலமைச்சர் கலைஞர் ஏற்கனவே அறிவித்துள்ளார். அதனையொட்டி தமிழக அரசு நிறைவேற்றிய பொதுமக்கள் தகவல் பெறும் உரிமைக்கான சட்டம் அமலில் இருந்து வருகிறது. அதன் தொடர்ச்சியாக பொது முக்கியத்துவம் வாய்ந்த அரசு ஆணைகள் அனைத்தையும், அதன் பொருளடக் கத்துடன் தமிழக அரசின் அதிகாரப்பூர்வ வலைத் தளமான www.tn.gov.in.ல் வெளியிட வேண்டும் என முதலமைச்சர் கலைஞர் உத்தரவிட்டுள்ளார். ●

## நாகை மாவட்டத்தில் புதிய விளையாட்டு வளாகம், மதுரை நகரில் புதிய நீச்சல் குளம்

தமிழக அரசு மாவட்டத் தலைநகரங்களில் மாவட்ட விளையாட்டு வளாகத்தை ஏற்படுத்த நிதி உதவி செய்து வருகிறது. இத்தகைய வளாகத்தை அமைக்க மைய அரசும், மாநில அரசும் 75 சதவிகிதம் நிதியுதவி செய்கின்றன. விளையாட்டரங்கக் குழு மூலம் பொது மக்களிடமிருந்து நன்கொடையாக 25 சதவிகிதம் பெறப்படுகிறது.

ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரத்திலும்,

1. திறந்தவெளி விளையாட்டரங்கம்
2. கையுந்து பந்து / கூடைப்பந்து ஆடுகளங்கள் மற்றும் கோ-கோ, கபடி ஆடுகளங்கள்
3. பல்நோக்கு உடல்திறனைப் பெருக்கும் கருவி, பளுதூக்கும் கருவி வைக்கக் கூடியஅறை
4. நீச்சல் குளம் மற்றும்
5. மரத்தாலான தளத்துடன் உள்விளையாட்டரங்கம்

ஆகிய ஐந்து வசதிகளையும் கொண்ட மாவட்ட விளையாட்டு வளாகம் படிப்படியாக ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த 5 வசதிகளையும் கொண்ட மாவட்ட விளையாட்டு வளாகம் ஏற்படுத்த உத்தேசமாக 2 கோடி ரூபாய் செலவாகும்.

நடப்பு ஆண்டில் திண்டுக்கல்லில் ரூபாய் 1.18 கோடி ரூபாய் மதிப்பில் புதிய மாவட்ட விளையாட்டு வளாகம், சேலம் மற்றும் ஈரோடு மாவட்டத் தலைநகரங்களில் ரூபாய் 53 இலட்சம் செலவில் நீச்சல் குளங்கள், திருச்சி மாவட்டத் தலைநகரில் ரூபாய் 83 இலட்சம் செலவில் நீச்சல்குளம் ஆகியவை அமைத்திட ஏற்கனவே முதல்வர் கலைஞர் உத்தரவிட்டுள்ளார்.

நடப்பு நிதியாண்டில் நாகப்பட்டிணத்தில் ரூ.1.12 கோடி மதிப்பில் புதிய மாவட்ட விளையாட்டு வளாகமும், மதுரை மாவட்ட தலைநகரில் ரூ.51 இலட்சம் செலவில் நீச்சல் குளமும் அமைத்திட முதல்வர் கலைஞர் உத்தரவிட்டுள்ளார். நாகப்பட்டினத்தில் மாவட்ட விளையாட்டு வளாகம் கட்டும் பணி ஏற்கனவே தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மதுரை நகரில் நீச்சல்குளம் கட்டும்பணி விரைவில் தொடங்கப் படவுள்ளது. ●




# மீனின் விழிகளிலும் கண்ணீர்

மழையில் ஊர்மூழ்க
இரவுகள் தூக்கம் அறிவதில்லை
வலுக்கும் இலையுதிர்நாள்
– ஸோகி

நீர்க்காகம் ஒன்று
பார்க்கும் கொத்தும் கலைக்கும்
நீரலை நிலா
– ஜூயிர்யூ

இளவேனில் விடைபெற,
அழூஉம் பறவைகள்; மீனின்
விழிகளிலும் கண்ணீர்
– பாஷோ

சிற்றூர் பலவுண்டு
சற்றுமிலை கடல்மீன், பூ; அவர்க்
குற்றதெலாம் மணிநிலா
– ஸயிக்கு

இன்று நான்செல்ல
இன்னும் இருக்கிறாய் நீ; உண்டு
ரெண்டின் இலையுதிர்வு
– பூஸன்

உன் காலடி குனிந்துபார்,
கண்முன்னே அவரை களவுபோம் –
என் காவல் பொம்மை?
– யயூ

சவப்பெட்டி ஒன்றை
நெருநல் நடுநிசி சந்தித்தேன்
மலர்ந்த புத்தாண்டு
– ஷிகி

குருவிகள் பறந்திருக்கும்
ஒரு காவல் பொம்மை விட்டு
ஒரு காவல் பொம்மை
– சஸநமி

குளிர்வான் தாரகைகள்
ஒழுகி ஒழுகி வெளியேற்றிச்
சலசலக்கும் ஊர்நதி
– மட்புரா தகுயா

உறைந்தநீர் கல்லறைகள்;
முறைத்துக் கொண்டு வான்த்தே
கதிரோன், வெண்ணிலவு
– யமகுச்சி சீஷி

*ஜப்பான் ஹைகூ*
*மொழியாக்கம் : அமரன்*
*நன்றி : கவிக்கோ*

இருபது நூற்றாண்டுகள் மறைந்துவிட்டன. இருபத்தோராம் நூற்றாண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறோம். மகிழ்ச்சிதான். இப்பொழுது நாம் சென்ற இருபதாம் நூற்றாண்டையும், 19ஆம் நூற்றாண்டையும் பின்னோக்கிப் பார்க்கலாம்.

ஒரு நூற்றாண்டில் பிறக்கும் மக்களுயிர்க்குக் கணக்கில்லை. எல்லா உயிர்களும் பிறக்கின்றன – வளர்கின்றன – வாழ்கின்றன – உண்டு – உடுத்தி – உறங்கி பிறகு மடிகின்றன.

☐ புலவர் கு. அய்யாறன்

இதற்காகப் பெரியார் பட்ட பாடுகள் – அனுபவித்த இன்னல்கள் – சிறை வாசங்கள் – எவ்வளவு? இழிவான பேச்சுகள் – ஏளனங்கள் – பழிச்சொற்கள் எவ்வளவு?

இருப்பினும் அந்த இமயத்தை யாராலும் சிறிதும் அசைக்கமுடியவில்லை.

காரணம், மனிதனுக்கு இலக்கணம் வகுத்துக் காட்டியவர் பெரியார். ஏழைகளுக்கும்,

# நூற்றாண்டுக்கு ஒருவர் தந்தை பெரியார்

ஆனால் ஒருசிலர் மட்டுமே அவர்கள் மறைந்தாலும், ஏனைய மக்களின் மனதில் மறையாமல் வாழ்கின்றனர். இதற்குக் காரணம் அவர்கள் வாழ்ந்தவிதம் – செயற்கரிய செய்த செயல்களே அடிப்படையாக அமைகின்றன.

நூற்றாண்டுகள் பலகழிந்தும் புத்தர் மட்டும் ஏன் வாழ்கிறார்? நபிகள் நாயகம் மட்டும் ஏன் வாழ்கிறார்? இயேசுபிரான் மட்டும் ஏன் வாழ்கிறார்?


அவர்கள் இவ்வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள். ஏனைய மக்களுக்காக வாழ்ந்தார்கள்.

இவ்வகையில் நூற்றாண்டுக்கு ஒரிருவர்தான் தோன்றமுடியும். அவ்வகையில் தோன்றியவர்களில், இருபதாம் நூற்றாண்டில் இணையற்றவர் தந்தை பெரியார்.

இதற்குக் காரணம் என்ன? புத்தர் கூறிய மாற்றத்தை – நபிகள் சொன்ன மாற்றத்தை – இயேசு காட்டிய மாற்றத்தை மற்றவர்கள் தன்னுடைய வாழ்நாட்களில் தோன்றும்படிச் செய்ய முடியவில்லை.

ஆனால் பெரியார் ஒருவர் மட்டுமே அத்தகைய மாற்றத்தை நாட்டிலே ஏற்படுத்தினார். அவர் எதற்காகப் பாடுபட்டாரோ? அதை – அந்த மாற்றத்தை தன்கண்களால் கண்டுமகிழ்ந்து கண்ணுறங்கியவர் தந்தை பெரியார்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கும், தாய்க்குலத்திற்கும் பொற்காலம் மலர முழுமையான வித்தாக விளங்கியவர் பெரியார்.



நாளடைவில் பெரியாரைப் பற்றிப் புகழ்ந்து பேசாதார் இல்லை. மிகப் பெரிய மேதாவிகள் என்று மக்களால் கூறப்பட்டவர்கள் அனைவரும் பெரியாரின் சொல்லிற்கும் செயலிற்கும் தூய நல்ல தொண்டிற்கும் அடிமையானார்கள். பொதுத்தொண்டின் மறு உருவமாகத் திகழ்ந்தார் பெரியார். உழைப்பின் சின்னமாகத் திகழ்ந்தார் பெரியார்.

இவர் பிறப்பதற்கு முன்பு, இவருடைய தாய் சின்னத்தாய் அம்மாளும், தந்தை வேங்கடப்ப நாயக்கரும் இல்லற வாழ்க்கையின் முற்பகுதியில் மிகவும் துயருற்றனர் – வறுமையில் வாடினர். ஏன்? கூலி வேலைக்கூடச் செய்தனர். உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ! என்பதற்கேற்ப அவர்கள் துவக்கிய சிறுசிறு வியாபாரங்கள், பெருகிப் பெருகி பெரும் செல்வந்தர்கள் பட்டியலில் முதல் இடத்தைப் பிடித்தனர். ஓயாத உழைப்பு வறுமையை ஓட்டியது.



இவர்களுக்கு முதலில் இரண்டு குழந்தைகள் பிறந்து இறந்துவிட்டன.

செல்வம் மேலும் மேலும் செழித்தது. இந்நிலையில் அவர்களுக்குக் குழந்தை இல்லையே என்ற ஏக்கம் பிறந்தது. பிள்ளைவரம் கேட்டு அவர்கள் செய்யாத தானங்களும், தருமங்களும் இல்லை. போவோர் வருவோர் எல்லாருக்கும் அவர்களது வீடு உணவு விடுதியாகவும், உறங்கும் இடமாகவும் அமைந்தது.

அவர்கள் வேண்டியது வீணாகவில்லை. **1877**ஆம் ஆண்டில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதுதான் பெரியாரின் சகோதரன் ஈ.வெ. கிருஷ்ணசாமி.

அடுத்து **1879**ஆம் ஆண்டு செப்டம்பர் **17**ஆம் தேதி ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைதான் நம்முடைய பாட்டுடைத்தலைவன் பெரியார் ஆவார்.

### குழந்தைப்பேறு

திருமணம் நடந்து இரண்டு ஆண்டுகள் கழிந்தன. நாகம்மை கருவுற்றார். பெரியார் மகிழ்ச்சி கொண்டார். ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஆனால் அக்குழந்தை ஐந்தாவது மாதத்தில் இறந்துவிட்டது. அனைவரும் வேதனையடைந்தனர்.

பெரியார் நாகம்மையைத் தேற்றினார். வருந்தாதே, நமக்குக் குழந்தை இல்லை என்றால் என்ன? ஊரார் குழந்தைகளுக்காகப் பாடுபடுவோம் என்று ஆறுதல் கூறினார்.

இந்நிகழ்ச்சியின் தொடக்கமே பெரியாரிடம் மாற்றத்தை ஏற்படுத்தியது. மூடநம்பிக்கை இல்லாத இடத்தையும், மக்களையும் காணத் துடித்தார்.

பெரியாரின் பெருந்தொண்டுகளில் முதலிடம் பெற்றது பெண்களின் உரிமை – அவர்களிடம் உள்ள மூடப்–பழக்கங்களை ஒழிப்பது என்பதுதான்.

இதற்கு நாகம்மை பெரியாருக்கு உற்ற துணையாக இருந்தார்.

### காங்கிரஸ் தலைவர்

பெரியார் காந்தியாரின் சொற்களை முற்றும் நம்பினார். ஒத்துழையாமை பிரச்சாரத்தில் பேசினார். தான் அணிந்துவந்த ஆடம்பரமான ஆடைகளையெல்லாம் வீசியெறிந்தார். மிகவும் சாதுவாக மாறினார். முரட்டுக் கதரையே உடுத்தினார். தான் மட்டுமல்ல உயர்வான பட்டாடை உடுத்திவந்த நாகம்மையாரையும் கதர் உடுத்தச் செய்தார். எண்பது வயதைக் கடந்த தனது தாயாரையும் கதர் உடுக்கச் செய்தார். தன் இனத்தவரையும், நண்பர்களையும் கதர் அணியச் செய்தார்.

பெரியார் செல்வத்தில் திளைத்தவர். வெய்யில் படாது வாழ்ந்தவர். ஈரோட்டு வேந்தரென வாழ்ந்தவர். எளிய உடை அணிந்தார் – எளிய உணவு உண்டார். இரவு பகல் பாராது தனது வாழ்வை நாட்டிற்கே அர்ப்பணித்தார்.

**24–5–1924**ஆம் நாள் பெரியார் சிறைபட்டபோது, "நவசக்தி" இதழில் திரு.வி.க. எழுதினார் :

*"தமிழ்நாட்டில் இன்று நடைபெற்றுவரும் கதர் இயக்கம் ஈ.வெ.ராவை மட்டும் நம்பியிருந்தது. கதரை காங்கிரசோடு பிணைத்தார். கதர் கடைகள் அவரால்தான் ஏற்படுத்தப்பட்டன. இராஜாஜி நிர்வாகம் நடத்திவந்த திருச்செங்கோடு ஆசிரமும் ஈ.வெ.ராவால்தான் திறந்துவைக்கப்பட்டது. கதரைப் பற்றி அவர் செய்த சொற்பொழிவுகள் அளவற்றவை.*

*அவர் சொற்பொழிவைக் கேட்டோர் அனைவரும் கதராடை அணிய முற்பட்டனர். கதர் மூட்டைகளை தன் தலையில்கூட சுமந்து விற்றார். இத்தகைய ஒருபெருமகனை நாம் காண இயலுமா? கதர் சொற்பொழிவோடு தீண்டாமை விலக்கைப் பற்றியும் மிகவும் வன்மையாகப் பேசுவார்.*

*மனிதனை மனிதன் தொடக்கூடாது. கண்ணில்படக்கூடாது – தெருவில் நடக்கக் கூடாது – கோயிலுக்குள் போகக்கூடாது – குளத்தில் தண்ணீர் எடுக்கக்கூடாது – என்று கூறும் ஒரு நாட்டை பூகம்பத்தாலோ! எரிமலையின் நெருப்பு குழம்பாலோ! கடல் பொங்கி மூழ்கச் செய்யாமலோ விட்டிருப்பதைப் பார்த்துபிறகு கூட, கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றும் – அவர் நீதிமான் என்றும் யாராவது சொல்லவந்தால் அவர்களை என்னவென்று நினைப்பது?' என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள் என்று உள்ளத்தைத் தொடும் விதத்தில் பேசும் ஆற்றலுடையவர்.*

*சொல்வன்மையில் இவருக்கு இணை வேறு யாரும் இல்லை. இது பகைவர்களாலும் மறுக்கப்படாத செய்தி"*

– என்று திரு.வி.க. அவர்கள் புகழாரம் சூட்டியுள்ளார். சொல்லின் செல்வன் என்ற தொடருக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் பெரியார்.

இனி, அண்ணாவால் அக்கிரகாரத்தில் ஓர் அதிசய மனிதர் என்று புகழப்பெற்ற வ.ரா. பெரியார் பற்றிக் குறிப்பிட்டார்.

"சொரணையற்ற தமிழர்களின் உள்ளத்தை அடி தெரியும்படி கலக்கிய பெருமை ஈ.வெ.ராவைத்தான் பெரிதும் சேரும். அவர் இயற்கையின் புதல்வன். தமிழ் மண்ணை மணந்த மணாளன். மண்ணோடு மண்ணாய் உழலும் மாந்தர்களுக்கு நாயக்கரின் பிரசங்கம் ஆகாய கங்கையின் பிரவாகம் என்பதில் சந்தேகம் இல்லை. மனதில் தோன்றியதைத் தயங்காமல் செய்யும் தன்மை அவரிடம் காணப்படுவதைப் போல் வேறு எவரிடமும் காணப்படுவதில்லை".

மூதறிஞர் இராஜாஜி கவர்னர் – ஜெனரல் பதவி வகித்தபோது பெரியாரைப் பற்றிக் கூறினார். எழுபதாவது ஆண்டு விழாவிற்கு வாழ்த்து அனுப்பியதில் சீரார் ஈ.வெ.ரா. அவர்களுக்கும் எனக்கும் உள்ள அகநகும் நட்பு யார் என்ன சொன்னபோதிலும் என்றும் குறையாது என்று குறிப்பிட்டிருந்தார்.

அண்ணா பெரியாரைப் பற்றிக் குறிப்பிடுகையில், எந்த நாட்டிலும் இரண்டு நூற்றாண்டுகளில் செய்து முடிக்கக் கூடிய காரியங்கள் எல்லாவற்றையும் பெரியார் இருபதே ஆண்டுகளில் செய்து முடித்திருக்கிறார்.

கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரம் பெரியாரைப் பற்றி கூறுகையில், திரு. இராமசாமி நாயக்கரைப் பற்றி நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. அவரைப் பற்றி ஐரோப்பாவிலே உள்ள பார்லிமெண்டில் பேசப்படுகிறது என்றால் நாயக்கரின் புகழைப் பற்றி நான் என்ன சொல்வது? நாயக்கரவர்கள் தமிழ்நாட்டின் எல்லாத் தலைவர்களையும்விடப் பெரிய தியாகி என்றுதான் சொல்ல வேண்டும்.

ஏ.டி. பன்னீர்செல்வம் பெரியாரைப் பற்றிக் கூறும்போது –

"நமது பெரியார் அவர்கள் ஒரு மகாத்மாவல்ல. ஆனால் தாம் நினைத்ததைச் சாதிக்கும் ஒரு நேர்மைவாதி. தம் காரியத்தைச் சாதித்துக்கொள்ள அவர் பட்டினி கிடப்பதில்லை. சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பதில்லை. நேர்மையான வழியிலேயே பாடுபடுவார்.

காங்கிரஸ்காரர்களுக்கு வார்தா ஆஸ்ரமம் எப்படியோ! அப்படியே திராவிடர்களுக்கு ஈரோடு. அவர்கள் வார்தா செல்வதைப் போல் நாம் அறிவுரை கேட்க ஈரோடு வருகிறோம். பெரியார் தமிழ்நாட்டின் உண்மைக் களஞ்சியம்" என்று புகழ்மாலை சூட்டினார்.

பெரியார் ஒரு கடல். அண்ணா சொன்னது போல் பெரியார் ஒரு சகாப்தம். அவருடைய விஸ்வரூபத்தை நாம் முற்றிலும் காணவியலாது. சிற்சில தேன் துளிகளைச் சுவைக்க முடியும்.

ஆகையால் அவரது தொண்டுகளில் சிலவற்றை அறிந்தாலே அதுவே நமக்கு நல்வாழ்வு காட்டும். இதுவே அவரது வாழ்க்கையை நமக்கு எடுத்துரைக்கும். எனவே சில குறிப்புகளைக் காண்போம்.

**17–9–1879** ஆம் நாளில் பெரியார், சாதாரண இராமசாமியாகப் பிறந்தார்.

தன்னுடைய **20** ஆவது வயதில் நாகம்மையை, விரும்பி திருமணம் செய்துகொண்டார்.

**25** ஆவது வயதில் துறவு பூண்டு கல்கத்தா, காசி முதலிய வடநாட்டுத் தலங்களுக்குச் சென்று வந்தார்.

ஈரோடு நகரசபைத் தலைவராகப் பல ஆண்டுகளிருந்தார். அப்போதுதான் ஈரோட்டிற்கு குடிதண்ணீர் குழாய் அமைத்தார்.

**1918** இல் பெரியார் ஈரோடு சேர்மன். அதேசமயம் இராஜாஜி சேலத்தில் சேர்மேனாக இருந்தார்.



இதே ஆண்டில் மீண்டும் மறியல் செய்து இரண்டாவது முறை சிறை சென்றார்.

11–9–1924இல் கதர் பிரச்சாரம் செய்தமைக்காக சிறை தண்டனை அடைந்தார். மேலும் குருகுல ஆசிரமத்தில் உணவு அருந்துவதற்கு இரு பிரிவுகளைச் செய்த செயலுக்குக் கண்டனமாக தமிழ்நாடு காங்கிரஸ் காரியதரிசி பதவியை உதறித் தள்ளினார்.

1925ஆம் ஆண்டு காங்கிரஸ் மாநாட்டில் இனி காங்கிரசை ஒழிப்பதே என் வேலை என்று சொல்லி காங்கிரசிலிருந்து வெளியேறினார். என்றாலும் கதர்போர்டு தலைவராகப் பல ஆண்டுகள் உழைத்தார்.

1925ஆம் ஆண்டு 'குடி அரசு' பத்திரிகையைத் துவக்கிச் சுயமரியாதைக் கொள்கைகளை விளம்பரப்படுத்தினார்.

1919இல் ஈரோடு சேர்மென் பதவியை ராஜிநாமா செய்து காங்கிரசில் சேர்ந்தார்.

1920இல் காங்கிரசின் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்குகொண்டார். பொதுநிறுவனங்களில் வசித்துவந்த 29 பதவிகளையும் ராஜிநாமா செய்தார்.

வருடத்திற்கு முப்பதாயிரம் ரூபாய்குமேல் வருமானம் வந்து கொண்டிருந்த வாணிபத்தை நிறுத்தி காங்கிரசுக்கு உழைத்தார்.

காந்தியாரின் சீடரானபிறகு, ஆடம்பரமான ஆடைகளை விட்டு, கதராடை உடுத்த ஆரம்பித்தார்.

நீதிமன்றங்களை நிராகரிக்க வேண்டும் என்ற காங்கிரசின் திட்டப்படி, தனக்கு நீதிமன்றத்திலிருந்து வரவேண்டிய 50,000 ரூபாயை இழந்தார்.

1921இல் ஈரோட்டுக் கள்ளுக்கடை மறியலைத் தலைமை தாங்கி நடத்திச் சிறைப்பட்டார்.

1922இல் கள்ளுக்கடை மறியலில் குடும்பத்துடன் ஈடுபட்டார். மறியல் போரின் முடிவு ஈரோட்டு இராமசாமி கையில் இருக்கிறது என்று காந்தியடிகளே கூறும் நிலையை உண்டாக்கினார்.

இதே ஆண்டில் திருப்பூர் காங்கிரஸ் மாநில மாநாட்டில் மனுதர்ம சாஸ்திரத்தையும், இராமாயணத்தையும் நெருப்பில் கொளுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

1924இல் மலையாளத்தில் வைக்கம் ஊரில் தீண்டாமையை நீக்க மறியல் செய்து சிறை சென்றார்.

1927ஆம் ஆண்டு வருணாச்சிரமம் ஒழிந்தால்தான் தீண்டாமை ஒழியும் என்று காரண காரியங்களை விளக்கி காந்தியாரிடம் வாதிட்டார். இதே ஆண்டில் சைமன் கமிஷன் இந்தியாவிற்கு வந்தபோது, அதை வரவேற்கவேண்டும் என்று முதன்முதலாகச் சொன்னவர் பெரியார்தான்.

1929ஆம் ஆண்டு பெரியார் ஒரு நாத்திகர்–தேசத்துரோகி, மதத்துரோகி என்ற வசை மொழிகளுக்கு ஆளானார். இதே ஆண்டில் மனைவி நாகம்மையார், தங்கை கண்ணம்மாள் இவர்களைச் சிறை புகச்செய்தார். மேலும் கலப்புத் திருமணம், விதவைத் திருமணம், புரோகிதர் அற்ற திருமணங்களை ஏற்படுத்தி பலரையும் இதில் ஈடுபடும்படிச் செய்தார். இதே ஆண்டில் மலேயா நாட்டிற்குச் சென்று சுயமரியாதைக் கொள்கையைப் பரவச் செய்தார். கடல் கடந்தும் தன் கருத்துகளைப் பரப்பிய பெருமை பெரியாருக்கு ஏற்பட்டது.

1930ஆம் ஆண்டு ஈரோட்டில் சுயமரியாதை மாநாடு, பெண்கள் மாநாடு, மதுவிலக்கு மாநாடு இவைகளைக் கூட்டினார்.

1931ஆம் ஆண்டு கிறிஸ்துவர்களாலும், மகமதியர்களாலும் இந்து வைதீகர்களாலும் கடுமையாக எதிர்க்கப்பட்டாலும், கல்லடி–சொல்லடி இவைகளுக் கிடையே மதநல்லிணக்க–சமதர்மப்பிரச்சாரம் ஊர்தோறும் செய்தார்.

1932ஆம் ஆண்டு எகிப்து, துருக்கி, ரஷ்யா, ஜெர்மனி, இங்கிலாந்து, ஸ்பெயின், பிரான்ஸ், போர்ச்சுகல் முதலிய

நாடுகளுக்குச் சென்று வந்து, அங்குள்ள அரசியல் நிலையை இங்கிலாந்தில் 50 ஆயிரம் தொழிலாளர் கூட்டத்தில் பேசி அரசியல் தெளிவை ஏற்படுத்திவிட்டு நாடு திரும்பினார்.

11–5–1933இல் தன் பொதுத் தொண்டிற்கு வலது கரமாக – தன்னுயிர் மனைவியாக இருந்த நாகம்மையார் இயற்கை எய்தினார்கள். பெரியாரின் வாழ்க்கையிலேயே யாராலும் மறக்க முடியாத நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது என்றால், அது தன் மனைவி இயற்கை எய்திய மறுநாளே, திருச்சி சென்று, கிறிஸ்தவ திருமணத்திற்கு விதித்த 144 தடையை மீறி திருமணத்தை நடத்திவைத்தார்.

28–12–1933இல் ஈரோட்டில் நடந்த மாநாட்டில் சுயமரியாதை சமதர்ம திட்டம் தீட்டினார். திரு. ஜெயப்பிரகாச நாராயணன் பெரியார் வீட்டிற்கு வந்து அங்கேயே ஒருநாள் பெரியாருடன் பேசி மகிழ்ந்து, பெரியாரை எப்படியும் அவர் கட்சிக்கு வரவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

30–12–1933இல் இன்றைய ஆட்சி ஏன் ஒழிய வேண்டும் என்று எழுதியதற்காக சிறைப்பட்டார்.

29–9–1933இல் கோவையில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில், இராஜாஜி, பெரியார் திட்டங்களைக் காங்கிரஸ் கட்சி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

1934இல் கடனுக்குச் சிறைபிடிப்பது சரியில்லை என்று அச்சட்டத்தை எதிர்த்துச் சிறை சென்றார்.

7–3–1936இல் 'குடி அரசு' பத்திரிகையில் இந்தி பொது மொழியாக்குவதை எதிர்த்து எழுதினார்.

1937இல் "தமிழ்நாடு தமிழருக்கே" என்ற முழக்கத்தை முதன்முதலாக எழுப்பினார். காஞ்சியில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்தி மறியல் செய்யத் தீர்மானித்தார்.

13–11–1938இல் தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடு சென்னையில் நடந்தபோது "பெரியார்" என்ற சிறப்புப் பெயர் பெண்களால் கொடுக்கப்பட்டது. அது முதல் அவரது இயற்பெயர் மறைந்து பெரியார் என்ற பெயரே நிலைத்துவிட்டது.

29–12–1938இல் நீதிக்கட்சியின் தலைமைப் பொறுப்பு அவர் சிறையிலுள்ளபோதே அவரிடம் வந்தது.

8–1–1940இல் பம்பாயில் ஜின்னா, அம்பேத்கர் ஆகியோரைச் சந்தித்து நாட்டுப் பிரிவினை குறித்தும் சமுதாய மத இயல் குறித்தும் தம் கருத்துகளை விளக்கினார்.

1941ஆம் ஆண்டில் இரயில்வே நிலையங்களில் சிற்றுண்டிச் சாலைகளில், இவ்விடம் பிராம்மணருக்கு – இவ்விடம் இதரர்களுக்கு என்று எழுதிவைத்தனர். "இது மிகவும் கொடுமையானது, இதை உடனடியாக நீக்கவேண்டும், இல்லையானால் நானே அதை நீக்குவேன்" என்று இரயில்வே நிர்வாகத்திற்குக் கடிதம் எழுதினார். இதிலுள்ள நியாயத்தை உணர்ந்த இரயில்வே நிர்வாகம் 20–3–1941இல் இந்த வேறுபாட்டை ஒழித்தது.

1942ஆம் ஆண்டில் 'குடி அரசு' இதழ் இல்லாத காரணத்தால் அங்கிருந்த எழுத்துகள் – பெட்டிகள் – அலமாரி இவைகளை அண்ணாவிடம் பெரியார் கொடுத்து நூறு ரூபாய் நன்கொடையும் உதவி, 1942 மார்ச் 8ஆம் நாள் "திராவிட நாடு" இதழ் காஞ்சியில் தொடங்க வழிசெய்தார்.

1942இல் மாணவராக இருந்து துடிப்புமிக்க இளைஞரான கலைஞர் காலணா விலையில் "முரசொலி" என்ற கையெழுத்து ஏட்டினை ஆகஸ்ட் 10ஆம் தேதி தொடங்கினார். பெரியாரின் கருத்துகளைத் துடிப்புடன் வெளியிட்டார்.

16–10–1943இல் 'குடி அரசு' இதழ் மீண்டும் தொடங்கப்பட்டது.

27–8–1944இல் சேலத்தில் கூடிய நீதிக்கட்சி மாநாட்டில் தலைமை தாங்கி நீதிக்கட்சியை திராவிடர் கழகமாக மாற்றினார்.

1945 ஆகஸ்ட் 29ஆம் நாள் குடியரசு இதழில் கருப்புச் சட்டைப் படை அமைப்பை உருவாக்கினார். கருப்புச் சட்டைப் படையில் முதன்முதலாகத் தன் பெயரை பதிவு செய்து கொண்டவர் யார் தெரியுமா? நம்முடைய கலைஞர்தான்.

11–5–1946இல் மதுரையில் கருப்புச் சட்டைப்படை மாநாடு நடந்தபோது, மாற்றார்கள் பந்தலுக்குத் தீவைத்தனர். உணர்ச்சிவயப்பட்ட தன் தோழர்களை அமைதிப்படுத்தி பல உயிர்ச்சேதங்களைத் தடுத்து தான் ஒப்பற்ற தலைவர் என்பதை நிலைநாட்டினார்.

1947இல் ஆகஸ்ட் 15ஆம் நாள் அந்நாள் நமக்கு துக்க நாள் என்று கூறி துக்க நாளாகக் கொண்டாடச் செய்தார்.

1948இல் மே மாதம், 8,9 தேதிகளில் மாபெரும் திராவிடர் கழக மாநாடு தூத்துக்குடியில் நடந்தது.

17–7–1948 கல்வியமைச்சர் அவினாசிலிங்கனார் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயமாக்க ஏற்பாடு செய்தார். அதை எதிர்த்து, நாட்டில் போர்க்குரல் எழும்பச் செய்து அத்திட்டத்தை உடைத்தெறிந்தார்.

9–7–1949இல் திருமதி மணியம்மையார் அவர்களைத் திருமணம் செய்து, இயக்கத்திற்கு மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தினார்.

1950 ஜனவரி 26ஆம் நாள் துக்க நாளாகக் கொண்டாடும்படி அறிக்கையிட்டார்.

1951இல் வகுப்புரிமைக்காக கிளர்ச்சி நடத்தி இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தச் செய்தார்.

1952இல் ஆகஸ்ட் 1ஆம் தேதி இரயில் நிலையங்களில் இந்தி எழுத்துகளை அழிக்கும்படி அறிக்கை விடுத்தார்.

1954இல் நவம்பர் மாதம் உலக புத்தர் மாநாட்டில் கலந்துகொள்ள பர்மா சென்றார். இராஜாஜி கொண்டுவந்த குலக்கல்வித் திட்டத்தை ஒழிக்க மாநாடு கூட்டினார்.

1955இல் காமராசர் ஆட்சி உண்மையான தமிழர் ஆட்சி. ஆகவே குடியாத்தம் தேர்தலில் காமராசரை ஆதரிக்க வேண்டும் என்று அறிவுறுத்தி பிரச்சாரமும் செய்தார். ஆகஸ்ட் மாதம் இந்தித் திணிப்பை எதிர்த்து அரசாங்கக் கொடி கொளுத்தும் போராட்ட அறிவிப்பை வெளியிட்டார்.

4–11–1956இல் திருச்சியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் திரு.மலையப்பன், I.A.S., கலெக்டர் தமிழர் என்ற காரணத்தால் இரு நீதிபதிகள் உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பு எழுதியதற்காக கண்டித்துப் பேசினார். அப்போது பெரியார் தந்த வாக்குமூலம் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது.

18–1–1957இல் திருச்சியில் திரு. வினோபாவே–பெரியார் சந்திப்பு நிகழ்ந்தது.

3–11–1957இல் தஞ்சையில் சாதியைப் பாதுகாக்கும் இந்திய அரசியல் சட்டத்தைக் கொளுத்த வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்தார்.

17–1–1961இல் தமிழர் தலைவர் என்ற நூலை எழுதியவரும், விதவைப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டவருமான சாமி சிதம்பரனார் இயற்கை எய்தினார்.

8–12–1973இல் பெரியார் அவர்கள் இறுதியாகக் கூட்டிய 'தமிழர் சமுதாய இழிவு ஒழிப்பு மாநாடு' சென்னை பெரியார் திடலில் நடைபெற்றது. இதில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

19–12–1973இல் சென்னையில் தியாகராய நகரில் தந்தை பெரியார் தன் வாழ்நாளின் இறுதிச் சொற்பொழிவாற்றினார். தன் வாழ்வில் செய்த செயல்கள் – நாம் இனிமேல் செய்ய வேண்டியவைகள் இவைகளைப் பட்டியலிட்டுக் காட்டி பல மணி நேரம் தன் நோயைப் பற்றியும் சிறிதும் கவலைப்படாது சொற்பொழிவாற்றினார். அதுவே அவர் ஆற்றிய மரணச் சாசனமாக அமைந்துவிட்டது.

24–12–1973 காலை 7–22 மணிக்கு மானிடச் சிற்பி – தமிழர் தலைவர் – பகுத்தறிவுப் பகலவன் – தன்மானத்தின் ஊற்று – சுயமரியாதைச் சிங்கம் – அரிமாநோக்கினன் – அகிலத்திற்கோர் எடுத்துக்காட்டு – ஆன்றவித்தடங்கிய சான்றோன் நம்மையெல்லாம் துயரக் கடலில் தள்ளிவிட்டு, ஓடி ஆடி உழைத்தது போதும் இனி சற்று கண்ணுறங்குவோம் என்று கண் மூடிவிட்டார். அதே நேரத்தில் தமிழர்களின் கண்களைத் திறந்துவிட்டார்.

அவரது அறிவுரைகளில் சிலவற்றையேனும் நாம் கடைப்பிடித்தால் நாம் தலைநிமிர்ந்து நடக்கலாம். எஞ்சிய நம் வாழ்நாளில் அவரது உரைகளை நாம், நாட்டில் பரப்புவோம்.

நம்மால் இது இயலுமா? என்று கேட்காதீர்கள். மனிதன் மனம் வைத்தால் ஆகாதது ஒன்றும் இல்லை. இமயத்தைக் கூட நகர்த்தி வைக்கலாம். முயன்றால் முடியாததும் உளவோ! ★

## திருவருள் கல்லூரிக்கு அரசு நிதியுதவி

நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் திருவருள் கல்லூரிக்குத் தமிழக அரசு ரூ.15 இலட்சம் நிதியுதவி வழங்குகிறது.

ந.மு.வேங்கடசாமி நாட்டார் தலைசிறந்த தமிழறிஞர் ஆவார். இவர் பல்வேறு நூல்களுக்கு உரை எழுதியுள்ளதுடன் பல நூல்களையும் எழுதித் தமிழுக்குப் பெருந்தொண்டாற்றியவர். அனைவரும் கல்வி கற்க வேண்டும் எனும் நோக்கில் தஞ்சைக்கு அருகில் "திருவருள் கல்லூரி" எனும் பெயரில் கல்லூரி ஒன்றினை நிறுவ, 1921–ஆம் ஆண்டிலேயே பெருமுயற்சி செய்த இவர் 1944–இல் இயற்கை எய்தினார். இவரது கனவு 1992–இல் நனவாகியுள்ளது. 14.10.92–இல் தஞ்சையில் நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் திருவருள் கல்லூரி தொடங்கப்பட்டுக் கடந்த எட்டு ஆண்டுகளாகச் சிறப்புடன் தனித் தமிழ்க் கல்லூரி நடைபெற்று வருகிறது.

நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் கல்விப் பணியும், தமிழ்ப் பணியும் ஆற்றிவரும் இக்கல்லூரிக்குக் கட்டட நிதியுதவியாகத் தமிழ் வளர்ச்சித் துறையின் வாயிலாக ரூ.15 இலட்சம் வழங்கப்படும் என தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்திருந்தார். ரூ.15 இலட்சத்திற்கான வங்கி வரைவோலையை 30.8.2000 அன்று முதலமைச்சர் அவர்கள் தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு.தமிழ்க்குடிமகன் அவர்கள் முன்னிலையில் கல்லூரி முதல்வர் பி.விருத்தாசலம் அவர்களிடம் நேரில் வழங்கினார். ★

# எருது கட்டு

□ பா.செயப்பிரகாசம்

கழுமரம் செய்வது, உமையம்மன் கோயிலுக்கு முன்னால் கழுமரம் நாட்டு, சேவலைக் குத்தி வைப்பது நாடாக்கமார் செய்தார்கள்.

கோயிலுக்கு இடது பக்கவாட்டில் பெரிசாய்ப் பரந்த எருது கட்டுக்களம். எருது கட்டு மாடுகளுக்கு ஏற்பாடு செய்தல், பயிற்சி தரப்பட்ட மாடுகள் எங்கே இருக்கிறது என்று பார்த்து, சேகரம் செய்தல், ரெட்டி, நாயுடு, வெள்ளாளர் வேலை. அம்மன் பொங்கலுக்குத் தலைமை கொடுப்பது இவர்கள்.

சூரம்பட்டி முதல் உப்பத்தூர் வரை ஓடைமரம் ஒன்றுவிடாமல் மொழுக்கை, மொழுக்கையாக தோலுரித்த கோழிகள் மாதிரி நின்றன. ஓடைமரப்பட்டையை உரித்து, ஓடைப்பள்ளத்தில் ஊறவைத்து வடம் திரிப்பார்கள். ஓடை நார் பலம் வடக் கயிறுக்குக் கூட வராது. கடையில் வாங்குகிற கயிறுகளுக்குப் பலம் தாங்காது. வடம் திரிப்பது, எடுத்து வருவது, கோயிலுக்கு முன்னால் வைத்து பூசை செய்து ஆசி வாங்குவது மாதிரி வேலைகளைக் குடும்பமார்கள் செய்தார்கள். முன்னேற்றம் கண்டுவிட்ட இந்தக் காலத்திலும் இந்த வழிமுறைதான் இருந்து வருகிறது.

ஒவ்வொரு சாதிக்கும் ஒரு தொழில், அம்மனுக்கு அவரவர் செய்கிற காணிக்கை மாதிரி செய்தார்கள்.

சூரம்பட்டி எருதுகட்டுக்கு எட்டுத் திக்கிலிருந்தும் சனங்கள் கூடினார்கள். இன்றைக்கும் அவ்வளவு பெரிய திடலில் எவ்வளவு கட்டுப்படுத்தினாலும், கூட்டம் மறுகி உள்ளே போகும். எருதுகட்டும் களத்தை ஒட்டியிருந்த வீடுகளில் ஓடுகளைப் பிரித்து, விட்டங்களில் உட்கார்ந்து வேடிக்கைப் பார்த்தார்கள். ஆனால் வீடுகளின் வாசல்கள் சாலையை நோக்கியே பார்த்திருந்தன. மக்கள் கூட்டம் ஏறி வர வர மாடுகள் விளையாடும் களரி வட்டம் சுருங்கிப் போனது.

மாடுகளின் பொச்சுக்குப் பிறத்தாலேயே விரட்டிட்டுப் போக விதியில்லை. மாடு ஏப்பை சாப்பையென்றால் விரட்டலாம். ஓங்கு தாங்கான, சுளிவான மாடுகள் திரும்பிப் பாய்ந்தால், புலிப்பாய்ச்சல்தான். உள்ளே திரும்பிப் பாய்கிற மாடு ஒரு உழப்பு உழப்பிவிட்டுத்தான் போகும். முழுக் கூட்டமும் பின்னால் சாய்ந்து விழுந்து மிதிபடும்.

உமையம்மன் பண்டிகை பார்க்கவும், எருதுகட்டை வேடிக்கை பார்க்கவும், வீரலட்சுமியும், புலேந்திரனும் வந்து சேர்ந்திருந்தார்கள். புலேந்திரன், வீரலட்சுமி இரண்டுபேர் முகங்களும் அங்கே வந்து இறங்கியதும் சட்டென்று ஒடுங்கிவிட்டது.

ஒவ்வொரு முகமாய்ப் பார்த்தார்கள். தெரிந்த எந்த முகத்திற்குள்ளும் இதயம் தெரியவில்லை. இதயங்களில்லா வனாந்தரம் போல் அவர்களுக்குப் பட்டது. தெரிந்த முகங்களில் இறுக்கத்தின் எல்லைகள் இன்னும் விஸ்தீரணமாகியிருந்தன.

எருது கட்டு ஆரம்பிக்க இன்னும் நேரம் இருந்தது. இந்தத் தடவை கட்டுக் கோப்பாக நடக்கும் என்று



பேசிக் கொள்ளப்பட்டது. காக்கி உடை, கம்பு, துப்பாக்கி சகிதம் புது டி.எஸ்.பி. வந்திருக்கிறார் என்றும் சொன்னார்கள்.

ஊர் ஒற்றுமை வலுவாக இருந்தது ''அப்படி தனிப்பட்ட ஆள் தப்பு, தண்டா பண்ணினால் அதுக்கு அவனவன்தான் பொறுப்பு. ஊர் ஏத்துக்கிட்டு வரமாட்டோம்'' என்று முடிவு செய்திருந்தார்கள்.

களரியில் ஒவ்வொரு ஊருக்கும் ஒரு இடம். இது அவரவர்களாக ஒதுக்கம் செய்து கொள்வது. முந்தின வருஷம் இந்த ஊர் ஆட்கள் நின்ற இடம் என்று மனசுக்குள் தங்கி அது அப்படியே அடுத்தடுத்த வருடத்திற்கும் தொடர்ந்தது.

''அப்படி குறிச்சா வச்சிருக்கு'' வீரலட்சுமிதான் தெரியாமல் கேட்டாள். ஆச்சரியமாய் கூட்டத்தை ஏறெடுத்துப் பார்த்தாள்.

''இல்லே அவங்க அவங்களே குறிச்சிக்கிட்டது தான்'' புலேந்திரன் சொன்னான்.

வீரலட்சுமியின் ஊர் ஆட்கள் இருக்கும் இடம் நோக்கி நடக்கலாமா என்று யோசித்தார்கள். நல்லது, பொல்லது என்றால் அவர்கள் தானே உதவ வேண்டும். எதிரே வந்த ஊர் ஆட்கள் ஒன்றிரண்டு பேரைப் பார்த்ததும் அது தப்பான எண்ணம் என்று தென்பட்டது. அவர்கள் வந்தவேகம், இவர்களைப் பார்த்துவிட்டுச் சென்றவேகம் சரியாகப்படவில்லை. புலேந்திரனும், வீரலட்சுமியும் எருது கட்டு களம் விட்டு நீங்கி விடலாமா என்று நினைத்தார்கள். யாருக்கோ பயந்து ஏன் போவது என்று அவனுடைய காக்கங்கரை ஆட்கள் கூடி இருக்கும் இடத்திற்குப் பேச்சுப் பராக்கில் வந்தது மாதிரி போய் பார்த்து வரலாமா என நினைத்தான். பிறகு எண்ணத்தை மாற்றிக் கொண்டான். எதிர்த்தாற்போல் வந்தவன் அண்ணன் மாதிரி தெரிந்தது. வீரலட்சுமி அண்ணே என்று கூப்பிட நினைத்தாள். அதற்குள் நிறைகுளத்தான் ஒரு முக்கு வாட்டில் திரும்பி கூட்டத்தினுள்ளே மறைந்து போனான். அதே பழைய முகம். பழைய வெறுப்பு கூடுகட்டி பளிச்சிட்டு மின்னி மறைந்தது. எதிரே இருக்கும் ஆள் தெரியாத அளவுக்கு கெட்டியான ரெண்டு வருசப்பகை காலத்தின் காற்றில் ஓடிப்போயிருக்கும் என்று நினைத்தாள். இன்னும் அந்தக் கணப்பு அவர்கள் இதயத்தில் இருந்து மறைந்துவிடவில்லை. இதயத்திலிருந்து கண்களுக்கு அது மாற்றப்பட்டிருந்தது. இப்படித்தான் ஒவ்வொரு முகமும் இருக்குமோ? வீரலட்சுமியின் முகத்தில் பயமாய்ப் படர்ந்தது.

இருட்டு மாதிரியான தோல் - அது புலேந்திரன்,




இளம் அந்திச் சிவப்பு போல் ஒரு நிறம் - வீரலட்சுமி. இரண்டு நிறமும் ஒன்றுக்கொன்று எப்படி பின்னிக் கொண்டன? தோல் தாண்டி, சதைக்குள், ரத்தத்துக்குள், ரத்தநாளத்துக்குள், நடுவாக இருக்கும் சாதி தாண்டி அவர்கள் பின்னிக் கொண்டார்கள். சாதி தாண்டுகிறபோது, நிறத்தையும் தாண்டிவிட்டார்கள்.

பழைய ஆசைகள், தூசு, தும்பு தட்டிவிட்டாலும் துடைப்படமாட்டேனென்கிறது. அம்மா, அண்ணன், அழகரக்கா, தாயிச்சித்தி, குருவம்மாள்மதினி, ருக்கு அத்தை எல்லோரையும் பார்க்க வேண்டும் என்ற ஆசை வீரலட்சுமிக்கு மனசுக்குள் எதுக்களித்தது. வீரலட்சமிக்குத்தான் இதெல்லாம். அவனுக்கு தனது காக்கங்கரை மக்களைப் பார்க்க வேண்டுமென்று ஆசையெல்லாம் ஒரு போதும் இல்லை. ஊரைவிட்டு



ஓடிவந்தபோதே, அவர்களையும் ஒதுக்கிவைத்து விட்டிருந்தான்.

ஊரைவிட்டு ஓடிப்போய் இரண்டு வருசமாகி விட்டது. உறவுகள் விரட்ட விரட்ட அவர்கள் ஓடினார்கள். அவர்களாகவே தேடிக்கொண்டதுதான். தாய் வேண்டாம், பிள்ளை வேண்டாம், ஊர் வேண்டாம், உறவு வேண்டாம் என்று ஓடி இரண்டு வருசம் ஓடிவிட்டது.

மேல்குடி, கீழ்குடி என்று எழுதப்படாத இதயங்கள் அவர்களுடையது. ஆசிரியப் பயிற்சிப்பள்ளியில் படித்துக்கொண்டிருந்த நாட்களில், அந்த வேற்றுமை அரும்பி பயிராவதற்கு முன்னமே பழகிவிட்டார்கள். பக்கத்து ஊர் என்றதால் மண்ணின் அந்நியோன்யம் அதிகமானது. தொடர்பு இறுகுவதற்கு இரண்டு ஆண்டுகள் செலவாகின. பயிற்சி முடியும்வரை காத்திருந்தார்கள்.

ஒரு நடுச்சாமத்தில் திடீரென இரண்டு பேரும் வந்து நிற்கையில் அம்மா பதறிப்போனாள். அரிபூச்சி விழுந்ததுபோல் நெஞ்சுக் குழிக்குள் அரித்தது.

எடுத்தவுடனே ''வெளியே போடா பீத்திங்கறநாயி'' என்றாள்.

அம்மாவை, தன் அருகில் நிற்கிற புலேந்திரனை சமாதானப்படுத்த வேண்டி யிருந்தது. ஒரே நேரத்தில் இருவரையும் சமமாகப் பாவித்து சமாதானப்படுத்த சாத்திய மில்லை. வீரலட்சுமி புரேந்திரனிடம் மெதுவாக ''நீங்க கொஞ்சம் வெளியே நில்லுங்க. நா அம்மாகிட்ட பேசிட்டு வர்றேன்'' என்றாள். வெளியே சுவர் அருகில் புலேந்திரன் ஒதுங்கினான். அப்படியே பிறகு வெளி யேறினான்.

ஒரு நட்டநடுப்பகலில் அம்மா, வீரலட்சுமி யின் தலையில் மண்ணெண்ணை டின்னைக் கவிழ்த்தாள். வீரலட்சுமி அதிர்ச்சியாகி சாமி கொண்டாடி போல் உடம்பை, தலையை உதறி வீறிட்டாள். என்ன நடக்கிறது என்று அறியும் முன்பே அம்மா தீக்குச்சியை உரசிப்போட்டாள். உயிருள்ள ஓர் அக்கினிச்சட்டிபோல் அவள் எரிந்து போயிருக்க வேண்டும். வீட்டுக்கு வெளியே தாவிக்குதித்தாள். மரணபயம் தாவி ஓடவைத்தது.

ஊர் முழுக்க தெருவில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க தெப்பலாய் மண்ணெண்ணெய் நனைய ஓடினாள்.

இரண்டு வருடம் ஊர் எல்லை தெரியாமல், இரண்டாம் பேருக்குத் தெரியாமல் வாழ்ந்தார்கள். அன்றைக்கே ஒரு கொலை நடந்திருக்க வேண்டும். அம்மாவின் மூர்க்கத்தனத்தை நினைத்தால் இப்போதும் குருத்து எலும்பு சில்லிடுகிறது.

வீரலட்சுமி மேல் புலேந்திரனுக்குச் சின்ன கோபம் நெம்பியது. திருவிழா பார்க்கிற மாதிரி போய் வரலாம்

என்று அவள்தான் சொன்னாள். மேல்சாதி இழவுகளிலிருந்தும், அவனுடைய கீழ்சாதி அசிங்கங்களிலிருந்தும் கண் விழிக்காமல் ஒதுங்கி இருக்க புலேந்திரனுக்குப் பிடித்தது. ''திருவிழா சாக்கில் போய் வரலாம்ன்னு நீதான் சொன்னே'' என்று சன்னமாய்க் கோபித்துக் கொண்டான். அவள் அதற்குப் பதில் எதுவும் சொல்லவில்லை. மண்வாசனை ஊரைப் பார்த்து, கழுத்துப்பிடியாய்த் தள்ளுகிறபோது, யாரால்தான் தப்பிக்க முடியும்.

புலேந்திரனுக்கு, அப்படி ஒரு மன ஆசை கிடையாது. மனசு இறுக்கம் ஜாஸ்தி. தன் சனத்திடமும் ஊரிடமும் அறுத்தெறிந்துவிட்டு ஓடின அந்த நாள் அவன் மனசில் தீயள்ளிப் போட்டிருந்தது. சொந்த சாதி சனங்கள் மீது கொண்ட பற்றும் ஊரின் இனிமையான பாதைகளும் அந்தத் தீயில் சாம்பலாகியிருந்தன.



எந்த ஊர்க்கும்மி என்று தெரியவில்லை. அந்த இடத்திற்கு அவர்கள் நகர்ந்தார்கள். இப்போதெல்லாம் பெண்கள் கும்மி நவீனமாகிவிட்டது. கும்மி, கோலாட்டம் எல்லாம் சினிமா பாணிதான். கும்மி சொல்லிக் கொடுக்கும் வாத்தியார்களுக்குச் சினிமா மெட்டில் பாட்டுக் கட்ட தோதாக இருந்தது. திரும்பின பக்கம் எல்லாம் ஆடியோ கேசட் - போட்டுப் போட்டுப் பார்த்து சுளுவாக வரைந்து தள்ளினார்கள். ஒன்றுபோல உடை, பாவாடை, தாவணி, அச்சாக சினிமா குரூப் டான்ஸ் மாதிரி இருந்தது.

காக்கங்கரை, சூரம்பட்டி, உப்பத்தூர், தெற்கோடை, புளியங்குளம் அஞ்சு ஊர்களுக்கும் தனித்தனியாய் அங்கே கும்மிக் கொட்டு நடந்தது. அங்கங்கே வட்டமாய் கூட்டம். எருதுகட்டு ஆரம்பிக்குமுன் மரத்தடி நிழலில், கும்மி கொட்டினார்கள்.

''அஞ்சு ஊர் கும்மி தட்டுதலும் ஒரேமாதிரி தான், சுவாரஸ்யம் இல்லே''. உள்நடுக்கம் எப்படி இருக்கிறது என்பதை தனக்குத்தானே சரிபார்க்க ஒரு பேச்சுப் பேசினாள்.

''வெளங்கவா செய்யும், ஒன்னப் பார்த்தா ஒன்னப் பார்க்க வேண்டாம்'' புலேந்திரன் பதில் சொல்லியபடி அவளை அடுத்த இடத்திற்குக் கூப்பிட்டான். மனசில் நெம்பும் பயத்தைச் சரிப்படுத்த அவன் எதையோபேச வேண்டியிருந்தது.

புலேந்திரனுக்குக் கண் பிடரியில் இருந்தது. யாரோ தொடர்ந்து பின் வருகிறார்கள் என்பது தெரிந்தது.

அருவமில்லாமல் கோயிலுக்குள் நுழைந்தார்கள்.

நேர்த்திக் கடன், அக்னிச் சட்டி இதுகளுக்கெல்லாம் ஊரிலிருந்து அடித்து வருகிற கொட்டு, குழலுக்கு அம்மன் வாசல் முற்றம்தான் எல்லை. கொட்டுக்காரர்கள், குழல்காரர்களுக்கு உள்ளே அனுமதியில்லை. ஆனால் நேர்த்திக்கடன் செலுத்துவது, அக்கினிச்சட்டி எடுப்பது, பொங்கல் வைப்பது எல்லாம் கோயில் பிரகாரத்துக்குள் மேற்குடியினர் செய்தார்கள்.

பூசாரி காட்டிய தீபத்தட்டு எல்லார் முகத்திலும் ஒளி அடித்தது. அந்த இருவருக்கும் நேரே வருகையில், ''அப்படியே பொசு பொசுங்குது, போலீஸ் இருக்குதேன்னு பார்க்கிறேன்'' என்றான் மல்லையசாமி.

''பொறத்தாலேயே போய் புட்டத்தில் கத்திய சொருகிட்ட என்ன?''

''ஒரே இனமாவா இருக்கு. பாதி இதுவும் பாதி அதுவுமா பெறண்டு போயில்லே நிக்குது''

சந்தேகம் இல்லை. வீரலட்சுமியின் ஊர்க்கார சொந்தங்கள் தான்.

புலேந்திரனும் வீரலட்சுமியும் தீபத்தட்டை கைகள் நீட்டி தொட்டுக் கும்பிட்டு கண்களில் ஒற்றிக் கொண்டார்கள்.

''இங்கே இருந்து போயிடலாம்'' வீரலட்சுமி அவன் காதில் படபடத்தாள்.

''ஒழுங்கு மரியாதையா போயிருங்க''. ஒருத்தன் விறைப்பாய் அவர்களை உரசிந்து தோளுக்க வலது பக்கமாய் எச்சரிக்கை விட்டுவிட்டுப் போனான்.

தென்மூலை இருட்டி வந்தது. மப்பும் மந்தாரமாய் மழை கூடாரமிட்டது. ஒளிந்திருந்த மேகங்கள் ஒன்றுகூடி இனிய சாயந்திரத்தை பயமுறுத்தின.

கூட்டம் மழைக்குச் சிதறி ஓடியது. களரியில் சப்புளா, சளபுளா என்று ஆகிவிட்டது. எருதுகளை விட்டுவிட்டு ஓடும் இளவட்டங்கள், லாரிகள், வேன்களில் உள்ளே ஒதுங்க இடம் தேடும் மனிதர்கள், மரத்தூரில் ஒண்டிக்கிடக்கும் ஆட்கள், பேய் பிடித்த பெண், கோடங்கியின் அடிக்கு பரசி பரசி ஆடுவதுபோல் பெருவாரிக் காற்றால் சுழன்று சுழன்று ஆடும் மரங்கள்.

''என்ன அண்ணங்காரரே சௌக்கியமா?'' கம்மாய்க் கரை மேட்டில் இருந்த ஒரு மரத்தூரில் ஒண்டியவனைப் பார்த்து கோலத்திதான் கேட்டாள். புலேந்திரன் விழி அகலப் பார்த்தான். அவனுக்கு முதலில் நெகால் பிடிபடவில்லை. 'அரிச்சலாய் ஞாபகம் வந்தது. அதற்குள் வீரலட்சுமியை அடையாளம் கண்டு கொண்டவளாய் ''மதினி நல்லா இருக்கீங்களா?'' என்றாள்.

வீரலட்சுமியை விட கோலத்தி பத்து வயசு கூடியவள். சின்னவளானாலும் உறவின் மரியாதையில் அண்ணிதான்.

வீரலட்சுமியின் கையைப் பிடித்து மழைநீர் படாமல் மரத்துக்கு அடியில் ஒதுக்கினாள்.

கோலத்தியின் மேலும், பக்கத்திலிருந்த சின்னப் பொண்ணு மேலும் மரத்து நீர் சொட்டுப் போட்டது. ''நீங்க நனையறீங்களே'' என்று கூசி ஒதுங்கிய வீரலட்சுமியை ''ஆமா மழையிலே நனைஞ்சா உடம்பு இத்தா போகுது. மழையில நனையனும், வெயில்ல காயணும், இல்லேன்னா பொழப்பு ஓடாதே'' சின்னப் பொண்ணு பேசினாள். கோலத்தி கண்ணோரம் சிரிப்பைத் தேக்கி ''ஒரேயடியா தாளிக்காதேடி. இப்பவே கமறலடிக்கு என்று மடக்கினாள். இரைச்சல் அடிக்கும் மழையையும் வெடவெடக்கும் குளிரையும் தாண்டி அங்கே கதகதப்பாகியது.

விளாசி அடித்த மழை நின்றது. மழைத் தண்ணி, சகதியில் கால் வைக்கக் கூசியது. கோலத்தி வீரலட்சுமியையும் புலேந்திரனையும் பேருந்து நிறுத்தத்திற்கு நடத்திக் கூட்டிப் போனாள்.

''இத்தனை வருசம் கண்காணாம இருந்திட்டீங்களே அப்பு'' என்றாள் பாசத்துடன் புலேந்திரனிடம்.

அவளுக்கு அவன் பேரில் தான் வருத்தம். அதெல்லாம் அவனுக்குப் புலப்படவில்லை.

''அந்த மானைக்கி ஓடிப்போனவங்க, நம்ம வீட்டில வந்து நொழைஞ்சிருக்கலாமி[illegible]லேப்பு''

''அதானே காக்கங்கரையிலே இல்லாத சனங்களா? என்னமோ அவங்களுக்குத் தோணலே'' என்றாள் சின்னப் பொண்ணு.

ஊர் வந்து சேர்ந்ததும் சனங்கள் அதிசயித்துப் போனார்கள்.

''அடி ஆத்தே, யாரிது? வேத்து ஆளாத் தெரியுது''

''ஆமா, வேத்து ஆளத்தான் கூட்டி வந்திருக்கிறோம்'' கோலத்தி சொன்னாள். முகத்தில் பெருமை பிடிபடவில்லை''. ''நீங்க பாக்கறதுக்குத் தான்'' என்றாள்.

சின்னக் குடிசை, செம்மண் தேரியை ஒட்டி பனைவிடலிகளுக்கிடையில், ஓலை போட்டு வேய்ந்திருந்தது. செதில்கள் போல், காற்றுக்குத் தூக்கிய ஓலை இடுக்கில் நிலாக்கதிர் பாய்ந்தது.

சுற்றிக் கூடி உட்கார்ந்திருந்த யாருக்கும் புழுங்கவில்லை. புலேந்திரனுக்கும் வீரலட்சுமிக்கும் சிறு சிறு வேர்வைப் பொடிகள்.

''அப்படியும் தன் சனங்க இருக்கிறபோது, என்ன பயம்''

வீரலட்சுமியின் கழுத்தில் அரும்பிய வியர்வையை புடவை நுனியில் ஒத்தித் துடைத்தாள். ஓரக்கண்ணால் புலேந்திரனை இடித்தாள் சின்னப்பொண்ணு.

''ஆமாம், நானுந்தான் கேக்கறேன்'' உள் நுழைந்தபடியே பின்புறம் தாவணியை உட்கார வசதியாய் எடுத்து விட்டுக் கொண்டே நல்லகண்ணு கேட்டாள்''. ''இப்படித்தான் வர்றதா? வர்றோம், போறோம்னு முன்ன பின்ன சொல்லிக்காம வந்தா என்ன செய்றது? கறிச்சட்டியை கழுவிக் கவிழ்த்து வச்சாச்சி'' அவள் சண்டை போட வந்திருக்கிறாள்.

''நீ சண்டை போடுறதுக்கின்றே வந்திருக்கே. பாத்தாத் தெரியுது. நீ என்ன இருந்தாலும் போடு ஆத்தா. தம்பி சாப்பிடும்''.

கோயிலில் நடந்த கேவலத்தைத் தன் சனங்களிடம் புலேந்திரன் சொல்லியிருக்க வேண்டும்.

அவன் சொல்லவில்லை.

– ''இரவு மழை'' நூலிலிருந்து
வெளியீடு : புதுமலர் படைப்பகம்,
கோவை. ●

# அண்ணா ஒரு காவியம்

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும் தெய்வத்துள் வைக்கப் படும்"**

*– குறள்*

ஒரு எழுத்து தனித்து வந்தோ! பல எழுத்துகள் தொடர்ந்து வந்தோ! ஒரு பொருளைக் குறிக்குமானால் அதற்குச் சொல் என்று பேர். மேலும் தொல்காப்பியர் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்றார்.

இதை அளவுகோலாக வைத்துப் பார்த்தால் 'அ' என்பது உயிரெழுத்து 'ண்' என்பது மெய்யெழுத்து 'ணா' என்பது உயிர் மெய்யெழுத்து. இந்த மூன்று எழுத்துக்களாலாகிய 'அண்ணா' என்ற சொல்லிற்கு என்ன பொருள்?

ஓரளவு சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் தமிழ் மொழியில் அமைந்த ஒவ்வொரு சொல்லிற்கும் என்ன பொருள் உள்ளதோ அவ்வளவு பொருளையும் தன்னுள் அடக்கிக்கொண்டு, அடக்கமாக ஆனால் விண்ணிலும் பரந்துபட்டதாக அமைந்த சொல் 'அண்ணா' என்பது.

அண்ணா என்ற சொல்லிலேயே தமிழ் எழுத்துகளின் மூவகையான உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய் எழுத்து மூன்றும் அமைந்துவிட்டது. ஆயுத எழுத்து என்று ஒன்று இருக்கிறதே! என்னவாயிற்று என்று கேட்கலாம்.

யாருடைய மனதும் புண்படாது பேசும் இயல்புடையவர் அண்ணா. ஆகவே அவர் என்றுமே ஆயுத எழுத்தைப் பயன்படுத்தியதேயில்லை.

ஆகவே; அண்ணா என்றாலே தமிழ் என்று பேர். பாவேந்தர் கூறியதைப் போல் 'தமிழுக்கும் அமுதென்று பேர்' என்பதையடுத்து அண்ணாவிற்கும் தமிழ் என்று பேர் என்ற தொடரையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். சங்க காலத்திற்குப் பிறகு தமிழுக்குப் புதிய மறுமலர்ச்சியைத் தந்தவர் அண்ணா. தமிழால் அண்ணா உயர்வு பெற்றாரா? அண்ணாவால் தமிழ் உயர்வு பெற்றதா? என்று பிரித்துச் சொல்ல முடியாது. அந்த அளவிற்கு அவர் வாழ்வும் வாக்கும் இணைந்துவிட்டது.

தமிழ்நாட்டையே மாற்றிக்காட்டிய இருளை ஓட்டிய இப்பெருமகனுக்கு அடைமொழியோ! உவமைச் சொற்களோ! ஒன்றும் இல்லையா! என்று கேட்கலாம்.

**யாருக்கு உவமையும் அடைமொழியும்**

நாம் கோவிலுக்குச் செல்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது வெறும் கோவில் என்று சொல்வது இல்லை. திருக்கோவில் என்று அடைமொழி கொடுக்கிறோம், திருக்கோபுரம் என்கிறோம், திருக்கொடி மரம் என்கிறோம், திருநந்தி என்கிறோம், திருப்பலிபீடம்



□ புலவர் கு. அய்யாறன்

என்கிறோம், திருச்சுற்று மாளிகை என்கிறோம். திருநந்தவனம் என்கிறோம். திருமணி என்கிறோம். இவ்வாறு, கோவிலுள்ள எல்லாப் பொருள்களுக்கும் அடைமொழி கொடுக்கிறோம். ஆனால் மூலஸ்தானத்தைக் குறிக்கும்போது எந்த அடைமொழியையும் நாம் கொடுப்பதில்லை. மூலஸ்தானம் அல்லது கருவறை என்று மட்டுமே அழைக்கிறோம். ஏனென்றால் அந்த இடத்திற்கு உவமை சொல்லவோ! அடைமொழி கொடுக்கவோ! தமிழில் சொற்கள் இல்லை. தேடினாலும் கிடைப்பதில்லை.

மிகச்சிறந்த ஒப்புயர்வற்ற பொருளுக்கு அடைமொழி, உவமை கூறுதல் மரபன்று.

ஆகவேதான் இளங்கோவடிகள் சிறந்த பொருளான மூன்று பொருளுக்கு எவ்விதமான அடைமொழியும் உவமையும் தராது,

*"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்"*
*என்றும்;*
*ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் என்றும்;*
*பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும் என்றும்*

கூறிச் சென்றார்.

ஆகவே அண்ணாவிற்கும் அடைமொழி தேவையில்லை. அண்ணா என்ற மூன்றெழுத்து போதும். தமிழர் மூச்சு அண்ணா. அண்ணா தமிழர் மூச்சு என்பதை மட்டும் நம்முடைய உள்ளத்தின் விருப்பத்திற்கு மட்டும் வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம்.

**பிறப்பு வளர்ப்பு**

*சோழநாடு சோறுடைத்து*
*பாண்டிய நாடு முத்துடைத்து*
*சேர நாடு வேழமுடைத்து*

அதுபோல் தொண்டைநாடு சான்றோர் உடைத்து என்று கூறுவார்கள். பிறவிச் சான்றோராகிய அண்ணா பிறந்ததும் தொண்டை நாட்டின் தலைநகரான காஞ்சிதான்.

காஞ்சி புராண வாயிலாகப் பார்த்தாலும், வரலாற்று வாயிலாகப் பார்த்தாலும் சொல்லொண்ணாச் சிறப்பு வாய்ந்தது.

பாராண்ட மன்னர்களும் மண்டலாதிபதிகளும் காஞ்சியின் பெருமையை உலகறியச் செய்தனர்.

கல்விப் பணியைச் செய்வதற்காகவே தன் செல்வம் அனைத்தும் ஈந்த பச்சையப்பர் பிறந்த ஊர் காஞ்சி.

சிறப்பான ஆடையில்லா மனிதனை அரை மனிதன் என்பார்கள். அத்தகையோருக்கு பட்டாலும் பருத்தியாலும் ஆடைநெய்து கொடுக்கும் ஊர் காஞ்சி. காஞ்சிப் பட்டென்றால் காசினியில் அறியாதார் யார்?

திருக்குறளுக்கு உரையெழுதிய பத்து பேர் பழைய உரையாசிரியர்கள். அவைகளில் சிறந்த உரை பரிமேலழகர் உரை என்று தமிழறிஞர்கள் கூறுவர். உரையாசிரியர் பரிமேலழகர், பிறந்த ஊர் காஞ்சி.

இங்குள்ள கோவிந்தராஜப்பெருமாள் கோவிலுள்ள பிரகாரத்தில் அமர்ந்துதான் உரையெழுதினார். அதற்குப்பின் கணக்கற்றோர் உரையெழுதியிருக்கின்றனர். இருந்தும், பரிமேலழகர் புகழ் இன்றும் பேசப்படுகிறது.

சீனத்திலிருந்து வந்த யுவான் சுவாங் காஞ்சிக்கு வந்து காஞ்சியின் சிறப்புகளைக் குறிப்பெடுத்துச் சென்றிருக்கிறார்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த காஞ்சியில்தான் நம்முடைய அண்ணாவும் பிறந்தார்–தவழ்ந்தார்–வளர்ந்தார்–கல்வி கற்றார்.

**பாவேந்தரும் அய்யன் திருவள்ளுவரும்**

பாவேந்தர்,

***தலைசிறந்த பேச்சுவல்லோன் தமிழவீரன்***
***தமர் என்றும் தான் என்றும் நினைப்பதன்றித்***
***தமிழ்நாட்டின் நலத்திற்கே உயிர் உடல்கள்***
***அமைக என இரவு பகல் உழைக்கும் மேலோன்***

என்று கூறினார்.

அய்யன் திருவள்ளுவரிலிருந்து மூன்று குறட்பாக்களை எடுத்துக் கொள்வோம். பெரும்பாலான குறட்பாக்கள் அண்ணாவின் வாழ்வை விளக்குபவை. இருப்பினும் இம்மூன்று குறட்பாக்கள் அண்ணாவிற்கு என்றே அமைந்ததுபோல் உள்ளன. பாவேந்தர் கவிதைக்கும் இம்மூன்று குறட்பாக்களுக்கும் சற்று விரிவான முறையில் ஓரளவு நம்முடைய சிற்றறிவுக்கு எட்டிய வரையில் விளக்கம் கண்டுவிட்டால் அண்ணாவைப் பற்றி நூற்றில் ஒரு பகுதியை நாம் அறிந்துகொண்டவர்கள் ஆவோம்.

*"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்*
*வேட்ப மொழிவதாம் சொல்"*

*"சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல் அச்சொல்லை*
*வெல்லும்சொல் இன்மை அறிந்து"*

*"சொலல்வல்லன் சோர்வுஇலன் அஞ்சான் அவனை*
*இகல்வெல்லல் யார்க்கும் அரிது"*

– என்ற குறட்பாக்களுக்கு இலக்கிய இலக்கணமாகத் திகழ்ந்தவர் அண்ணா.

**மந்திரச்சொல்**

அண்ணா என்ற சொல் இருக்கிறதே! நான் அந்தச்



ஆம்! அவரில்லாவிட்டாலும், அவர் பெயர் ஒன்றே நம்மை வாழவைக்கிறது.

அண்ணாவின் இதயத்தை இரவலாகப் பெற்ற கலைஞர், அந்த இதயத்தை பழுதின்றி பேணி காத்திடும் தாயாக நம்மையெல்லாம் அரவணைத்து வழிநடத்தி வருகிறார்.

இத்தகைய உள்ளத்தைப் பெற்ற அண்ணா நம் நாட்டில் தோன்றி செயற்கரிய செயல்களைச் செய்த தந்தை பெரியாருடன் இணைந்து, அவரை மட்டுமே தலைவராகக் கொண்டு செய்த தொண்டுகள் ஏராளம்!

சொல்லை மட்டும்தான் சொல்கிறேன். அந்தச் சொல்லிற்குரிய உருவத்தைக்கூட அல்ல – அந்த ஒரு சொல்லே நம்மவரையும் தமிழ்நாட்டவரையும் வாழவைக்கும் மந்திரச் சொல்லாகும்.

மாணிக்கவாசகர் சிவனைப்பாட வந்தபோது திருவாசகத்தில் முதன்முதலாகக் குறிக்கும்போது நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க! இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க! என்று கூறினார்.

“நமச்சிவாய” என்ற சொல்லைச் சொன்னாலே போதும் – அப்பெயரே அனைவரையும் வாழவைக்கும் என்று கூறி அதன்பிறகுதான் அப்பெயருக்குரியவரான நாதன்தாள் வாழ்க என்று கூறிச்சென்றார்.

மாணிக்கவாசகருடைய கருத்தை நாம் அப்படியே நம்முடைய வாழ்க்கைக்கும் பொருத்திப் பார்க்க வேண்டும்.

மாசறு பொன்னாகவும், வலம்புரி முத்தாகவும், மின்னும் வைரமாகவும் மிளிர்ந்த நம் அண்ணா வங்கக் கடலோரம் நீங்கா துயில் கொண்டதேனோ!

### வாழவைத்துக் கொண்டிருப்பது எது?

இந்நிலையில் நம்மை வாழவைத்துக் கொண்டிருப்பது எது? நம்மை தலைநிமிர்ந்து நடக்கவைத்தது எது? தமிழகத்தை இன்றளவும் நடத்திக் கொண்டு சென்று கொண்டிருப்பது எது?

### திருப்பிய திருப்பூர்

நம்முடைய அண்ணா கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு சிலகாலம் ஆசிரியராகப் பணியாற்றினார். ஆசிரியர் என்றாலே மாணாக்கரிடையே உள்ள குற்றங்களை நீக்குபவர் என்பதுதானே பொருள். சிறிய எல்லைக் கோட்டிற்குள் நின்று குற்றங்களைப் போக்குவதைவிட பரந்துபட்ட, புரையோடிய அப்போதைய குற்றங்குறைகளைப் போக்குவதில் தன்னுடைய பங்கும் இருக்கவேண்டும் என்று அவருடைய உள்ளத்தின் அடித்தளம் உறுத்தியது.

அண்ணா பள்ளிப் பருவத்திலே பல மேடைகளில் ஏறியவர், மலையருவிபோல் கருத்துகளைக் கொட்டியவர், சொல்லாடலிலே சோர்வு படாதவர். மாணக்கர் பருவத்திலேயே மேடைப்பேச்சிற்கு இலக்கணம் வகுத்தவர்.

இப்படிப்பட்ட ஒருவரைத்தான் அன்றைய நீதிக்கட்சி தன்னுடைய கட்சிப் பிரச்சாரத்திற்காகத் தேடிக் கொண்டிருந்தது. அதன் பொருட்டு பெரியதோர் வலையும் வீசப்பட்டிருந்தது.

இந்நேரத்தில்தான் அண்ணா அவர்கள் திருப்பூரில் பெரியாரின் பேச்சைக் கேட்டார், நிலை கலங்கினார், இனம் தெரியாத பற்றும் பாசமும் பெரியாரிடம் அண்ணாவிற்கு ஏற்பட்டது.

தமிழகத்தின் நற்பேறு அவர்களிருவரும் சந்தித்தனர். அச்சந்திப்பின்போது பெரியார் அண்ணாவிடம் ஒரு கேள்வி கேட்டார். “எம்.ஏ. படித்து முடித்தவிட்டேன் என்கிறாய், மேலும் என்ன செய்யப் போகிறீர்கள்” என்றார்.

“தங்களுடைய கருத்துகளைக் கேட்டபிறகு, எனக்கு ஏதாவது சமுதாயப் பணியாற்ற வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டுள்ளது” என்றார்.

இதைக் கேட்டதும் பெரியாருக்கு அதிர்ச்சியே ஏற்பட்டது. பெரியார் இந்தப் பதிலை எதிர்பார்க்கவில்லை. ஏதாவது வேலைக்குப் போகவேண்டும் என்று அண்ணா சொல்வார் என்று பெரியார் எதிர்பார்த்தார்.

இந்நிகழ்ச்சி அண்ணாவின் வாழ்வை திருப்பி அமைத்தது. அண்ணாவின் வாழ்வை திருப்பியமைத்த காரணத்தால்தான் என்னவோ! அதற்கு திருப்பூர் என்ற பெயர் மிகவும் பொருத்தமாக அமைந்துவிட்டது.

சாக்ரட்டீஸ் அவர்களுக்கு ஒரு பிளேட்டோவைப் போல் பெரியாருக்கு ஓர் அண்ணா.

இராமகிருஷ்ணருக்கு ஒரு விவேகானந்தரைப்போல், வீறுகொண்ட பெரியாருக்கு ஏறுநடை போட்ட அண்ணா.

அடிமை விலங்கொடிக்க வந்த உத்தமர் காந்தியடிகளுக்கு ரோஜாமலர் நேரு கிடைத்தார். தமிழ்நாட்டின் சாதி–மத விலங்கை உடைக்க பெரியாருக்கு ஓர் அண்ணா.

**ஒரே தலைவர்**

அன்றிலிருந்து தன் வாழ்நாள் முழுவதும் பெரியார் ஒருவரை மட்டுமே தன்னுடைய தலைவராகக் கொண்டு ஒழுகியவர் அண்ணா.

“சில கருத்து வேறுபாடுகளால் தனிக்கழகம் கண்ட போதும், எனக்கு இப்போதும் பெரியார்தான் தலைவர். ஆகவே அந்த இடம் எப்போதும் காலியாகவே இருக்க வேண்டும். காலம் கனியும்போது பெரியாரை அங்கே வீற்றிருக்கச் செய்வேன்” என்று கூறி தன் கழகத்திற்குத் தலைவர் பதவி இல்லாமலேயே பொதுச்செயலாளர் பதவியை உருவாக்கினார்.

இடையில் பல ஆண்டுகள் உருண்டோடி விட்டன. 1967ஆம் ஆண்டில் தன் கழகம் ஆட்சிக்கு வந்ததும் இந்த ஆட்சியை – வெற்றியை “என் தலைவர் பெரியாருக்குக் காணிக்கையாக்குகிறேன்” என்றுரைத்த மாட்சி ஒன்றே போதும் அண்ணாவின் பேருள்ளத்தைக் காட்ட.

**வரலாற்றுச் சாதனைகள்**

வரலாற்றில் எல்லாச் செயல்களும் நிலைபெற்று விடுவதில்லை. ஆனால் சில செயல்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் சென்றாலும் அவைகள் நீங்குவதில்லை.

நன்றே செய்க–இன்றே செய்க–இன்னே செய்க என்பதற்கேற்ப சில செயல்களைச் செய்து முடித்தார்.

தன் வாழ்நாளெல்லாம் காடுமேடு சுற்றி, கல்லடியும் சொல்லடியும் பட்டு எந்தச் சுயமரியாதைத் திருமணத்தைச் செய்து வந்தாரோ! அந்தச் சுயமரியாதைத் திருமணத்தை சட்டபூர்வமாகச் செய்தார்.

இதை பெரியார் தலைமையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில்தான் முதன்முதலாக வெளியிட்டார். “நாளை முதற்கொண்டு சட்டபூர்வமான சுயமரியாதைத் திருமணம் அமலுக்கு வருகிறது. ஆகவே இத்தகைய திருமணங்கள் சட்டப்படி செல்லுபடியாகும். ஆகவே எதிர்காலத்தில் அனைவரும் இத்திருமணத்தை தடையின்றி நடத்தலாம்” என்று அண்ணா கூறியவுடன், பெரியார் இடைமறித்து, “அண்ணா தற்போது சொன்ன வார்த்தைகளை நான் சாதாரண வார்த்தைகளாக எண்ணவில்லை. அதை நான் வேதவாக்காகவே மதிக்கிறேன்” என்று புகழ்ந்தார்.

இதைக் கேட்டதும் அண்ணா பெரியாரிடமிருந்து வந்த இந்த வார்த்தைகளுக்கு நாம் சொந்தக்காரனாகிவிட்டால் பெரியாரைவிட தான் மேலானவனாக ஆகிவிடுவதற்கேற்ற சூழ்நிலை எங்கே அமைந்துவிடுமோ? என்று அஞ்சி உடனே, “இது வேதவாக்கு அன்று – இந்தச் சிறியவன் உங்கள் காலடியில் செலுத்துகின்ற சிறுகாணிக்கை” என்றார். இதன் மூலம் வேதவாக்கைவிட பெரியாரின் மலரடி பெரிதென நிரூபித்தார். இதன் மூலம் எப்பொழுதும் பெரியார்தான் தன் தலைவர், நான் என்றுமே அவரின் சீடர்தான் என்பதை உலகிற்குத் தெரிவித்து விட்டார்.

அடுத்து மொழிப் பிரச்சினையில் தொடர்பு மொழியில், ஆங்கிலமும், மாநிலமொழியாக எதிலும் தமிழும் ஆகிய இருமொழிக் கொள்கையை சட்டமன்றத்தில் உருவாக்கினார்.

அதற்கு அச்சாரமாக “தமிழக அரசு தலைமைச் செயலகம்” என்ற ஒளியுமிழும் பெயர்ப்பலகையைத் திறந்து வைத்தார். சத்திய மேவ ஜெயதே என்பதை “வாய்மையே வெல்லும்” என்றாக்கினார்.

சென்னை மாநிலத்திற்கு தமிழ்நாடு என்ற பெயர் சட்டப் பேரவையில் நிறைவேறச் செய்தார்.

தமிழ்நாடு என்று பெயர் சூட்டும் விழா நடைபெறாமல் இருந்தது. விழாவிற்கு நாள் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆனால் அண்ணா அப்பொழுதுதான் சிகிச்சைக்காக அமெரிக்கா சென்று வந்திருந்தார். எந்த நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளக்கூடாது – பேசக்கூடாது – உணர்ச்சி வயப்படக்கூடாது என்றெல்லாம் கூறியிருந்தனர்.

அதையும் மீறி அண்ணா அவ்விழாவிற்கு வந்தார். இயலாமல் இருந்த அண்ணா அவர்கள் மெல்ல எழுந்து “தலைவர் அவர்களே! என்ற இரண்டு சொற்களைத்தான் கூறினார். அலைகடலென திரண்டிருந்த மக்கள் கரவொலி எழுப்பினர். ஒருமுறை அன்று – நினைத்து நினைத்து மீண்டும் மீண்டும் சில நிமிடங்கள் கரவொலி கடலின் அலைகளோடு போட்டியிட்டன. சிறிதுநேரத்தில் அமைதி தவழ்ந்தது. அதைப் பயன்படுத்திக்கொண்டு அண்ணா பேசினார்.

“இந்த விழாவில் கலந்துகொள்ள வேண்டாம்,

உடல்நலம் பாதிக்கும் என்று மருத்துவர்கள் கூறினார்கள். நான் அதை ஏற்றுக்கொள்ளாமல் இங்கே வந்திருக்கிறேன். எந்த ஒரு இலட்சியத்திற்காக இவ்வளவு காலம் போராடி வந்தோமோ அந்த இலட்சியம் நிறைவேறும் இனிய விழாவில் கலந்து கொண்டால் உயிருக்கு ஆபத்து வரும் என்றால், இந்த உயிர் இருந்தால் என்ன? போனால் என்ன? என்று அவர்களிடம் கூறிவிட்டுத்தான் இங்கே வந்திருக்கிறேன்" என்று கூறி அனைவரின் கண்களையும் குளமாக்கிய அவ்விழாவில் நாமிருக்கும் நாடு நமதென்று அறிந்து 'தமிழ்நாடு' என்ற பெயரைச் சூட்டினார்.

இம்மூன்று செயல்களும் வரலாற்றில் வைர மணிகளால் பொறிக்கப்பட்டவை.

முதல்வராகப் பதவியேற்றவுடன் அரசு ஊழியர்களிடையே முதன்முதலாகப் பேசியபோது கூறிய சொற்கள் கல்வெட்டில் பொறிக்கப்படக்கூடியது. "நான் தற்போது உங்களிடம் வந்திருப்பது, தமிழ்நாடு முதலமைச்சராக இல்லை, உங்களால் தான் நான் – உங்களுக்காகத்தான் நான் என்பதைவிட உங்களில் ஒருவன் நான் என்பதைத்தான் நான் மிகவும் மதிக்கிறேன்" என்று கூறினார்.


ஆட்சிப் பொறுப்பையேற்ற சிலநாட்களில் மதுரையில் மாபெரும் வரவேற்பு அண்ணாவிற்கு அளிக்கப்பட்டது. அப்போது அவர் குறிப்பிட்டார்,

"இப்போது நான் அமைச்சராகி விட்டபிறகு எந்தெந்தக் கரங்களோ! எனக்கு மாலையிடுகின்றன. புதிய கரங்கள் என்பதற்காக அவைகளைப் பகைத்துக் கொள்ள மாட்டேன். ஏனென்றால் நான் அனைவருக்கும் உரியவன். அனைவரது நேசக் கரங்களையும் விரும்புகிறவன். எனக்குள்ள சுபாவத்திலேயே பகைவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளவேண்டும் என்று உளமார நினைப்பவன் என்று கூறினார்.

இந்த இரு பேச்சுகளுமே அண்ணாவின் வாழ்வையே சுருக்கமான முறையில் நமக்குத் தெரிவிக்கும் நிகழ்ச்சியாக அமைந்துவிட்டன.

முழுமைய[illegible] மனிதராக – அடக்கமே அண்ணாவாக [illegible]வதற்கு அண்ணா பல வழிமுறைகளைத் தேர்ந்தெடுத்தார். அவைகளை நிரல்படுத்தி வைத்துக் கொண்டார். அவைகளிலிருந்து ஒவ்வொன்றாக எடுத்து அதை நிறைவேற்றத் தொடங்கினார்.

முதலில் தாழ்ந்த தமிழகத்தை மீண்டும் பழைய தமிழகமாக்க மக்கள் மனதில் படிந்திருக்கும் மூடநம்பிக்கைகள் – தமிழ்ப் பண்பாட்டிற்கு மாறான கருத்துகள் – இவை அகல வேண்டும். பண்டைய உயர்ந்த கருத்துகள் குடியேறவேண்டும் என்று கருதினார்.



இதற்கு முதலில் அறிவுப்பிரச்சாரம் வேண்டும் என்று முடிவு கட்டினார்.

அக்காலத்தில் எல்லாருடைய அறிவின் பெரும்பகுதி சமயத்துறையிலுள்ள பழக்கவழக்கங்களிலேயே அமைந்திருந்தது. அதிலிருந்து அவர்களை மீட்டுவிட்டால், மீட்கப்பட்ட அறிவை சமுதாயப் பணிகளிலும் தூய நற்றமிழ் தொண்டிலும் செலுத்தி விடலாம் என்று திட்டம் இட்டுக்கொண்டார்.

அதன் தொடக்கமே அண்ணா அவர்கள் சமயத்துறையில் முதலில் நுழைந்தார். இதற்கு, தந்தை பெரியாரின் சமயக் கொள்கைகளை அடித்தளமாக வைத்துக்கொண்டு இந்தப் பணியை மேற்கொண்டார். அதற்கு அண்ணாவிடம் இயல்பாகவே அமைந்த அறிவும் ஆற்றலும் துணை செய்தன.

அண்ணாவின் சுழன்றடிக்கும் பேச்சையும், எழுத்தையும் யாராலும் நிறுத்த முடியவில்லை.

அண்ணா என்ற பெயரைக் கேட்டதும் பழமைவாதிகளும், மதகுருமார்களும், அமைச்சர்களும் மிரண்டு ஓடினர்.

சமயத்தைப் பொறுத்தவரை அண்ணாவின் உள்ளத்தின் அடித்தளத்தில் ஒரு கருத்து புதை கொண்டிருந்தது. அதுதான் திருமூலரின் திருவாக்கான "ஒன்றே குலம் – ஒருவனே தேவன்" என்பதாகும்.

இதை மக்கள் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதுதான் அவருடைய உண்மையான உள்ளம், இதை நிலைநிறுத்துவதற்குப் படிப்படியாக இரண்டொரு அதிர்ச்சி வைத்தியம் செய்ய முற்பட்டார்.

இதற்காக பெரியாரின் சமயத்தைப் பற்றிய வன்மையான கருத்துகளை (மூடப்பழக்கங்களை) அழுத்தமாகவோ, நேரிடையாகவோ, தாக்கிப் பேசியும் எழுதியும் வந்தார்.

ஆண்டுகள் செல்லச் செல்ல நேரிடைத் தாக்குதலை விட்டுவிட்டு, மக்களே ஏற்றுக்கொள்ளும் விதத்தில் நாகரிகமாக மூடப்பழக்கங்களை எடுத்துரைத்தார்.

இதனால் மக்கள் மூடப்பழக்கங்களிலிருந்து நாம் கொஞ்சம் கொஞ்சமாக மாறுகிறோம் என்பதை அவர்கள் அறியாமலேயே மாறினார்கள்.

இதுவே அண்ணாவிற்குக் கிடைத்த முதல் வெற்றி.

புராணம், இதிகாசம், மதம் இவைகளில் மக்கள் தங்களை அடிமையாக்கிக் கொள்வதற்குக் காரணங்களாக இருந்தவை இசையும் நாடகமும் என்பதை உணர்ந்தார்.

முள்ளை முள்ளால் எடுப்பதுபோல், புதுமைக் கருத்தையும் சீர்திருத்தக் கருத்தையும், நாடகம், இசை மூலம் பரப்ப ஆவன செய்தார்.

அதற்காகவே சந்திரமோகன், நீதிதேவன் மயக்கம், ஓர் இரவு, வேலைக்காரி, சொர்க்கவாசல் இவைகளை எழுதினார்.

சினிமா, நாடகம் என்றாலே, காததூரம் செல்கிற பெரியார் அவர்களேகூட சந்திரமோகன், நீதி தேவன் மயக்கம் ஆகிய நாடகங்களைக் கண்டு, "நான் இருபது கூட்டங்களில் செய்யும் பிரச்சாரத்தை அண்ணா அவர்கள் இரண்டுமணி, இரண்டரை மணி நேரத்தில் செய்து முடித்து விடுகிறார்" என்ற புகழாரத்தைச் சூட்டினார்.

அண்ணா அவர்கள் அடுத்து மற்றோர் உத்தியைக் கையாள ஆரம்பித்தார். மாற்றார்களையும் தன்பால் இழுத்து இனிய கருத்துகளை புகுத்தவேண்டும் என்பதுதானே அண்ணாவின் எண்ணம்.

நாவன்மை படைத்த அண்ணா அவர்கள் மக்களின் மனதிலிருந்த – மண்டியிருந்த பதர்களை நீக்க ஆரம்பித்தார். தமிழில் – கன்னித்தமிழில்–அதன் பொருட்டு தான் பேசும் இன்பத்தமிழில் – மென்தமிழில் – பல வகையான உத்திகளைக் கையாண்டார். அடுக்குமொழிகள் – இரட்டைக்கிளவி – சிலேடை நயம் – உவமைகள் – குட்டிக்கதைகள் – தர்க்கரீதியான வாதங்கள் – புகழுரைகள் – நாகரிகமான மறுப்புகள் – நாடகபாணி வசனங்கள் எல்லாமே சமச்சீராக இடம்பெற்றன.

மேடைச் பேச்சு என்பது, ஏதோ இரண்டு மணி நேரம் செய்யும் காலட்சேபம் – இசைப்பேருரை – நாவினால் செய்யப்படும் ஒருவித வியாபாரம் என்று கருதப்பட்டு வந்த காலத்தில்தான் அண்ணா மேடையேறினார். சிறிதுகாலம், தான் கையாண்ட புதிய உத்திகளினால், மேடைப் பேச்சிற்கே இலக்கணமாகத் திகழ்ந்தார்.

அக்காலத்தில் மேடைப்பேச்சில் சிங்கமாகக் கர்ஜித்த எத்தனையோ பேச்சாளர்கள் அண்ணாவின் பேச்சைக் கேட்டதும், மேடைப் பேச்சு என்றால் அதை அண்ணாவிடம்தான் கேட்கவேண்டும் என்றார்கள்.

நான்கு மணி நேரம் பேசினாலும் மக்களை எழச்செய்யாமல் அமரச் செய்துவிடும் தந்தை பெரியாரின் பேச்சு – சாதாரண கொச்சைத் தமிழில் தான் பெரும்பாலும் பேசுவார் – என்றாலும் அதற்கு அவ்வளவு வலிமை இருந்தது.

அத்தகைய பெரியார் ஈரோட்டில் நடைபெற்ற திராவிடர் கழக தனி மாநாட்டில் கூறும்போது, "அண்ணாவைப் பற்றியும், அவர் பேச்சைப் பற்றியும் நான் உங்களுக்கு அறிமுகப்படுத்துவது என்பது அர்த்தமற்ற வேலை. அவர் வேண்டுமானால் என்னை அறிமுகப்படுத்த வேண்டியிருந்தாலும் இருக்குமே தவிர, நான் செய்ய வேண்டியதில்லை" என்று குறிப்பிட்டார்.

ஆங்கிலேயர்களுக்கே உச்சரிப்பைக் கற்றுத்தந்த வெள்ளிநாக்கு சீனிவாச சாஸ்திரி, அண்ணாவின்

பேச்சைக்கேட்டவுடன், இதுவரை நான் கேட்ட மேதைகளின் சொற்பொழிகளில் உங்கள் பேச்சு என்னை மிகமிகக் கவர்ந்தது என்று அண்ணாவிடம் கூறினார்.

புதுக்கோட்டை அரசுக் கல்லூரியில் பேசுவதற்கு அண்ணாவை அழைத்திருந்தனர். கல்லூரித் தலைவர் திரு. பஞ்சாபகேச சாஸ்திரிகள் "தான் இன்று அண்ணாவின் பேச்சுக்கு தலைமை ஏற்றதே பெரிய புதிர்" என்றும் "புதிர் என்ற தலைப்பிலேயே அண்ணா பேசுவார்" என்று கூற சிங்கம்போல் அண்ணா எழுந்தார். சுற்றுமுற்றும் தன் அரிமா நோக்கைச் செலுத்தினார். மலைவீழ் அருவிபோல் அற்புதமாக ஆங்கிலத்தில் – வானவில்லில் தோன்றும் வர்ணஜாலங்களை – எண்ணக் கலவைகளை விதவிதமாகத் தந்து அனைவரையும் வியக்கச் செய்தார்.

பேச்சைக் கேட்டு முடித்தவுடன், முன்வரிசையிலிருந்த நீதிபதி ஏ.எஸ்.பி. அய்யர் மேடை மீதேறி அண்ணாவின் கைகளைக் குலுக்கிவிட்டு "மிஸ்டர் அண்ணாதுரை என்னால் இரண்டு காரியங்களுக்கு மட்டும் சேர்ந்தாற்போல் ஒரு மணிநேரம் இருக்கையில் இருக்க முடியும். ஒன்று நான் தீர்ப்பு எழுதும்போது, இரண்டாவது எம்.எஸ். சுப்புலட்சுமியின் இன்னிசை கேட்கும்போது, அதற்குப்பிறகு ஆழங்காண முடியாத என்னை, தங்களுடைய பேச்சு வசீகரித்து அடிமைப்படுத்தி, எண்பது நிமிடங்கள் இருக்கையில் அமர்த்திவிட்டது" என்று வியந்தார்.

இவ்வாறு பல அதிமேதாவிகள் அண்ணாவின் குரலோசையை குழலோசையாக மதித்தனர்.

**கம்பராமாயண எரிப்பு முறிப்பு**

கம்பராமாயணம் எரிக்கப்பட வேண்டும் என்ற கிளர்ச்சியை பெரியார் வெளியிட்டார். அண்ணாகூட "கம்பரசம்" என்ற நூலை இயற்றி அதிலுள்ள வேண்டாத கருத்துகளை எடுத்துக் காட்டினார். என்றாலும் அது சிறந்த இலக்கியம் என்ற வகையில் ஏற்றுக் கொள்ள வேண்டுமேயொழிய, கடவுளின் அவதாரக் கதை என்று கருதக்கூடாது என்பதை மக்களிடம் தெரிவித்து விட்டோம். ஆகவே அந்நூலை எரிக்கும் கிளர்ச்சியை நிறுத்திவிடலாம் என்று ஆர்.கே. சண்முகம் போன்றோர் கருதினார்.

இதை பெரியாரிடம் கூறுவதற்கு யாருக்கும் துணிவு வரவில்லை. பெரியார் ஒரு முடிவு எடுத்துவிட்டால், அகிலத்தில் யாராலும் அதை மாற்றமுடியாது.

இதையுணர்ந்த ஆர்.கே. சண்முகம் அண்ணாவிடம் சென்று நீங்கள்தான் பெரியாரிடம் சென்று உங்கள் வாதத்திறமையால் அவர் மனதை மாற்றி நூலை எரிக்காமல் இருப்பதற்கு ஆவன செய்யும்படி கேட்டுக்கொண்டார்.

அண்ணாவும் பல மணி நேரம் பெரியாரிடம் பேசி கடைசியில் கம்பராமாயணத்தை எரிக்கும் திட்டத்தை கைவிடும்படி செய்துவிட்டார்.

இதன் மூலம் ஆன்மீகவாதிகளின் மனதையும் புண்படுத்தாது, அதே நேரத்தில் அந்நூலிலுள்ள அறிவிற்கு ஒவ்வாத கருத்துகளையும் எடுத்துக் காட்டி கம்பராமாயணம் தெய்வநூல் இல்லை – அதுவும் ஓர் இலக்கிய நூலே என்பதை நிலைநிறுத்திக் காட்டினார். இதன் மூலம் அண்ணாவின் நாகரிக உள்ளம் இந்த நானிலத்திற்குத் தெரிய வந்தது.

ஆன்மீகத் துறையிலிருந்த இராமகிருஷ்ண பரமஹம்சர் குட்டிக்கதைகள் சொல்வதில் தலைமையானவர். அதன் மூலமே தன் கருத்துகளைப் பரப்பினார்.

இதைப்போலவே மூதறிஞர் குட்டிக் கதைகளைச் சொல்லி கருத்துகளைப் பரப்பினார். இந்த உத்தி அவருக்கு மிகவும் பயன்பட்டது.

இதற்குப் பிறகு அண்ணாவும் குட்டிக்கதைகளைக் கூற ஆரம்பித்தார். அண்ணாவின் குட்டிக்கதைகள், எழுத்துக்கு எழுத்து, சொல்லுக்குச் சொல் சிறிதும் பிறழாது கருத்துக்களோடு ஒட்டியிருந்தன. அண்ணாவின் குட்டிக்கதைகள் மக்களின் உள்ளத்தை உலுக்கியது.

அண்ணா இவ்வாறு செய்ய ஆரம்பித்ததும் இராஜாஜி குட்டிக்கதைகளைச் சொல்வதை நிறுத்திவிட்டார்.

**மொழிப்போரில் அண்ணா**

அண்ணாவின் வாழ்வில் மொழிப்போர் தலையாய இடம் வகித்தது. 1937–38ஆம் ஆண்டுகளில் இராஜாஜி சென்னை மாநிலப் பிரதமராக இருந்தபோது, பள்ளிகளில் இந்தி கட்டாயப் பாடமாக்கப்படும் என்ற அபாய அறிவிப்பை வெளியிட்டார்.

பெரியார் இந்தியினால் தமிழருக்கு வரும் கேட்டையும், தமிழ் மொழிக்கு வரும் சீர்குலைவையும் 'குடி அரசு' இதழில் விளக்கமாக விவரித்தார்.

இவ்விளக்கம் தமிழகத்திலுள்ள எல்லாவகை மக்களையும் கவர்ந்து இழுத்ததற்கு அண்ணாவின் தர்க்க ரீதியான வாதத்திறமை காரணமாக அமைந்தது.

1939ஆம் ஆண்டு பிப்ரவரியில் காஞ்சியில் மாபெரும் இந்தி எதிர்ப்பு மாநாடு நடந்தது. இந்தி எதிர்ப்புப்போர் பிரகடனம் செய்யப்பட்டது.

தமிழ் காக்கப்போர் – தமிழர்நலம் காக்கப் போர் – தனித்தமிழ் மாநிலம் காண்போம் என்று மக்கள் முழங்கினர் – போராட்டம் தொடங்கிவிட்டது.

அப்பொழுதே அண்ணா தானைத் தலைவராகி விட்டார். அவர் அழைத்த குரலுக்கு மக்கள் ஓடி வந்தனர். இந்தியை எதிர்ப்பதற்கு அனைவரும் பீடுநடை போட்டனர். பள்ளிகள் முன்பு மறியல் தொடங்கியது.

இக்கட்டத்தில்தான் திருச்சியிலிருந்து கால்நடையாகவே மக்கள் இந்திப் பிரச்சாரத்தைச் செய்துகொண்டே சென்னைக்கு வந்து சேர்ந்தனர். இப்படையை அஞ்சாநெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரிசாமி தலைமை வகித்து நடத்தி வந்தார். அது முதல் அவரை ''தளபதி அழகிரி'' என்று அழைக்கலாயினர்.

## தமிழ் காத்த வீராங்கனைகள்

மறைமலையடிகளாருக்கே தீவிர தமிழ்ப்பற்றை ஊட்டியவர் அவருடைய மகள் நீலாம்பிகை அம்மையார். இம்பெருமை படைத்த அம்மையாரின் தலைமையில் மாநாடு நடந்தது. டாக்டர் தருமாம்பாள், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் – இவர்கள் தலைமையில் இந்தி எதிர்ப்பு மறியல் நடந்தது. இம்மாநாட்டில்தான் தமிழினத் தலைவர் – பகுத்தறிவுப் பாசறை – சீர்திருத்தச் செம்மல் ஈ.வெ.ரா. அவர்கட்கு பெரியார் என்ற பட்டத்தை பாவையர்கள் அளித்தனர். தாய்க்குலத்தின் வலிமையை எடுத்துக்காட்ட இந்நிகழ்ச்சி ஒன்றேபோதும். அதுமுதல் பெரியார் என்ற சொல், அகராதியில் ஈ.வெ.ரா.வை மட்டுமே குறிக்கும் சொல்லாக மாறிவிட்டது.



போராட்டம் தீவிரமாகியது. நீதிக்கட்சித் தலைவர்களான ஏ.டி. பன்னீர்செல்வம், முத்தையாச் செட்டியார் போன்றவர்களும் கொடிபிடித்து பொதுமக்களுடன் இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

காங்கிரஸ் அரசு பல வகையான குற்றங்களைச் சுமத்தி நான்கு மாதங்கள் பெரியாருக்கும் அண்ணாவுக்கும் சிறைத்தண்டனை அளித்தது.

இந்தப் போரில்தான் தாளமுத்து, நடராசன் தங்கள் இன்னுயிரை களப்பலியாகச் செலுத்தினர். இந்த உயிர்ப்பலியை பெற்றுக் கொண்ட பின்புதான் கட்டாய இந்திப்படிப்பு என்பதை அரசு நீக்கியது.

பல ஆண்டுகள் கழித்து 1965ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் நாள் இந்திய நாட்டின் பொதுமொழியாக இந்திதான் என்பதை செயலுக்குக் கொண்டு வருவது என்று மத்திய அரசு தீர்மானித்தது.

நாற்பது ஆண்டு காலமாக தொடர்ந்தும் சற்று இடைவெளிவிட்டும் நடந்துவரும் இந்தி எதிர்ப்பிற்கு ஒரு முடிவு கட்டவேண்டும் என்ற எண்ணம் அண்ணாவின் உள்ளத்தில் தோன்றியது. 1965ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் நாளை துக்கதினமாகக் கொண்டாடுவது என்று முடிவெடுத்தார். நாட்டிற்கு வெளியிட்டார்.

இதைக்கேட்ட மக்களும், குறிப்பாக மாணவருலகம் திரண்டது. தமிழ்நாட்டில் இந்திக்கு இனி எப்பொழுதுமே இட மில்லை என்று செய்துவிட வேண்டும் என்று தீர்மானித்தார்.

மாணவர்கள், ஜனவரி 25ஆம் தேதியே இந்தி எதிர்ப்பில் ஈடுபடலாம் என்று அண்ணா குறிப்பிட்டார்.

நாட்டு விடுதலைப் போரில் – ஆகஸ்ட் போரில் காந்தியின் அழைப்பை ஏற்று மக்களும் மாணவர்களும் களத்தில் குதித்து தன் எழுச்சியைக் காட்டியதுபோல், அண்ணாவின் அழைப்பை மக்களும் மாணாக்கர்களும் ஏற்று கள்த்தில் குதித்தனர்.

மறைமலையடிகளாரும், திரு.வி.க. அவர்களும், நாவலர் சோமசுந்தரபாரதியாரும் இந்தி நுழைவால் தமிழ் கெடும் என்று கூறிவிட்டபின் – பெரியாரும் அண்ணாவும் கூறிவிட்டபின் – தமிழுக்கு ஆபத்து வருகுது என்றால் இந்தத் தேகம் இருந்து என்ன பயன் என்று தோள்தட்டி களத்தில் இறங்கினர்.

இந்தியின் நுழைவைக் கட்டுப்படுத்தினர். பொதுத்தேர்தல் வந்தது. காங்கிரஸ் கட்சியும் கவிழ்ந்தது. அண்ணா ஆட்சி தோன்றியது.

இவைகள் எல்லாம் நடப்பதற்கு அண்ணாவின் பேச்சுவன்மை – எழுத்தாற்றல் – நூல்களைக் கற்றுக் கொண்டேயிருத்தல் இவைகளே அடித்தளமாக

அமைந்தன. அண்ணாவின் பேச்சிலிருந்தும் எழுத்திலிருந்தும் ஒருசில சொற்களையும் – சொற்றொடர்களையும் காண்போம் :

இந்தி எதிர்ப்பின்போது : “பெரியாரும் அண்ணாவும் சதி செய்கிறார்கள் என்கிறார்கள். சதி என்பது பிறரறியாமல் செய்வது. நாங்கள் இந்தியை எதிர்ப்பதற்குச் சதி செய்யவில்லை. தெரிந்து–தெளிந்து–தெரிவித்துவிட்டு–பலரறிய–பட்டப்பகலில்–பத்து மணிக்குச் செய்கிறோம். அதுவும் ஊர்வலமாக மட்டுமே செல்கிறோம். இது எப்படிச் சதியாகும்” என்று கேட்டார்.

★ ★ ★

“நாவலர்களும், பாவலர்களும் சங்க இலக்கியங்களைச் சுற்றி வேலிகள் அமைத்து, அங்கு எட்டாத அளவுக்கு எட்டடி உயரத்தில் சுவரை எழுப்பி, ‘உள்ளே ஆடுது காளி, வேடிக்கைப் பார்க்க வாடி’ என்பது போல் தொல்காப்பியத்தைப் பாரீர், அதன் தொன்மையைக் காணீர் என்றால் அதனிடம் யார் அணுகுவர்? சங்க இலக்கியங்களை வீட்டைவிட்டு வெளியேற்றி நாட்டிலே நடமாட விடவேண்டும். நடன சுந்தரிகளாக சிறுசிறு பிரதிகள் மூலம் தொல்காப்பியக் கருத்துகளைத் தொகுத்து வெளியிட்டால்தான் தொல்காப்பியம் சிறுசிறு குழந்தைகளாக ஒவ்வொருடைய மடியிலேயும் மனதிலேயும் தவழும்”.

★ ★ ★

“உருட்டும் கண் – மிரட்டும் சொல் இவை ஒரு காலத்திலே ஆதிக்கக் கருவிகள்”.

★ ★ ★

“கரியைக் கொண்டு கரும்பு பறிக்கச் செய்வதா? மலைமரங்களையன்றோ முறித்திடச் செய்யவேண்டும். வேங்கையை அழைத்து விளாங்கனியை உடைத்திடச் செய்வதா? வைக்கோல் துரும்பைப் பிளப்பதற்கு போர்வாள் தேவையில்லை”,

★ ★ ★

“தினசரி பத்திரிகையில் ஒரு படம் வந்தது, காந்தியாரின் சொத்துக்களைக்காட்ட. படத்தைக் கண்ட எவருக்கும் கண்ணீர் கசியாமலிருக்காது. என்ன சொத்து தெரியுமா? நூல்சரம், சிறுகரண்டி, தெர்மா பிளாஸ்க், ஒரு பேனா, ஒரு ஜோடி காலணி அவ்வளவுதான். யோகம் அறிந்தோர் – அருள் பெற்றோர் – மோட்சத்திற்கு வழிகாட்டுவோர் – துறவிகள் உள்ளனரே! அவர்களின் சொத்துக்களை மனக்கண் முன் கொண்டுவந்து பாருங்கள். எவ்வளவு ஆடை ஆபரணம் – தங்கத்தால் வட்டில் தட்டும் மட்டுமா? பாதக்குறடே தங்கத்தால்”.

★ ★ ★

“அழகிய ரோஜாவுக்கு அற்புதமான வண்ணம் தீட்டிப் பார்க்க வேண்டாம் – நம்மைச் சொக்கவைக்கும் மயிலின் தோகைக்குப் பட்டாடை போர்த்தத் தேவையில்லை. முல்லைக்கு மணமும் தேனுக்கு இனிப்பும் நாம் கூட்டத் தேவையில்லை. அதுபோல்தான் நம் தாய்மொழி தமிழுக்குப் பிறமொழிச் சேர்க்கையும் தேவையற்ற ஒன்று”.

★ ★ ★

“நமது பாடத் திட்டத்திலே பகுத்தறிவைப் புகுத்தும் தீவிரமான ஒரு திட்டம் வகுக்கப்படாதவரை பகுத்தறிவும் பரவாது நமது நினைப்பும் உயராது”.

★ ★ ★

‘ஓர் இரவு’ திரைப்படத்தில் வரும் உரையாடல் ஜமீன்தாரின் மகள் திருடன் இரத்தினத்தைப் பார்த்துப் பேசுகிறாள்.

“நீயோ கள்வன் – கீழேயிருப்பவன் காமுகன். உனக்கு என் உடைமை வேண்டும், அவனுக்கு என் உடல் வேண்டும். நீ கருந்தேள், அவன் கருநாகம்”.

★ ★ ★

பச்சைக் கொடியா, பச்சைப் பாம்பா என்று கண்டு கொள்வதற்குக் கண்ணிற்குப் பழக்கம் வேண்டும் சொர்ணம்.

★ ★ ★

‘வேலைக்காரி’ திரைப்படத்தில்,

“வேஷம் அணியாத வேதாந்தி
மோடி செய்யாத மாது
ஜோடியில்லாத மாடப்புறா
சேடியில்லாத இராஜகுமாரி இருக்க முடியாதா?

★ ★ ★

“காதிலே குண்டலம் ஆட
கனத்த சாரீரம் பாட
கதியற்ற கண்கள் பெண்களை நாட
காய்ச்சிய பால் தொண்டையில் ஓட
பகவான் இருப்பிடத்திற்குப் பாதை காட்டப்பட்டது
அந்த ஆஸ்ரமத்தில்”.

★ ★ ★

பசித்தால் புசித்து, வியர்த்தால் குளித்து,
நிழல்கண்டால் படுத்து,
செம்பொன்னையும் ஓட்டையும் ஒன்றாகக்
கருதுபவர்தானே உண்மைத் துறவி.

★ ★ ★

**‘அண்ணாவின் வைரமொழிகள்’**
**பழைய நூலிலிருந்தும் – சான்றோர் உரைத்த**
**உரைகளிலிருந்தும் உள்ளத்தைத் தொடும்**
**சொற்றொடர்களையும் – தானே கூறிய**

**தொடர்களையும் நாம் இனிக் காண்போம் :**

★ மக்கள் குரலே மகேசன் குரல்

★ ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்

★ கடமை – கண்ணியம் – கட்டுப்பாடு

★ மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு.

★ துகிலுரிந்த துச்சாதனனுக்கு துரோபதை மலையிடலாமா?

★ வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது

★ எதையும் தாங்கும் இதயம் வேண்டும்

★ கத்தியைத் தீட்டாதே – புத்தியைத் தீட்டு

★ சட்டம் ஓர் இருட்டறை, அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு. அந்த விளக்கு ஏழைகளுக்குக் கிடைப்பதில்லை

★ சாலை ஓரத்திலே வேலையற்றதுகள் – அந்த வேலையற்றதுகள் மனதில் விபரீத எண்ணங்கள்

★ மறப்போம் – மன்னிப்போம்

★ அறிவுகூர்மையாக இருக்கவேண்டும், ஆனால் போக்கிரித்தனம் இருக்கக்கூடாது. அழகாயிருக்க வேண்டும், ஆனால்' ஆள் மயக்கியாக இருக்கக்கூடாது

★ தம்பியுடையான் படைக்கஞ்சான்

★ இப்படை தோற்கின் எப்படை வெல்லும்

★ பல்துலக்கும் பசையை பாத்திரம் துலக்கப் பயன்படுத்துவதா? கல் உடைக்கும் கருவியால் கனியைத் தாக்குவதா?

★ உணர்ந்து மகிழ்வது அகம்—பகிர்ந்து மகிழ்வது புறம்

★ அடிப்போம், மடல் கெடுப்போம், முகத்திடிப்போம், குலை எடுப்போம், இடிப்பொடிப்போம், சிரம் உடைப்போம், வசை துடைப்போம், பழிமுடிப்போம், இனி நடப்போம்.

★ அரும்பு கோணலாக இருந்தாலும் மணம் குறையாது, கரும்பு கோணலாக இருந்தாலும் சுவை குன்றாது

★ கண்ணீர் துணிகளே. நாட்டின் கண்மணிகள் !

★ தம்பி வா – தலைமை ஏற்கவா – உன் ஆணைக்கு கட்டுப்படுகிறோம், ஆகையால் வா

★ கடவுளே இல்லை என்றோ, கடவுள் இருக்கிறார் என்றோ நான் கூறவில்லை. அறிவோடு, ஆற்றலோடு ஆபாசமற்ற கடவுள் நமக்கு இல்லை – நமக்கு இருக்கவில்லை என்றுதான் கூறுகிறேன்.

★ இடிந்த மாளிகை – இரசம் போன கண்ணாடி – ஊசல் பண்டம் – உடைந்த வாள் – பிரிந்துபோன கூடை – திரிந்த பால் – இவைகள் ஏளனம் அல்ல தம்பி! இரக்கத்தை எழுப்பத்தக்க பொருட்கள்.

★ அறிவுச்சுடர் எரிய வேண்டும், அதற்குச் சம்மட்டி அடிபோல பலமான பிரச்சாரம் இருக்கவேண்டும்.

★ இருப்பதைக் கண்டு மருளுவது இயல்பு. இல்லாததைக் கண்டு மிரள்வதை என்ன சொல்வது.

★ பகுத்தறிவை வைத்துக்கொண்டு பழைய வாழ்க்கையை நடத்தினால் என்ன பயன்?

★ நான் பிள்ளையாரையும் உடைக்கமாட்டேன், பிள்ளையாருக்குத் தேங்காயும் உடைக்கமாட்டேன்.

**வாழ்வின் இலக்கணம் அண்ணா**

அண்ணா கல்வி கேள்வி, அறிவு ஒழுக்கம் இவைகளில் சிறந்து விளங்கினார். அதன் காரணமாகவே தமிழ்நாட்டின் தன்னிகரற்ற தலைவராக முடிந்தது. ஒரு தலைவனுக்கு சிறந்த அறிவு வேண்டும். அதை அண்ணா பெற்றிருந்தார். தான் மட்டும் அறிவுபெற்றால் போதாது. மற்றவர்களையும் அறிஞர்களாக மாற்றவேண்டும் என்று நினைத்தார்.

எந்தத் துறையிலும் தெளிவுபடைத்தவராக இருந்தார். அதுபோல் மற்றவர்களுக்குக் குழப்பம் மிகுந்த வேளையில் அவர்களுக்குத் தெளிவை உண்டாக்கினார்.

தலைசிறந்த பேச்சாற்றலையும், எழுத்தாற்றலையும் பெற்று விளங்கினார். தன்னைப்போலவே கணக்கற்றவர்களைப் பேச்சிலும் எழுத்திலும் உருவாக்கினார்.

அண்ணா தொடாத துறைகளே இல்லை, அவர் கரம் பட்டதும் எல்லாத்துறைகளும் ஏற்றம் பெற்றன. சங்க காலத்திற்குப் பிறகு புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தித் தந்தார்.

சகலகலாவல்லி என்று கலைமகளுக்குப் பேர். ஆனால் அண்ணாவோ சகலகலாவல்லவனாக அனைவரும் தொழுது வணங்கும் நிலையில், தன் தனியான முத்திரையைப் பதித்தார்.

உலக அரங்கில் தன் அறிவுக் கொடியைப் பறக்கவிடும் சமயத்தில், தன்னுலகில் அறிவுக் கொடியைப் பறக்க விடுவதற்காகக் கூற்றுவன் கொத்திச் சென்றுவிட்டானோ !.



1969ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மூன்றாம் தேதி நள்ளிரவு 12–20 என்ற தொடரை தமிழில் இனி யாரும் எழுதக்கூடாது – பேசக்கூடாது என்று எந்தச் சர்வாதிகாரியாவது வந்து நமக்கு ஆணையிடக்கூடாதா?

அண்ணா பிறந்த மண் என்ற பெருமை நமக்கிருக்கிறது. அவர் நமக்காகப் பேசிய எழுத்தும் நம்மிடம் இருக்கிறது. அவர் காட்டிய பாதை நம்மிடம் இருக்கிறது. அவர் பரப்பிய புகழ் நம்மிடம் இருக்கிறது.

முழுநிலவு உமிழும் ஒளி அண்ணாவின் புகழொளியைத்தான் பரப்பி வருகிறது.

ஞாயிறுகூட அண்ணாவின் அறிவுக்கதிர்களைத் தான் பரப்பி வருகிறது.

வங்கக் கடலோரம் தவழும் அலைகள் அண்ணாவின் பெயரைத்தான் கூறிக்கொண்டிருக் கின்றன.

ஆற்றிலே ஓடுவது வெறும் நீரல்ல – அது அண்ணாவின் அறிவுப்புனல்.

வானத்தில் வட்டமிட்டுச் செல்லும் பறவைகள்கூட அண்ணாவின் பெயரைத்தான் கூறிச் செல்கின்றன.

அண்ணாவின் புகழை எண்ணுவதற்காகவே இயற்கை, கடற்கரையிலே மணற்பரப்பை ஏற்படுத்துகிறது.

அவர் ஏற்றிய நெருப்பு இன்னும் அறியாமையைச் சுட்டெரித்துக் கொண்டுதானிருக்கிறது.

புவி எதையும் தாங்கும் இதயத்தை கொண்டு இன்னும் தாங்கிக் கொண்டுதானிருக்கிறது.

காற்று இன்னும் அவர் புகழை பேசிக்கொண்டுதானிருக்கிறது.

அவர் காட்டிய பாதை புரட்சிகரமான பாதை – புத்துலகத்தைச் சமைப்பதற்கான பாதை.

அப்பாதையில் நாம் பீடுநடைபோடுவோம், திக்கெட்டும் அண்ணாவின் புகழைப் பரப்புவோம்.

அண்ணா விட்டுச் சென்ற

**கடமை**
**கண்ணியம்**
**கட்டுப்பாடு**
**கலைஞர்**

என்ற நான்கு நெறிகளின் பொருளுணர்ந்து வாழ்வில் செம்மை காண்போம் – உயர்வடைவோம். ★

## அண்ணாவின் அசத்தலான பதில்

*நாட்டுடைமை ஆக்கப்பட்ட தமிழ்நாடு அரசு, போக்குவரத்துப் பேருந்துகளில் எல்லாம் திருவள்ளுவர் படமும், திருக்குறளும் இடம் பெறச் செய்தார் அண்ணா.*

*இதைக் கேலி செய்து எதிர்க்கட்சியினர் பேசிய போதெல்லாம், தகுந்தவாறு பதில் அளித்தார் அண்ணா.*

*ஒருமுறை எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர், தந்திரமாக ஒரு கேள்வியைக் கேட்டார்.*

*"பேருந்தில் 'யாகாவார் ஆயினும் நாகாக்க; காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்கப்பட்டு'' என்று குறிக்கப்பட்டுள்ள குறள் யாருக்காக...? டிரைவருக்கா? கண்டக்டருக்கா? பிரயாணம் செய்கின்ற பொது மக்களுக்கா?"*

*இக்கட்டான நிலையில் அண்ணா அகப்பட்டுத் தவிக்க வேண்டும் என்று எண்ணி, எழுப்பப்பட்ட கேள்வி இது.*

*டிரைவர், கண்டக்டருக்காக என்றால், தொழிலாளர்களின் கோபத்திற்கு ஆளாக வேண்டும். பொது மக்களுக்காக என்றால், மக்களின் கண்டனத்துக்கு உள்ளாக வேண்டும்.*

*பார்த்தார் அண்ணா... மிகவும் நுணுக்கமாக "நாக்கு உள்ளவர்கள் எல்லோருக்காகவும் எழுதி வைக்கப் பட்டுள்ளது" என்று பதில் அளித்தார். இப்பதிலைக் கேட்டதும் சட்டமன்றமே அதிர்ந்தது.*

**– டி.எஸ்.பாலு,** *சென்னை.*

# தொல்லியலும் சங்க இலக்கியமும்

தொல்லியல் ஆய்வை Archaeology எனக் கூறுவர். இச்சொல் Archrious - Logos என்ற இரு சொற்களால் ஆனது. 'ஆதி காலத்தைப் பற்றிய அறிவியல்' என்பது இத்தொடரின் பொருளாகும். தொல்லியல் ஆய்வு என்பது பெரும்பாலும் பூமிக்குள் புதையுண்டு மறைந்து கிடக்கும் அல்லது மேற்பரப்பிலேயே காணப்படும் மனித இனத்தோடு தொடர்புடைய பொருள்களையும், அவர்கள் நாள்தோறும் வாழ்க்கையில் பயன்படுத்திய பொருள்களையும் அகழ்ந்தெடுத்து, பழம் பண்பாடுகளைப் பற்றி உய்த்தறியும் ஆய்வாகும்.

தொன்மையான வரலாற்றை வெளிப்படுத்திக் காட்டும் இலக்கியங்கள், பிற ஆவணங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், நாணயங்கள் ஆகியவை தோன்றும் முன்னர் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைமுறை, பண்பாடு, பழக்க வழக்கம், நாகரிகம், நம்பிக்கைகள் ஆகியவை பற்றி அறிய இத்தொல்லியல் ஆய்வே நமக்குத் துணை செய்கிறது. வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலநிலையை வெளிப்படுத்தும் திறன் இவ்வியலுக்கே உரியதாகும். இதனை மனிதன் தோன்றிய நாளிலிருந்து அவனைத் தொடர்ந்து பின்பற்றி அவன் வாழ்க்கை பற்றிய வரலாற்றுச் செய்திகளைத் துருவி ஆராயும் ஓர் இயல் எனலாம்.

இத்தொல்லியல் ஆய்வில் மதிப்புடைய பழம்பெரும் சின்னங்கள், தங்கம், வெள்ளி, இரத்தினக்கற்கள் போன்ற அழகிய அரிய மதிப்பு மிக்க தொல்பொருட்களை மட்டும் ஆராய வேண்டும் என்பதில்லை. சாம்பல், மண், கற்கள், எலும்புத்துண்டுகள், மண்டை ஓடுகள், உடைந்த சட்டி பானைகள், மனிதன் அன்றாட வாழ்வில் பயன்படுத்திய பிற எளிய பொருள்கள் போன்றவற்றிற்கும் இந்த ஆராய்ச்சியில் மிகவும் அரிய முக்கியத்துவம் உண்டு.

உலகில் தோன்றி, ஆண்டு, மறைந்த பேரரசுகள் அவற்றின் வாழ்வு, படையெடுப்பு, வெற்றி தோல்விகள், அதன் விளைவுகள் ஆகியன பற்றியே நாட்டு வரலாறு நமக்குக் கூறுகிறது. பொதுமக்களைப் பற்றிய குறிப்புகளை அவை பெரும்பாலும் தருவதில்லை. ஆனால் தொல்லியல் ஆய்வோ இப்புவியில் தோன்றி வாழ்ந்து மறைந்த சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கை முறையை, அவர்கள் விட்டுச்சென்ற எச்சங்களின் துணையால் நமக்குத் தெரிவிக்கிறது.

தமிழகத்தில் பல்வேறிடங்களில் தொல்லியல் அகழாய்வுகள் நடைபெற்றுள்ளன. அவற்றில் எடுத்த அரிய பல தொல்பொருட்களை C14 எனப்படும் கரிப்பகுப்பாய்வு மூலம் கால நிர்ணயம் செய்துள்ளனர்.

அவற்றின் காலம் கி.மு. 7–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.3–ஆம் நூற்றாண்டுவரை என்று அறிஞர்களால் ஆய்வு செய்து கணிக்கப்பட்டுள்ளது. அந்த அகழாய்வுகளில் சங்க இலக்கியத்தோடு மிகவும் தொடர்புடைய பெயர் – பொருள்கள் பற்பல கிடைத்துள்ளன. அவற்றின் மூலம் தொல்லியல் அகழாய்வுகள் காலம் சங்க காலம் என்பதை அறிகிறோம்.

எனவே அந்தத் தொல்லியல் அகழாய்வுக் காலத்தைச் சங்க இலக்கியத்தின் காலம் என்று கொள்ளுவது தவறாகாது. ஆழமான விரிவானதோர் பெரிய ஆய்வுக்கு ஒரு முன்னோடியாக இந்த ஆய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

**பெருங்கற்படைச் சின்னங்கள்**

தமிழகத் தொல்லியல் ஆய்வில் மிகவும் சிறப்பாகக் குறிக்கப்பெறும் தன்மையுடையது பெருங்கற்படைச் சின்னங்களின் ஆய்வாகும். தமிழகமெங்கும் பரவலாகவும், மிகுதியாகவும் காணப்பெறுவது இச்சின்னங்களேயாகும். இக்கால ஈமக்குழிகளில் பெரிய பெரிய கற்பலகைகளைக் கொண்டு செய்த கல்லறைகளையும் (Cists), கல் வட்டங்களையும் (Cairm Circles) கொண்ட காரணத்தால் இப்பண்பாட்டைப் பெருங்கற்படைப் பண்பாடு என்று அழைப்பர். இப்பண்பாடு வழங்கிய காலம் Megalithic Age என்று கூறப்படும். Megos என்றால் பெரிய என்றும், Lithos என்றால் கல் என்றும் கிரேக்க மொழியில் பொருள்படும்.

கல்வட்டம், கல்படை, கல் குவை, கல் திட்டை, கல் அறை, கல்பதுக்கை எனப் பல வகைகளாக இவை காணப்பெறும். இவை பெரும்பாலும் புதைகுழியிடங்கள் (Burial Sites) என வழங்கப் பெறும்.

**நீண்ட கற்கள்**

பெருங்கற்படைச் சின்னங்கள் உள்ள இடங்கள் பலவற்றில் நீண்டு உயர்ந்த கற்கள் நடப்பட்டுள்ளன.

ஆட்களைப் புதைத்துப் பதுக்கை சேர்த்திய பின் அதில் கல் நடுதலைப் புறநானூற்றில் உறையூர் இளம்பொன் வாணிகனார் கூறுகிறார்.

● செ. இராசு

*சங்க இலக்கிய ஆய்வுகள் நூலிலிருந்து...*

'பாலுடை மருங்கின் பதுக்கை சேர்த்தி
..............................................
இனிநட் டனரே கல்லும்' (புறம் : 264)

– என்பது அவர் தம் பாடல் பகுதி.

நெடுநிலை நடுகல்' – (அகம் : 289)

– என்பது அப்பகுதியாகும். இந்நெடுநிலை நடுகல்லை

'ஏறுடை இனநிரை பெயரப் பெயராது
செறிசுரை வெள்வேல் மழவர்த் தாங்கிய
தறுக ணாளர் நல்இசை நிறுமார்
பிடிமடிந் தன்ன குறும்பொறை மருங்கின்



அகநானூற்றுப் பாடல் ஒன்றில் எயினந்தை மகன் இளங்கீரனார் பதுக்கையில் 'நெடுநிலை நடுகல்' இருந்ததைச் சுட்டுகிறார்.

'சிலை ஏறட்ட கணைவீழ் வம்பலர்
உயர்பதுக்கு இவர்ந்த அதர்கொடி அதிரல்

நட்ட போலும் நடாஅ நெடுங்கல்
அகல்இடம்' (அகம் : 269)

– என்று வருணிக்கிறார் மதுரை மருதன் இளநாகனார். பிற்காலப் புறப்பொருள் வெண்பாமாலையும் இதனை 'ஓங்கிய கல்' என்று கூறும்.

இவ்வாறு இக்கற்கள் ஒன்றோ, இரண்டோ, பலவோ பதுக்கைகளில் நடப்பட்டிருப்பதைப் பெரியார் மாவட்டத்தில் கொடுமணல் முக்கடி வேலம்பாளையம், குடுமியாம்பாளையம், பிரப் நகர், நல்லாம்பட்டி ஆகிய இடங்களில் காணலாம். தொல்லியலார் இதனை Menhir என்பர். இந்நெடுங்கற்களே நடுகல்லின் தொடக்கம் எனலாம். Menhir என்பதை நடுகல்லின் வேறாகக் 'குத்துக்கல்' எனத் தொல்லியலாளர்கள் அழைப்பர்.

**பதுக்கை**

பூமிக்குள் பதுக்கப்பட்டிருப்பதால் இவை பதுக்கை எனப் பெயர் பெற்றது. சங்க இலக்கியங்களில் இப்பதுக்கைகள் பல்வேறு இடங்களில் குறிக்கப்படுகின்றன. அவை

**'செந்தொடை பிழையா வண்கண் ஆடவர்**
**அம்புவிட வீழ்ந்தோர் வம்பப் பதுக்கை'** (புறம் : 3)

**'வெண்நுனை அம்பின் விசைஇட வீழ்ந்தோர்**
**எண்ணுவரம்பு அறியா வம்பப் பதுக்கை'**

**'செருவேட்டு சிலைக்கும் செங்கண் ஆடவர்**
**வில்இட வீழ்ந்தோர் பதுக்கை'** (அகம் : 109)

**'வடிநவில் அம்பின் ஏவல் ஆடவர்**
**ஆள்அழித்து உயர்த்த அஞ்சுவரு பதுக்கை'**
(அகம் : 215)

**'நல்இசை வலித்த நாணுடை மனத்தர்**
**கொடுவில் கானவர் கணைஇடத் தொலைந்தோர்**
**படுகளத்து உயர்த்த மயிர்த்தலைப் பதுக்கை'**
(அகம் : 231)

**'இடுமுள் நெடுவேலி போலக் கொலைவர்**
**கொடுமரம் தேய்த்தார் பதுக்கை'** (கலி : 12)

**'........ மன்னர்**
**கழிப்பிணிக் கறைத்தோல் நிரைகண் டன்ன**
**உவலிடு பதுக்கை'** (அகம் : 67)

– என்பனவாகும். ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இயற்றப்பட்ட பெருங்கதையும் 'ஆனிடு பதுக்கை'

– என்று கூறும்.

இப்பதுக்கைகள் பெரும்பாலும் போர்க் களத்தில் போரிட்டு வீர மரணம் எய்திய வீரர்கட்கு நினைவாக, மேடாக உயர்த்து அமைக்கப்பட்டிருந்தன என்பதை அறிகிறோம். பொதுமக்களில் உயர்ந்தவர்கட்கும் அமைக்கப்பட்டிருக்கலாம். பதுக்கைகளைக் 'கற்கிடை' என்றும் அழைப்பர்.

இப்பதுக்கைகளைச் 'சவக்குழிகள்' என்றும் அழைப்பர். இதன் உட்பகுதி நான்கு செங்குத்தான பாறைகளைக் கொண்டு ஒரு சிறு அறையாகத் தடுக்கப்பட்டிருக்கும். இவ்வாறான அறைகள் இரண்டு மூன்று கூடச் சேர்ந்தமாதிரி இருக்கலாம். ஒரு அறையிலிருந்து மற்றொரு அறைக்குப் போகத் துளையும் இருக்கும். இவ்வறைகளின் கிழக்குப் பக்கம் உள்ள துளைகளை 'இடுதுளை' என்பர். படையல் பொருள்களை வைக்க இவை பயன்பட்டிருக்கலாம். கல்லறையின் உள் உள்ள ஆவி வெளியே சென்றுவர அத்துளை பயன்படுகிறது என்ற நம்பிக்கையும் உண்டு.

சிறு கோயில் போல இது காட்சியளிக்கும். தமிழ்நாட்டுக் கோயிற் கட்டடக் கலையின் தொடக்க காலக் கூறினை இங்குக் காண முடியும். குழி பெரும்பாலும் கிழக்கு மேற்காக அமைக்கப்பட்டிருக்கும். கல்லறைகளைப் பெரிய பாறை கொண்டு மூடுவர். புதுக்கோட்டைப் பகுதியில் இவற்றைக் 'குரக்குப் பட்டடை' என்று அழைப்பர்.

இப்பதுக்கையின் உள்ளும், புறமும் மண் கலயங்களிலும், மண்ணிலும் இறந்தவர்கள் பயன்படுத்திய பொருள்கள் வைக்கப்பட்டிருக்கும். இரும்புக் கருவிகள், மட் பாண்டங்கள், அவர்கள் விரும்பி அணிந்த பல வண்ணக்கல் மணிகள், பாசிகள், சங்கு வளையல்கள் ஆகியன காணப்படும். இரும்புக் கருவிகள், வேளாண்மைக் கருவிகள், வீட்டு உபயோகக் கருவிகள், வேட்டைக் கருவிகள் எனப் பலவகைப்படும். குதிரை லாடம், கடிவாளம், அங்கவடி போன்றவைகளும் காணப்படும்.

**தாழிகள்**

தொல்லியல் ஆய்வில் மிகவும் சிறப்பிடம் பெறுவது தாழிகள் (Urns) ஆகும். தமிழ் நாட்டில் இவை பெரும்பாலும் நான்கு வகைகளாகக் காணப்படுகின்றன. அவை :

1. கூர்முனைத் தாழிகள்
2. கால்கள் உடைய தாழிகள்
3. விலங்குருவத் தாழிகள்
4. சவப் பெட்டிகள்

என்பவைகளாகும். இவற்றுள் பெரும்பாலும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டவை கூர்முனைத் தாழிகளேயாகும்.

மணிமேகலையில் ஈம வகைகளைச் சுட்டும் சீத்தலைச்சாத்தனார்

**'சுடுவோர் இடுவோர் தொடுகுழிப் படுப்போர்**
**தாழ்வயின் அடைப்போர் தாழியிற் கலிப்போர்'**

– என்று கூறுகிறார்.

சங்க இலக்கியங்களில்

**கலம்**
**தாழி**
**கவிசெந்தாழி**
**ஈமத் தாழி**
**தாழிய பெருங்காடு**
**முதுமக்கள் தாழி**

**மன்னா் மறைத்த தாழி**

– என்ற தொடர்கள் காணப்படுகின்றன.

இவை மிகப் பெரியவையாக இருந்ததையும் சங்க இலக்கியம் சுட்டுகிறது. சங்க இலக்கியத்துள்

**மாஇருந் தாழி** (நற்.271)

**ஓங்கு நிலைத்தாழி** (அகம் : 275)

**கண்ணகன் தாழி** (புறம் : 228)

என்ற தொடர்களைக் காணுகிறோம்.

இவை கைகளாலும் (Hand Made) சக்கரங்களாலும் (Wheel Made) வனையப்பட்டிருக்கும்.

'சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் இறந்தான். பெரும்புகழ்கொண்ட இவனுக்குப் பெரிய தாழி அல்லவா வனைதல் வேண்டும். உலகையே சக்கரமாகக் கொண்டு இமய மலையையே மண்ணாக வைத்துப் பெரிய தாழி வனைதல் வேண்டும். அது உன்னால் முடியுமா?' என்று வேட்கோவரைப் பார்த்து வினவுகிறார் ஐயூர் முடவனார் என்னும் புலவர்.

**'அன்னோன் கவிக்கும் கண்ணகன் தாழி**
**வனைதல் வேட்டனை யாயின் எனையதூஉடத**
**இருநிலம் திகிரியாப் பெருமலை**
**மண்ணா வனைதல் ஒன்லுமோ நினக்கே'**

என்பது அப்பகுதியாகும்.

மற்றொரு புலவர் கணவன், மனைவி இருவருக்கும் அமையும் வண்ணம் மிகப் பெரியதாகத் தாழி வனையுமாறு வேட்கோவைக் கேட்கின்றார்.

**'சுரம்பல வந்த எமக்கும் அருளி**
**வியன்மலர் அகன்பொழில் ஈமத் தாழி**
**அகலி தாக வனைமோ'**

என்பது அவர் கேட்கும் புறநானூற்றுப் பகுதி

தாழி வனைவோர்

'கலம் செய் கோ'

எனப்பட்டனர். இவர்கள் தொன்மைக் காலமாகவே இத் தொழிலில் ஈடுபட்டனர். ஒருவர் 'மூதூர்க் கலம் செய்கோ' எனப்படுகிறார்.

தமிழக அகழாய்வுகள் மூலம் பிணங்களை ஓரிடத்தில் திறந்த வெளியில் இட்டுவைத்துத் தசைகள் அழிந்த பின் எலும்புகளைத் தாழியில் இடுவர் என்பதும், பிணங்களை எரித்து எஞ்சிய சில எலும்புகளைத் தாழியில் இடுவர் என்பதும், சுட்ட சாம்பலில் ஒரு பகுதியைத் தாழியில் இடுவர் என்பதும் தெரிய வந்துள்ளன.

ஆனால் மிகவும் வயோதிகர்களை இறுதி நாட்களில் உயிருடனே தாழியில் இருக்கச் செய்து உணவும் தண்ணீரும் வைப்பர் என்ற தவறான மரபுவழிச் செய்திகளும் நிலவுகின்றன.

பெருங்கற்படைக்காலக் கல்லறைகளின் உள்ளும், தனி இடங்களிலும் ஒன்றிரண்டாகவும் பல சேர்ந்தும் தாழிகள் புதைக்கப்பட்டன. ஆதிச்சநல்லூர், மலைக்கோவிலூர், பெருமாள் பாளையம், பாடாலூர் திருப்பூர் போன்ற இடங்களில் நூற்றுக்கணக்கில் ஒரே இடத்தில் தாழிப்புதையல்கள் உள்ளன.

தாழிகளின் உள்ளும் புறமும் சிறுசிறு மட்கலங்களும், ஆயுதங்களும், பல வண்ணக் கல் மணிகளும், அவர்கள் பயன்படுத்திய பொருள்களும் படையலாக வைக்கப் பெற்றிருக்கும்.

பொதுமக்களால் முதுமக்கள் தாழி, மூத்தாந்தாழி, மதமதக்காத் தாழி, பாண்டியர் தாழி (பண்டையோர்) எனப் பலவாறு அழைக்கப்படுகின்றன.

சங்ககாலத் தொடக்கத்தில் வாழ்ந்த பண்டை நாளைய சோழ மன்னர்கள் இவ்வழக்கத்தைப் புகுத்தினர் என்று சில பிற்கால இலக்கியங்கள் கூறுகின்றன.

**'நாளும் – பதுமக் கடவுள் படைப்படையக் காத்த**
**முதுமக்கட் சாடி முதலோன்'** (குலோ.உ –12)

**மாறழிந்து – ஓடி மறலி ஒளிப்ப முதுமக்கட்**
**சாடி வகுத்த தராபதி'** (விக்கிரம..உ –7–8) .

**'திக்கனைத்தும் – தாங்கி முதுமக்கட் சாடி**
**யமன்படைபின்**
**வாங்கி ஒளிப்ப வகுத்தோன்'** (சங்கர.உ –5–6)

**'சித்தமகிழ்ந் தீனமறச் செங்கோல் நடாத்திநமன்**
**உத்தமன்என்று எந்நாளும் உயிர்கொடுபோ**
**காமையினார்**
**மொய்த்தமுதி யோர்கட்கு முதுமக்கட் சாடிபல**
**வைத்தகுல தீரனே மன்னாகோ மன்னாகோ'**

(திருவண்ணாமலைப் புராணம்)

இச்சோழ மன்னர்களை நாபாகன், சுரகுரு எனஉரையாசிரியர்கள் அழைப்பர். குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் இதனை 'மட்சாடி' என்று அழைக்கிறது.

**சங்ககால ஊர்களில் அகழ்வாய்வு**

சங்க இலக்கியம் குறிப்பிடும் தொன்மையான சில ஊர்களில் தொல்லியல் அகழாய்வுகள் முறைப்படி நடைபெற்றுள்ளன. அவ் அகழாய்வுகள் மூலம் அவ்வூர்களின் பழம் பெருமை கண்டறியப்பட்டுள்ளது. அதன் மூலம் சங்க காலத்தில் அவ்வூர் இருந்துள்ளமை, மக்கள் வாழ்ந்தமை ஆகியன உறுதி செய்யப்பட்டுள்ளன.

**அகழாய்வு நடைபெற்ற ஊர்**

| இப்போதையபெயர் | சங்ககாலப் பெயர் |
|---|---|
| அரிக்கமேடு | வீரைமுன்துறை (அகம்.206) |

| | |
|---|---|
| அழகன்குளம் | மருங்கூர்ப்பட்டினம் (நற்.258) |
| உறையூர் | உறந்தை (புறம்.39) |
| கரூர் | கருவூர் வஞ்சி (புறம்.11) |
| காஞ்சிபுரம் | கச்சி (பெரும்.420) |
| காவிரிப்பூம்பட்டினம் | புகார் (பட்.173) |
| கொடுமணல் | கொடுமணம் (பதி.74) |
| கொற்கை | கொற்கை (அகம்.27) |
| தருமபுரி | தகடூர் (பதி.78) |
| திருக்கோவிலூர் | கோவல் (அகம்.35) |
| திருத்தங்கல் | தங்கால் (அகம்.48) |
| மதுரை | மதுரை (பரி.11) |
| வல்லம் | வல்லம் (அகம்.336) |
| கொடுங்கலூர் | முசிறி (புறம்.343) |

இவ் அகழாய்வுகளை மைய அரசின் தொல்லியல் அளவீட்டுத்துறை, தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை, சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறை தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் துறை ஆகியன மேற்கொண்டன. அரிக்கமேட்டு ஆய்வில் ஒரு பகுதியை அமெரிக்க நாட்டுத் தொல்லியல் நிபுணர்களும் மேற்கொண்டனர்.

### நடுகல்

### வீரர்கள் நினைவாக

போர்க்களத்தில் போரிட்டு வீர மரணம் எய்திய வீரர்களுக்கே பெரும்பாலும் நாட்டப்பட்டது. இதனை

**'விழுத்தொடை மறவர் வில்லிட வீழ்ந்தோர்**
**எழுத்துடை நடுகல்'** (ஐங்குறு 352)

**'நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்**
**பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்**
**பீலி ஆசூட்டிய பிறங்குநிலை நடுகல்'** (அகம் 67)

**'விடுவாய்ச் செங்கணைக் கொடுவில் ஆடவர்**
**நன்னிலைபொறித்த கல்'** (அகம்.179)

**'சிலையே றட்ட கணைவீழ் வம்பலர்**
**உயர்பதுக்கு இவர்ந்த அதர்கொடி அதிரல்**
**நெடுநிலை நடுகல்'** (அகம்.289)

**'கடுங்கண் மறவர் பகழி மாய்த்தென**
**மருங்குல் நுணுகிய பேஎழுமதிர் நடுகல்'** (அகம்.287)

**'வில்லீண் டரும்சமம் ததைய நூறி**
**நல்லிசை நிறுத்த நாணுடை மறவர்**
**நிரைநிலை நடுகல்'** (அகம்.387)

**'முனைக்கு வரம்பாகிய வென்வேல் நெடுந்தகை**
**நடுகல்',** (புறம்.314)

**'ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி**
**ஒளிறேந்து மருப்பில் களிறெறிந்து வீழ்த்தெனக்**
**கல்'** (அகம்.490)

**'விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர்**
**எழுத்துடை நடுகல்'** (அகம்.53)

**'ஒன்னாத் தெவ்வர் உலைவிடனத்து ஆர்த்தென**
**நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்**
**செல்லா நல்லிசைப் பெயரோடு நட்ட**
**கல்'** (அகம்.390)

என்ற சங்க இலக்கியத் தொடர்கள் மூலம் அறியலாம்.

### கால்நடைப் போர்

பசுக்களையும், பார்ப்பனர்களையும், பெண்களையும், நோயாளிகளையும், மக்கட்பேறு இல்லாதவர்களையும் போர் நடைபெறும் இடத்தைவிட்டு அகலுமாறு அறிவிப்பர். எல்லோரும் அகன்றபின் எஞ்சியிருக்கும் பசுக்கூட்டங்களையும், பிற கால்நடைகளையும் அப்புறப்படுத்த வெட்சிப் பூச்சூடி வீரர் புறப்படுவர். பகைவர் கால்நடைகளைக் கவர்வர். இவர்கள் வெட்சியார் எனப்படுவர்.

வெட்சியார் கவர்ந்த ஆநிரைகளையும், பிற கால்நடைகளையும் உரியவர்கள் கரந்தைப் பூச்சூடிப் போரிட்டு மீட்பர். இவர்கள் கரந்தையார் எனப்படுவர். இதுவே போர்த் தொடக்கமாகவும் அமையும். இவ்வெட்சி, கரந்தை வீரர்களுக்கு நடப்பட்ட நடுகற்களே தமிழ்நாட்டில் மிகுதியாகக் காணப்படுகின்றன. அதிலும் வெட்சியார் நடுகற்களைக் காட்டிலும் கரந்தையார் நடுகற்களே மிகுதியாகக் காணப்படுகின்றன.

சங்க இலக்கியங்களிலும் கால்நடைப் போருக்குரிய பல பாடல்கள் உள்ளன.

**'முனைஆத் தந்து முடுரம்பின் வீழ்ந்த**
**வில்லோர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்**
**வல்லாண் பதுக்கைக் கடவுட் பேண்மார்**
**நடுகல்'** (அகம்.35)

**'நடைமெலிந் தொழிந்த சேட்படர் கன்றின்**
**கடைமணி உகுநீர் துடைத்த ஆடவர்**
**பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்**
**பீலி சூட்டிய பிறந்துநிலை நடுகல்'** (அகம்.131)

**'ஏறுடை இனநிரை பெயரப் பெயராது**
**செறிசுரை வள்வேல் மழவர்த் தாங்கிய**
**தறுக ணாளர் நல்லிசை நிறுமார்**
**பிடிமடிந் தன்ன குறும்பொறை மருங்கின்**
**நட்ட போலும் நடாஅ நெடுங்கல்'** (அகம்.269)

**'பல்லா தழீஇய கல்லா வல்வில்**
**உழைக்குரல் கூகை அழைப்ப ஆட்டி**
**நாகுமுலை யன்ன நறும்பூங் கரங்நதை**
**விரகறி யாளர் மரபில் சூட்ட**
**நிரைஇவண் தந்து நடுகல் ஆகிய**
**வெண்வேல் விடலை'** (புறம்.261)

**'பல்லாந் திரள்நிரை பெயர்தரப் பெயர்தந்து**
**கல்லா இளையர் நீங்க நீங்கான்**
**வில்லுமிழ் கடுங்கணை மூழ்கக்**
**கொல்புனற் சிறையின் விளங்கியோன் கல்'** (புறம்.263)

**'வையெயிற்று உயர்ந்த மதியின் மறவர்
கையகத்து உய்ந்த கன்றுடைப் பல்லான்
நிரையொடு வந்த உரையன் ஆகி
உரிகளை அரவம் மானத் தானே
அரிதுசெல் உலகில் சென்றனன்'** (புறம்.260)

**நடுகல் ஆய்வு**

செய்யுள்களும், இலக்கியங்களும், இலக்கணங்களும், இதிகாச புராண ஆகமங்களும், தோத்திரங்களும், சாத்திரங்களும் உயர்ந்தோர் வழக்கு. வரலாற்றின் ஊற்றுக் கண்ணாக விளங்கும் பழங்குடி மக்களின் பண்பாட்டை அறிய நடுகற்களே மூல காரணமாக அமைந்துள்ளன. ஏனெனில் நடுகல் மக்கள் வழக்காகும்.

பண்டைய நடுகற்கள் பெரும்பாலும் மன்னர்களுக்கோ குறுநிலத் தலைவர்களுக்கோ எடுக்கப்படவில்லை. அவை மறவர், எயினர், மழவர், வேடர் கோவலர், வடுகர், கள்வர், பறையர், பாணர் ஆகிய குடிகளைச் சேர்ந்த சேவகன், இளமக்கள், தொறுவாளன், இளையோர், ஆள், இளமகன், அடியாள், அடியார், மன்றாடி மனைமகன் ஆகியோருக்கே நாட்டப்பட்டுள்ளன.

**நடுகல்லே தெய்வம்**

சங்க காலத்தில் நடுகல் வழிபாடு சிறப்புடன் மிகுதியாக விளங்கியது.

**'கல்லே பரவின் அல்லது
நெல்லுகுத்துப் பரவும் கடவுளும் இலவே'** (புறம்.335)

என்று பாடுகிறார் ஒரு சங்கப் புலவர்.

**உருவமும் எழுத்தும்**

முதலில் நடுகல்லாக நெடுநிலை நடுகல் எனப்படும், நீண்டு உயர்ந்த கல் நடப்பட்டது. அதன் பின்னர்ச் சிறு அளவில் நடுகற்கள் நடப்பட்டன.

அக்கற்களில் முதலில் உருவமோ, பெயரோ, பெருமையோ குறிக்கப்படாமல் அவை வெறும் கற்களாக மட்டுமே இருந்தன. பின்னர் உருவமும், பெயரும், பெருமையும் ஓவியமாக எழுதப்பட்டன. பின்னர்க் காலம் செல்லச் செல்ல உருவம் செதுக்கப்பட்டது. பீடும், பெயரும் உளியால் எழுத்துக்களாகச் செதுக்கப்பட்டன. இதனை

**'நட்ட போலும் நடா நெடுங்கல்'** (அகம்.269)

**'பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்'** (அகம்.67)

**'மரம்கோள் உமண்மகன் பேரும் பருதிப்
புன்தலை சிதைந்த வன்தலை நடுகல்
கூர்உளி குயின்ற கோடுமாய் எழுத்து'** (அகம்.343)

**'கடுங்கண் மறவர் பகழி மாய்த்தென
மருங்குல் நுணுகிய பேஎமுதிர் நடுகல்
பெயர்பயம் படரத் தோன்றுகுயில் எழுத்து'** (அகம்.297)

எனச் சங்க இலக்கியம் குறிக்கிறது. உப்பு வண்டியின் சக்கரங்களாலும், நடுக்கல்லில் அம்புகளைத் தேய்ப்போர் முயற்சியாலும் நடுகல் எழுத்துக்களின் கூர்மையான முனைகள் அழிந்தன என்பதால் நடுகற்களின் தொன்மை புலப்படுகிறது. அக்காலத்திலேயே வழிப்போக்கர்கள் தாம் வழிகளில் காணும் நடுகல் எழுத்துக்களைப் படிக்க முற்பட்டனர் என்ற விபரமும் இதன் மூலம் தெரிகிறது.

தமிழ்நாட்டில் எழுத்துடனும், எழுத்துக்கள் இன்றியும் ஆயிரக்கணக்கான நடுகற்கள் கிடைத்துள்ளன. அவை சங்க இலக்கியங்களுடன் தொடர்புபடுத்தி ஆய்வு செய்தற்கு உரியவை.

**மணிகளும் பாசிகளும்**

தொல்லியல் ஆய்வு நடைபெற்ற தமிழக ஊர்களில் மிகவும் அதிகமாகக் கிடைப்பன பண்டைய மணிகளும் பாசிகளுமாகும். சுடுமண், எலும்பு, தந்தம், இரும்பு, பிற உலோகங்களில் சில மணிகளும், பாசிகளும் கிடைப்பினும் பெரும்பாலும் கிடைப்பவை பல்வேறு வண்ணக் கற்களினால் ஆன மணிகளே.

இவை மிக உயர்ந்த வேலைப்பாடு உடையவை. பதிற்றுப்பத்து இவை 'வினைமாண் அருங்கலம்' என்று கூறும். தமிழகத் தொல்லியல் ஆய்வில் மிகமிக அதிகமாகக் கிடைக்கும் ஒருவகை மணி சூதுபவளம் என்னும் 'கார்நீலியன்' கல்லினால் செய்யப்பட்டவையாகும். இவ்வகைக் கற்கள் குஜராத்திலும், இமயமலைச் சாரலிலும் மட்டுமே கிடைக்கின்றன. பட்டினப்பாலையில் 'வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்' புகார் வந்ததாகக் கூறுவது இதனை மெய்ப்பிக்கிறது. இன்னும் ஆப்கானிஸ்தானில் கிடைக்கும் லேபிஸ் லசுலி என்னும் கல் மணிகளும், இலங்கையில் கிடைக்கும் பூனைக்கண் மணியும் தமிழக அகழாய்வில் கிடைப்பது அந்நாடுகளுடன் தமிழகம் கொண்டிருந்த தொடர்பை உறுதிப்படுத்துகிறது.

பொன்னோடு மணிகளைச் சேர்த்து அணிவதைச் சங்க இலக்கியம் காட்டுகிறது. இலக்கியத்துள்

**'இலங்கு மணி மிடைந்த பொலங்கலம்'** (பதி : 14)

**'இலங்கு மணி மிடைந்த பசும்பொன்'** (பதி : 34)

போன்ற தொடர்களைக் காணுகிறோம். மணிகள் மலையிலும், நிலத்திலும், நீரிலும் கிடைத்தன. மணியோடு பவளமும் சேர்த்து அணியப்பட்டன என்பதை,

'மணியொடு மிடைந்த அணிகிளர் பவளம்' (அகம்.167) என்ற தொடர் மூலம் அறிகிறோம்.

மணியோடு முத்துக்களும் கோர்த்து அணியப்பட்டன என்பது 'மணியோடு முத்து யாத்த நேர் அணி' (பரி.17) என்ற தொடரால் அறியப்படுகிறது.

மணிகளைக் குடைந்து உருவாக்குவது பற்றிய சில குறிப்புகளும் கிடைக்கின்றன.

**'கோடு போழ் கடைநரும்**
**திருமணி குயிநரும்'** (மதுரை.511)

என்பது இலக்கியத் தொடர், கூட்டமாக இவர்கள் இருந்துள்ளனர்.

கொங்கு நாட்டுப் பகுதியில் காங்கயம் பகுதியில் கால்நடை மேய்க்கும் பொழுதும், கலப்பையால் நிலத்தை உழும் பொழுதும், மழை பெய்யும் பொழுதும், கிழங்குகளைத் தோண்டி எடுக்கும் போதும் மணிகள் கிடைப்பதாகச் சங்க இலக்கியத்தின் வழி அறிகின்றோம்.

**'முல்லைக் கண்ணிப் பல்லான் கோவலர்**
**புல்லுடை வியன்புலம் பல்ஆ பரப்பிக்**
**கல்லுயர் கட்த்திடைக் கதிர்மணி பெறூஉம்'** (பதி : 21)

**'நாஞ்சில் ஆடிய கொழுவழி மருங்கின்**
**அலங்கு கதிர்த் திருமணி பெறூஉம்**
**அகன்கண் வைப்பின் நாடுகிழவோனே'** (பதி : 58)

**'கால்கொண்டு**
**கருவி வானம் தண்டுளி சொரிந்தெனப்**
**பல்விதை உழவின் சில்ஏ ராளர்**
**..................**
**இலங்கு கதிர்த் திருமணி பெறூஉம்**
**அகன்கண் வைப்பின் நாடுகிழ வோனே'** (பதி : 76)

**'குன்றத்துப்**
**பழங்குழி அகழ்ந்த கானவன் கிழங்கினொடு**
**கண்அகன் தூமணி பெறூஉம் நாடன்'** (குறு.379)

என்பன அதைக் குறிக்கும் இலக்கியத் தொடர்களாகும்.

மணிகளில் பாத்திரங்களும் செய்யப்பட்டன என்பது 'மணி செய் மண்டை' என்ற தொடர் மூலம் பெறப்படுகிறது. மணிகள் உருவாக்கப் பெறாத கற்களை 'வயக்கு உறாமணி' என்றும், மண்ணிலிருந்து எடுத்த மணிகளை 'மண்ணாமணி' என்றும், செய்யப்பட்ட மணிகளை 'வடிமணி' என்றும் கூறியுள்ளனர். மணிகள் சுடர்விட்டுப் பிரகாசமாக இருக்கும் என்பது 'மின் அவிர் சுடர்மணி' என்ற தொடர் மூலம் பெறப்படுகிறது.

### சங்குப் பொருட்கள்

தமிழக அகழாய்வுகளில் சங்கினால் செய்யப்பட்ட ஏராளமான அணிகலன்கள் கிடைத்துள்ளன. அவை பலவிதமான கோடுகளினாலும், கட்டங்களினாலும் அழகுபடுத்தப்பட்டுள்ளன.

கிழக்கு மேற்குக் கடற்கரை நகரங்களில் மட்டும் அல்ல, உள்நாட்டு அகழாய்விடங்களிலும் சங்கு அணிகலன்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன.

சங்க இலக்கியங்களில் சங்குகளை அறுப்பது, குடைவது, அணிகலன்கள் செய்வது பற்றிய பல குறிப்புக்கள் வந்துள்ளன.

கொற்கையில் சங்குத் தொழில் செய்வோர் குடியிருப்பே இருந்தது என்பதை

**'சீருடை விழுச்சிறப்பின்**
**விளைந்த முதிர்ந்த விழுமுத்தின்**
**இலங்குவளை இருஞ்சேரிக்**
**கட்கொண்டிக் குடிப்பாக்கத்து**
**நற்கொற்கை'**

என்பதனால் அறியலாம்.

அறுக்கப்பட்ட சங்கின் எச்சங்கள் கண்கள் போன்று காட்சியளிக்கின்றன என்பதை

**'அரம் போழ்ந்து அறுத்த**
**கண் நேர் இலங்கு வளை'** (மதுரை.316)

என்ற தொடரால் அறியலாம்.

**'கோடீர் இலங்கு வளை'** (குறு.11)

**'கோடீர் எல்வளை'** (ஐங்குறு)

**'சில் நிரை வால்வளை'** (குறு.189)

**'இறைவளை'** (குறு.289)

**'செறி வளை'** (குறு.190)

**'ஆய் வளை'** (குறு.316)

சங்கினால் செய்யப்பட்ட காரணத்தால் தான் கைகளில் அணியப் பெறும் அணி 'வளை' எனப்பட்டது.

### சுடுமண் பொருள்களும் மட்பாண்டங்களும்

சங்க காலத்திற்கு இணையான பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்தில சுடுமண்கலை மிகச் சிறப்புடன் விளங்கியது. வீட்டு அழகுப் பொருள்களும், பாசிகளும், அணிகலன்களும், விளையாட்டுப் பொருள்களும், பொம்மைகளும், முத்திரைகளும், அளவுக் கருவிகளும், கூரை ஓடுகளும் செய்யப்பட்டன.

பெரிய தாழிகள் இல்லாமல் சிறு மட்பாண்டங்கள் பல தொல்லியல் அகழாய்வில் கிடைத்துள்ளன. உடைந்த மட்பாண்ட ஓடுகளுடன் முழுப் பாத்திரங்களாகவும் பல கிடைத்துள்ளன. அன்றாடம் புழுங்குவதுடன், ஈமச் சடங்கு போன்றவைகட்கும் அவை பயன்படுத்தப்பட்டன.

தொல்லியல் ஆய்வாளர்கள் அவ்வாறு கிடைத்தவற்றுக்கு அகல், உருளி, கலயம், கிண்ணம், குடம், குடுவை, குண்டா, குண்டு போகினி, குண்டுமொந்தை, கூசா, சட்டி சருவசட்டி, சிதை குண்டா, சின்ன கலயம், சின்ன குண்டு போகினி, சொப்பு, சொம்பு, சொரக்காய் லோட்டா, தட்டு, தவளை, தாளம், தோண்டி, பாளி, பானை, மடக்கு, மரக்கால், மறவை, மூக்குக் கிண்ணம், மூசை, மூடி, மைக்கிண்ணம், வடிகட்டி, வானலி, விளக்கு என்று பல்வேறு பெயரிட்டு அழைக்கின்றனர்.

இவை சங்க இலக்கியத்துள் 'சிறு கலம்' என்று பொதுவாக அழைக்கப்படுகின்றன.

இம்மட்பாண்டங்கள் செய்முறையின் மூலம் பல்வேறு வகைகளாகக் குறிக்கப்பெறுகின்றன. அவை

கறுப்பு – சிவப்பு வகை
கறுப்பு வகை
சிவப்பு வகை
ரசட் கலவையும் வண்ணப் பூச்சும் கொண்டவை
பழுப்பு நிறவகை எனப் பல்வேறு வகைப்படும்.

மின்னும் சிவப்புச் சாயம் பூசப்பட்டவை ரசட் கலவைப்பூச்சு எனப்பெறும். இம்மட்பாண்டங்களில் பல்வேறு வரைவோடுகள் எழுதப்பட்டிருக்கும்.



## இரும்பு

பெருங்கற்படைப் பண்பாட்டுக் காலத்தில் மக்கள் இரும்பைத் தாராளமாகப் பயன்படுத்தியுள்ளனர். அகழாய்வுகளில் இரும்பால் உருவாக்கப்பட்ட வீட்டுப் பயன்படு பொருட்கள், வேளாண்மைக் கருவிகள், வேட்டைக் கருவிகள், போர்க்கருவிகள் ஆகியவை கிடைத்துள்ளன.

கல் மணிகளுக்குத் துளையிடும் நுட்பமான – மிகவும் கூர்மையான இரும்புக் கருவிகள் இருந்துள்ளன. பல தொல்லியல் அகழாய்விடங்களில் இரும்பு உருக்கியபின் எறியப்பட்ட மண் கட்டிகள், இரும்புக் கசடுகள் பல கிடைத்துள்ளன.

இவ்விரும்புக் கருவிகள் பற்றிய குறிப்புகள் பல சங்க இலக்கியத்துள் கிடைக்கின்றன. சங்க இலக்கியங்களில் வேல், வாள், ஈட்டி, கேடயம், வில், அம்பு போன்ற ஆயுதங்கள் குறிக்கப் பெறுகின்றன. இரும்பு செய்தல், இரும்பு வடித்தல், கொல்லன் உலைக்களம், வேல் வடித்தல் போன்ற பல்வேறு செய்முறைகளும் சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. சங்க காலத்தில் இரும்பின் பயன்பாடு மிகவும் அதிகமாக இருந்தது.

**'இரும்புசெய் கொல்லன்'** (நற்.133)

**'இரும்பு வடித்தன்'** (பெரும்.222)

**'இரும்பு திரித்தன்ன மாஇரும் மருப்பு'** (அகம்.4)

**'இரும்பு புனைந்து இயற்றாப்
பெரும் பெயர்த் தோட்டி'** (புறம்.150)

**'இரும்பு தலையாத்த
திருந்து கணை விழுக்கோல்'** (பெரும்.91)

**'இரும்பு செய் விளக்கு'** (பெரும்.42)

**'எஃகுடை இரும்பு'** (பதி.74)

**'கருங்கைக் கொல்லன் செந்தீ மாட்டிய
இரும்பு உண் நீரினும்'** (புறம்.21)

**'இரும்பு பயன்படுக்கும் கருங்கைக் கொல்லன்
விசைந்து எறி கூடமொடு பொரூஉம்
உலைக்கல்'** (புறம்.170)

போன்ற பல குறிப்புக்கள் சங்க இலக்கியத்துள் காணப்படுகின்றன.

### குதிரை

தமிழகத் தொல்லியல் அகழாய்வில் குதிரை லாடம், குதிரைக் கடிவாளம், குதிரையேற்றத்திற்குப் பயன்படும் அங்கவடி என்னும் கால்மிதி ஆகியவை கிடைத்துள்ளன. எனவே பெருங்கற்படைக் கால மக்கள் குதிரைகளைப் பழக்கிப் பயன்படுத்தியுள்ளனர் என்பது பெறப்படுகிறது.

குதிரைகள் கடல் கடந்த வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகப் பட்டினப்பாலை கூறுகிறது. 'நீரின் வந்த நிமிர் பரிப் புரவி' என்ற தொடரை அங்குக் காணுகிறோம். அவைகளில் உயர் ரக வெண்மையான குதிரைகளும் இருந்தன. பெரும்பாணாற்றுப்படையில் 'வளை கண்டன்ன வாலுளைப் புரவி' என்று கூறப்படுகிறது. நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேர் பற்றிய குறிப்பு அகநானூற்றில் வருகிறது.

குதிரை பற்றிய பல குறிப்புகள் சங்க இலக்கியங்களில் பல இடங்களில் காணப்படுகின்றன.

### தொல்லெழுத்தியல்

அகழாய்வில் கிடைக்கும் மட்பாண்டங்களிலும், பானை ஓடுகளிலும் பலவற்றில் குறியீடுகளைப் போலவே பழந்தமிழ் எழுத்துக்கள் சொல்லாகவும், சிறு சொற்றொடர் வடிவிலும் கீறப்பட்டுள்ளவைகளைக் காணலாம். இவை பெரும்பாலும் மலைக் குகைகளிலும், சிறுபான்மை பாறைகளிலும், மலைச் சாரல்களிலும் பொறிக்கப் பெற்றுள்ள பழந்தமிழ் எழுத்துக்களையே ஒத்துக் காணப்படுகின்றன.

இவற்றைப் பொதுவாகப் பிராமி எழுத்து (மொழி தமிழ்) என்று அழைப்பர். ஆனால் இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப் பிரிவினர் ஆந்திர மாநிலப் பட்டிப்ரோலிற்கு வடக்கே கிடைக்கும் இவ்வெழுத்துக்களைத் தென்பிராமி என்றும் அழைத்தனர். அதிலிருந்து இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டினை அறியலாம்.

தமிழ்நாட்டில் பெரும்பாலும் வர்க்க எழுத்துக்கள் இல்லாமல், மெய்கள் (சிலவற்றிற்குப் புள்ளியிட்டும், தொல்காப்பிய விதிகட்கு உட்பட்ட அமைப்பில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டும், ற, ன, ழ, எ, ஒ போன்ற தமிழுக்கேயுரிய சிறப்பெழுத்துக்கள் உயிர், மெய், உயிர்மெய்களில் காணப்பெற்றும் காணப்படுகின்றன. இவை பிராமி என்ற பெயருக்கு மாறாகக் தமிழி, திராவிடி என்ற பெயர்களையும் பெற்றிருந்தன. எனவே இவை தமிழ்நாட்டுக்குரிய தனி எழுத்து வகையைச் சார்ந்தவை என்பது புலப்படும்.

வடமாநில அகழாய்வுகளில் பானை ஓடுகள் தமிழ்நாடு போல மிகுதியாகக் கிடைப்பதில்லை. கிடைக்கும் பானை ஓடுகளிலும் எழுத்துப் பொறிப்புகள் மிகுதியாக இருப்பதில்லை. ஆனால் தமிழ்நாட்டில் பெருநகரங் களிலிருந்து விலகி நெடுந்தொலைவில் உள்ள சிற்றூர்களில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளில் கூட மிகுதியான பழந்தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பெற்ற பானை ஓடுகளைக் காணுகின்றோம். எனவே இந்தியத் தொல்லியல் அறிஞர்களிடம் பிராமி–தமிழி–பழந்தமிழே! தமிழ்நாடே பிராமி வரிவடிவம் தோன்றிய இடமாக இருக்கலாம் என்ற கருத்து உருவாகியுள்ளது.

புகழூர் – ஆறுநாட்டார் மலையில் பதிற்றுப் பத்து 7, 8, 9–ஆம் பத்துக்களுக்குரிய அரசர் பெயர் வரிசையாகப் பொறிக்கப்பட்டுள்ளது. மாங்குளத்தில் நெடுஞ்செழியன் பெயரும், பணவன், கடலன், வழுதி போன்ற பாண்டியர் குலப் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளன. ஜம்பையில் 'அதியந் நெடுமாந் அஞ்சி' பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

சங்ககாலத் தலைவர்களான பிட்டன், பண்ணன், ஓரி, நள்ளி, ஆய், கீரண் போன்றோர் பெயர்களையும், அகல், ஆதன், அந்தை, கண்ணன், வேள், அந்துவன், கிழார், சாத்தன், சாத்தந்தை, கொற்றன், கொற்றி, நாகன், வண்ணக்கண் போன்ற சங்க இலக்கியங்களில் மட்டுமே பயின்று வரக்கூடிய பல சொற்களையும் பானையோட்டப் பொறிப்புகளிலும், தமிழிக் (பிராமிக்) கல்வெட்டுக்களிலும் காணுகின்றோம்.

### யவனர் தொடர்பு

சங்க காலத்தில் தமிழ்நாட்டோடு யவனர் தொடர்பு இருந்தது. கிரேக்கர், ரோமானியர், எகிப்தியர், பாரசீகர், அராபியர் ஆகிய அனைவரையும் யவனர் என்று பொதுப் பெயரால் பழந்தமிழர் அழைத்தனர். அயோனியன் என்ற சொல்லே யவனர் என ஆயிற்று என்பர்.

அவர்களுள் ரோம் நாட்டார் வீரத்தால் தலைமை எய்தினர். ஜூலியஸ் சீசர் காலத்தில் அலெக்சாண்டிரியா ரோம் நாட்டவர் வசமானது. அகஸ்டஸ் காலத்தில் எகிப்து முழுவதும் ரோமானியர் கைவசமானது.

தென்னிந்திய வாணிகத்தைக் கிரேக்கர் மூலம் செய்த ரோமானியர் தாங்களாகவே அவ் வணிகத்தை மேற்கொள்ளலாயினர். செங்கடல் வழியாகத் தென் இந்திய — ரோம் வாணிகம் நடைபெற்றது.

மேற்குக் கடற்கரைக்கு மிளகு, சந்தனம், தந்தம், ஏலக்காய், அகில், தேக்கு, இலவங்கம், சில விலங்குகள், பறவைகள் ஆகியவற்றிற்காக வந்த ரோமானியர் பாலக்காடு, போளுவாம்பட்டிக் கணவாய் வழியாகக் கொங்கு நாட்டுக்கு வருகைபுரிந்து பல வண்ண மணிக்கற்களைப் பெற்றுச் சென்றனர். நொய்யல் நதிக்கரை வழியாகக் காவிரியை அடைந்து சோழ நாட்டுக்கும், பாண்டிய நாட்டுத் துறைமுகங்களுக்கும் சென்றார். தூத்துக்குடி வரை சென்று முத்துக்களைக் கொள்முதல் செய்தனர். இவற்றுள் மிளகு யவனர்கட்கு (ரோமர்கட்கு) மிகவும் பிடித்தமான பொருள். 'மிளகை 'யவனப் பிரியா' என்றனர்.

அவர்கள் விட்டுச்சென்ற எச்சங்கள் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் கிடைக்கின்றன. ரோமானிய மணிகளும் ரோமானிய உயர்வகைப் பானை ஓடுகளான ரௌலாடம், அரிட்டைன் வகை ஓடுகளும், அம்போரா என்னும் மதுக்குடங்களும், ரோமானிய சுடுமண் பொம்மைகளும், பல ரோம் அரசர்களின் தங்க, வெள்ளி, செம்புக் காசுகளும் தமிழ்நாட்டின் பல இடங்களில் கிடைத்துள்ளன.

அழகன் குளம், அரிக்கமேடு, ஆனைமலை, காஞ்சிபுரம், கரூர், காரைக்காடு, வசவசமுத்திரம், பொள்ளாச்சி, கொற்கை, வெள்ளையனிருப்பு, கொடுமணல் என அவ்வூர்கள் பலவாகும்.

தோகை (துகி), அகில் (அகிலம்), அரிசி (அரிஜா, அரி), இஞ்சி (ஜிஞ்சர்), இஞ்சி வேர் (ஜிஞ்சிபார்) முதலிய தமிழ்ச் சொற்கள் யவனர் மொழியுட் புகுந்தன.

யவனர் கப்பல்கள் பொன்னோடு முசிறிக்கு வந்து பொன்னைக் கொடுத்துவிட்டுக் கப்பலில் மிளகை ஏற்றிச் செல்வர் என்று சங்க இலக்கியம் கூறுகிறது.

**'சேரலர்**
**சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க**
**யவனர் தந்த வினைமாண் நன்கலம்**
**பொன்னோடு வந்து கறியொடு பெயரும்**
**வளம்கெழும் முசிறி'**

என்று அகநானூறு கூறுகிறது.

இன்னும் யவனர் பற்றிய பல்வேறு குறிப்புக்கள் சங்க இலக்கியத்துள் குறிக்கப்பட்டுள்ளன. அவை

**'யவனர் இயற்றிய வினைமாண் பாவை'** (நெடு.101)

**'நயனில் வன்சொல் யவனர்ப் பிணித்து**
**நெய்தலைப் பெய்து கையிற் கொளீஇ'** (பதி.பதிகம் 2)

**'வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்**
**புலித்தொடர் விட்ட புனைமாண் நல்இல்'** (முல்.61–2)

**'யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்**
**பொன்செய் புனைகலத்து ஏந்தி நாளும்**
**ஒண்தொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து**
**ஆங்கு இனிது ஒழுகுமதி'** (புறம்.56)

என்பனவாகும்.

யவனச்சேரி, யவன வீரர், யவனத் தச்சர் போன்ற குறிப்புக்களையும் காணுகிறோம். தமிழ்நாட்டில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகள் மூலம் அவை அனைத்தும் ரோமானியர் தொடர்புடையவை என அறியப்படுகின்றன.

**கருவூர்ப் புதையல்**

மேலைக் கடற்கரை நகரான வஞ்சி—கருவூர் எனப்பட்டது. அது சங்கச் சேரர் கோநகரம். சேரர்கள் கொங்கு நாட்டை வென்று கைப்பற்றினர். சேரர்கள் கொங்கு நாட்டிலும் ஒரு வஞ்சியை ஏற்படுத்தி அதற்கும் கருவூர் என்று பெயரிட்டனர்.

கரூரில் ஆட்சிபுரிந்து சேரரில் இரும்பொறை மரபு. அவருள் ஒரு சேர மன்னன் கருவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் எனப்பட்டான். கருவூர் காவிரியின் தலை ஆறாகிய அமராவதிக் கரையில் உள்ளது. அதற்குச் சங்க இலக்கியப் பெயர் 'தண் ஆண்பொருநை' என்பது.

அமராவதி ஆற்றங்கரையில் அண்மைக் காலத்தில் தனியாரால் மிகமிக அரிய தொல்பொருட்கள் பல தோண்டி எடுக்கப்பட்டன. அவற்றுள் முத்திரைகளிலும், மோதிரங்களிலும், காசுகளிலும் பல எழுத்துப் பொறிப்புக்கள் காணப்படுகின்றன. அவை

குறவன் (முத்திரை)

தித்தின் (மோதிரம்)

தாயன் ஒதவன் (மோதிரம்)

சாத்தன் (மோதிரம்)

வேடுவன் (மோதிரம்)

குட்டுவன் கோதை (காசு)

கொல்லிப்பொறை (காசு)

கொல்லிரும் பொறை (காசு)

மாக்கோதை (காசு)

மாக்கோக் கோதை (காசு)

பெழுவழுதி (காசு)

என்பனவாம்.

இப்பெயர்களை நாம் சங்க இலக்கியங்களில் பல இடங்களில் காணுகிறோம். குறவர் பெருமான் குறமகன், குறவன் என்றும், தித்தன் என்றும், தாயங்கண்ணன் என்றும், கருவூர்க் கதப்பிள்ளை சாத்தன் உறையூர்க்




கதுவாய்ச் சாத்தன் என்றும், வேட்டுவன் என்றும், சேரமான் குட்டுவன் கோதை என்றும், பொறையன் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்றும், சேரமான் கோதை மார்பன் பெருவழுதி என்றும் சங்க இலக்கியங்களில் காணுகிறோம்.

**தமிழரின் கடற்செலவு**

எகிப்தில் நடைபெற்ற அகழாய்வில் கண்ணன், சாத்தன் என்று தமிழில் படிக்கக் கூடிய சொற்கள் கிடைத்திருக்கின்றன. தாய்லாந்து நாட்டில் சங்க காலத் தமிழ் எழுத்தில் 'பெரும்பதன் கல்' என்று எழுதப்பட்ட உரைகல் கிடைத்துள்ளது. அதனைப் பெரும் பத்தன் என்று படித்துப் பொன்வேலை செய்வோன் என்று கருதுகின்றனர்.

தாய்லாந்தில் சங்ககாலச் சோழரின் புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட காசு கிடைத்துள்ளது. அண்மையில் காண்ஸ்டாண்டிநோயில் நகரத்தில் முசிறி வணிகர்கட்கும் மேனாட்டு வணிகர்கட்கும் எழுதப்பட்ட ஒப்பந்தங்கள் பற்றிய கிரேக்க மொழி ஆவணங்கள் கிடைத்துள்ளன.

இவற்றால் பண்டைய சங்க காலத் தமிழரின் கடற்செலவு பற்றிய செய்திகளை அறிகின்றோம். சங்க இலக்கியத்துள் பழந்தமிழரின் கடற்செலவு பற்றிய பல குறிப்புக்களைக் காணுகிறோம்.

**'நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி**
**வணிதொழில் ஆதுண்ட உரவோன் மருக'** (புறம்.66)

**'முந்நீர் வழங்கு நாவாய்'** (புறம்.13)

**'சினம்மிகு தானை வானவன் குடகடல்**
**பொலம்தரு நாவாய் ஓட்டிய அவ்வழி**
**பிறகலம் செல்கலாது'** (புறம்.126)

**'ஏமுறு நாவாய் வரவு எதிர்கொள்வார்'** (பரி.10)

**'வேறுபல் நாட்டுக் கால்தர வந்த**
**பலவினை நாவாய் தோன்றும் பெருந்துறை'** (நற்.295)

**'தீம் புகார்த் திரைமுன்துறை**
**தூங்கு நாவாய்'** (பட்.124)

என்பன தமிழர் கடல்செலவைக் காட்டும் தொடர்களாகும்.

★ ★ ★

பெரியகுளத்தில் இருந்து சுமார் 12 கி.மீ. தூரத்தில் சோத்துப்பாறை என்னுமிடத்தில் வராக ஆற்றின் குறுக்கே சோத்துப்பாறை அணைக் கட்டப்பட்டு வருகிறது. வராக நதியானது வைகை ஆற்றின் ஒரு முக்கிய உபநதியாகும். இந்நதியானது 2,090 மீட்டர் உயரத்தில் பழநி மலைகளில் உற்பத்தியாகி கிழக்கு சரிவின் வழியாக சுமார் 28 கி.மீ. தூரம் ஓடி வைகை அணைக்கு கீழே வைகை ஆற்றில் கலக்கிறது. வைகை ஆற்றில் வராக நதி கலக்கும் இடம் வரை வராக

சோத்துப்பாறை அணை கட்டும் பணி மீது அக்கறை கொண்ட தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 1998 ஆகஸ்ட் 30–ந் தேதி அன்று அணை கட்டுமான பணியைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சோத்துப்பாறை அணையானது 57 மீட்டர் உயரமும், 345 மீட்டர் நீளமும் கொண்டதாக ஆசியாவிலேயே 2வது மிகப்பெரிய உயரம் கொண்ட அணையாகக் கட்டப்பட்டு வருகிறது. இந்த அணையினால் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்கள் பாசன வசதி


# சோத்துப்பாறை அணை

நதியின் நீர்ப்பிடிப்பு பரப்பு 322.56 சதுர கி.மீ. ஆகும். இதில் 153.6 சதுர கி.மீ. மலைப்பகுதியாகும். மலைப்பகுதியான நீர்பிடிப்பு பரப்பில் இரு பருவ காலங்களில் நல்ல மழை பெய்வதால் அதிக நீர்வரத்து உள்ளது. கடந்த 1982–ஆம் ஆண்டு சுமார் ரூ.8 கோடி மதிப்பீடு தயார் செய்யப்பட்டு துவக்கப்பட்ட சோத்துப்பாறை அணை கட்டும் பணியானது பல்வேறு காரணங்களால் காலதாமதமானது. பின்னர் நீர்வள ஆதார அமைப்பின் கீழ் உலக வங்கி உதவியுடன் கடந்த 1996–ஆம் ஆண்டு பணி துவங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து அணையின் கட்டுமானப் பணிகளை தொடங்குவதற்கு தமிழக அரசு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. சென்னையைச் சேர்ந்த ஈ.சி.சி.இ. நிறுவனத்திடம் ரூ.24.99 கோடிக்கு 41 மாத காலத்திற்குள் அணையின் கட்டுமானப் பணியை முடிக்க வேண்டும் என்ற அரசு நிபந்தனையின் அடிப்படையில் ஒப்பந்தப் புள்ளி வழங்கப்பட்டு, கடந்த 1997–ஆம் ஆண்டு நவம்பர் 21–ஆம் தேதி முதல் அணை கட்டும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது.

பெறுகிறது. இத்திட்டத்தின் தென்கரை கிராமம் 817 ஏக்கரும், தாமரைக்குளம் கிராமம் 223 ஏக்கரும் புதிதாக பயன்பெறுகிறது. இதன் மூலம் 1635 டன்கள் கூடுதலாக உணவு உற்பத்தி செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அணை நீர்வரத்தின் பரப்பு 38.40 ச.கி.மீ. நீர்வரத்தின் கூட்டு பரப்பு 48.64 ச.கி.மீ. நீர்த்தேக்கத்தின் முழு கொள்ளளவு 100 மில்லியன் கன அடி. நீர்ப்பிடிப்பின் பரப்பு 35.71 ஏக்கர் ஆகும். அணையின் அடித்தளம் மட்டம் 352.640 மீட்டர். அணையின் மேல் மட்டம் 409.64





மீட்டர். அணையின் மேல்மட்ட அகலம் 7.32 மீட்டர் ஆகும்.

இதன் மூலம் 1825 ஏக்கர் நஞ்சை பாசன பரப்பும், 1040 ஏக்கர் புஞ்சை பாசனப் பரப்பும் 67 ஏக்கர் இடைவெளி பூர்த்தி செய்யும் பாசன பரப்பும் பயன்பெறும் ஆய்க்கட்டுகளாகும். இதன் கட்டுமானப் பணிகள் திட்டமிட்டபடி 2001 ஏப்ரல் மாதம் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**– உல. ரவீந்திரன்,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.

## மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு

மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் குறித்து தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 31.8.2000 அன்று மாலை தலைமைச் செயலகத்தில் ஆய்வு நடத்தினார். இவ்வாய்வுக் கூட்டத்தில் மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் மின்துறை அமைச்சர் திரு.ஆற்காடு நா.வீராசாமி, வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.வீரபாண்டி எஸ்.ஆறுமுகம், ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு.தமிழ்க்குடிமகன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சமூக நலத்துறை அமைச்சர் திருமதி எஸ்.பி.சற்குணபாண்டியன், தலைமைச் செயலாளர் திரு ஏ.பி.முத்துசாமி, நிதித்துறைச் செயலாளர் திரு பி.வி.ராஜாராமன், உணவுத்துறைச் செயலர் திரு ஆர்.சந்தானம், நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல்துறைச் செயலர் திருமதி எஸ்.மாலதி, மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திருமதி அனுராதாகதி ராஜீவன், ஊரக வளர்ச்சித்துறை செயலாளர், திரு ஆர்.சி.பண்டா, சமூக நலத்துறை செயலாளர் திருமதி. ஷீலா பாலகிருஷ்ணன் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

இந்தக் கூட்டத்தில் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைப்பதில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்து மகளிர் மேம்பாட்டுக் கழகத்தால் விரிவாக தெரிவிக்கப்பட்டது. 30.7.2000 வரை 6,72,000 உறுப்பினர்களைக் கொண்ட 37,735 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் இதுவரை தொடங்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு இதுபோன்ற மகளிர் குழுக்கள் பேரூராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. ஆறு மாதத்திற்கு மேற்பட்ட 20,800 குழுக்களில் ஏற்கனவே 12,500 குழுக்களுக்கு சுயதொழில் தொடங்க நிதி வசதி ஏற்படுத்தி கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. மீதமுள்ள தகுதியான குழுக்களுக்கு அடுத்த மூன்று மாதங்களுக்குள் பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம் (SGSY) போன்ற திட்டங்கள் மூலமாக நிதி வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அறிவுரைக்கேற்ப, தமிழகம் முழுவதும் ஆகஸ்ட் 15–ஆம் தேதி நடைபெற்ற கிராமச் சபைக் கூட்டத்தில் 3 இலட்சம் மகளிர் கலந்து கொண்டனர். பெண்களுடைய திறமையை மேம்படுத்துவதற்காக மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் அவர்களுக்குச் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமின்றி தற்போது 28 நியாய விலைக் கடைகள் 9 மாவட்டங்களில் மகளிர் குழுக்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களை அனைத்து ஊராட்சிகளிலும் ஏற்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார். ஏற்கெனவே சிறப்பாகச் செயல்பட்டு வரும் மகளிர் குழுக்களை மேலும் புதிய குழுக்கள் அமைக்க ஊக்கப்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். மகளிர் குழுக்களால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகள் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள், உயர் அதிகாரிகள் கிராமங்களுக்குச் செல்லும்போது மகளிர் சுய உதவிக் குழுக்களால் நடத்தப்படும் கூட்டங்களில் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என்றும், மகளிர் குழுக்களுக்கு அரசால் செயல்படுத்தப்படும் நலவாழ்வுத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதன் மூலம் இத்திட்டங்களின் பயன்களை மகளிர் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவுறுத்தினார்.

★ ★ ★

# வலிமையான சுவர்

– டாக்டர் ச. முருகானந்தம்

ஒரு நாள் கதிரவன் விளையாடிக் கொண்டிருந்தபோது தவறி விழுந்தான். கால் முட்டியில் சின்ன சிராய்ப்பு ஏற்பட்டது. லேசாக இரத்தம் கசிந்தது. எரிச்சல் பொறுக்க முடியவில்லை. அவனுக்கு ஏன்தான் விளையாடினோமோ என்றிருந்தது. மறுநாளே சிராய்ப்பு ஆறிவிட்டது என்றாலும் அன்றிலிருந்து யார் விளையாடக் கூப்பிட்டாலும் வரமாட்டேன் என ஒதுங்கி இருக்கத் தொடங்கினான்.

அரையாண்டு தேர்வுகள் முடிந்தன. மறுநாள் கிருஸ்துமஸ். கிருஸ்துமஸ் முதல் ஆங்கிலப் புத்தாண்டுத் தினம் வரை ஒரு வாரம் பள்ளிக்கு விடுமுறை. கதிரவனின் அக்கா அங்கயற்கண்ணி



நேரம் போகாமல் தவித்தாள். தம்பியைத் தன்னோடு விளையாட வரும்படி அழைத்தாள். அவன் மறுத்தான். சூடான பாலில் வாய் வைத்துச் சூடு கண்ட பூனை அதன்பிறகு ஆறிய பாலைக் கண்டாலும் பயந்து ஓடுவதைப் போலக் கதிரவன் பயப்படுவதாகக் கேலி செய்தாள்.

கதிரவன் கேலியைக் கூடப் பொறுத்துக் கொண்டான். ஆனால் விளையாட வரமாட்டேன் என அடம் பிடித்தான். பொறுத்துப் பொறுத்துப் பார்த்த அங்கயற்கண்ணி நேரடியாகப் படிப்பறைக்குச் சென்றாள். அப்பா புறநானூறு படித்துக் கொண்டிருந்தார். அம்மா ‘பாரதியார் கவிதைகள்’ எனும் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார். தம்பி விளையூட வராமல் மறுப்பது பற்றி அங்கயற்கண்ணி தன் பெற்றோரிடம் சொன்னாள்.

அம்மாவும் அப்பாவும் கதிரவனை அழைத்தனர். கதிரவன் வந்தான். அம்மா அவனை அருகில் அழைத்து மடியில் உட்கார வைத்துக்கொண்டாள். ‘விளையாடப் போனால் திரும்பவும் விழுந்து காயம் ஏற்படும். அதனால் விளையாடப் பயமாக இருக்கிறது’ எனக் கதிரவன் அம்மா முகம் நோக்கிக் கூறினான். அம்மாவின் மனம் இளகிவிட்டது. “சரி ராஜா, அம்மா மடியிலேயே உட்கார்ந்து கொள்” என முத்தம் கொடுத்து கொஞ்சத் தொடங்கினாள்.

“கதிர், நான் முதன்முதலில் சைக்கிள் ஓட்டப் பழகியபோது கீழே விழுந்துவிட்டேன். அடி பலமாகப்பட்டு விட்டது. இதோ பார் பெரிய தழும்பு. இப்போது நான் சைக்கிள் ஓட்டுவதைப் பார்க்கிறாயா, இல்லையா? கீழே விழுகிறேனா? அதற்குப் பிறகு ஒருநாளும் விழுந்ததே இல்லை. ஒருமுறை கீழே விழுந்து விட்டதற்காக சைக்கிள் ஓட்டப் பழகாமல் இருக்கலாமா? விபத்து என்பது எப்போதாவது ஏற்படும். எப்போதுமே விபத்துகள் தொடர்ந்து நிகழமாட்டா. அதுமாதிரிதான், நீ ஒரு முறை கீழே விழுந்ததுகூட”.

கதிரவன் முகத்தில் கொஞ்சம் நம்பிக்கை பிரகாசித்தது. அப்பாவைத் தொடர்ந்து அம்மா

அவனை அணைத்தவாறே "கதிர், தைரியமாகப் போய் விளையாடு. ஒன்பது வயது ஆகிவிட்டதே. நீ பயப்படலாமா? இதோ பார், பெரிய மீசை வைத்துக் கொண்டிருக்கிறாரே, பாரதியார் இவர் என்ன எழுதியிருக்கிறார் தெரியுமா?

**"ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா"**

இது இவர் எழுதிய பாட்டுத்தான். உனக்கு அர்த்தம் புதிகிறதா? உன்னைப் போன்ற குழந்தைகளுக்காகவே இந்தப் பாட்டை இவர் எழுதி வைத்திருக்கிறார்.

**"காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு – என்று
வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா"**

– என்ற பாட்டு இதோ, இந்தப் பக்கத்தில் இருக்கிறது பார்.

மாலை முழுவதும் நன்றாக ஓடி ஆடி விளையாட வேண்டும். அப்படி விளையாடினால் தான் உனக்கு நன்றாகப் பசிக்கும். நன்றாகப் பசித்த பிறகு சாப்பிட்டால்தான் எந்த நோயும் வராது. நீ நல்ல பலசாலியாக, உயரமாக, உன் அப்பா மாதிரி வளர முடியும்.

"நம் வீட்டின் மேல் முதல்மாடி இருக்கிறதல்லவா? அதை எது தாங்கி நிற்கிறது? கீழே இருக்கிற இந்தச் சுவர்தான். கீழே வலிமையான சுவர் இருப்பதால் தான் நாம் மேலே ஓர் அடுக்கு வீட்டைக் கட்ட முடிந்தது. அது மாதிரிதான். நீ நல்ல பலசாலியாக, உடல் வலிமையோடு இருந்தால்தான் நன்றாகப் படிக்க முடியும். உனக்கு ஆரோக்கியமான உடம்பு வேண்டுமா? அல்லது நோஞ்சான் உடம்பு வேண்டுமா? எது வேண்டும்? ஆரோக்கியமான உடம்பு தானே? சரி, அக்காவோடு ஓடிப்பிடித்து விளையாடு பார்க்கலாம்"

கதிரவன் நெஞ்சில் நம்பிக்கை நிறைந்தது. பயம் எங்கு போயிற்றோ தெரியவில்லை. அம்மா மடியில் இருந்து எழுந்து பாய்ந்தோடினான். "அக்கா என்னைப்பிடி பார்க்கலாம்" – அவன் குரல் தோட்டத்தில் கேட்டது. அங்கயற்கண்ணி அவன் பின்னால் ஓடி விரட்டிக் கொண்டிருக்கிறாள். கதிரவன் அவள் கையில் அகப்படவே இல்லை. ★

சின்னஞ் சிறு கதைகள் நூலிலிருந்து...

# சுற்றுச்சூழல்

கலையரசி, மேகலை, மலர், ஒளி, உமையாள் ஐவரும் அமர்ந்து வானொலி கேட்டுக் கொண்டிருந்தனர். சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு பற்றி ஒரு பேராசிரியரின் உரை வானொலியில் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. வானொலிப் பேச்சு முடியவும் மணிவண்ணன் வீட்டிற்குள் நுழையவும் சரியாக இருந்தது. மணிவண்ணன் மேகலையின் கணவர்; அவர்க்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேலை. பெண்கள் பேச்சு சுற்றுச்சூழல் பற்றியதாக இருக்கவே மணிவண்ணன் அவர்கள் அருகில் அமர்ந்து கேட்கத் தொடங்கினார்.

அனைவருடைய கருத்துகளையும் கேட்ட பின்னர், அவர்க்கும் பேச்சில் கலந்துகொள்ள வேண்டும் எனும் ஆர்வம் எழுந்தது. போன மாதம் ஒரு மாத இதழில் இதுபற்றி வெளியாகி இருந்த கட்டுரையில் நிறைய செய்திகள் இருந்தன.

மணிவண்ணன் அக்கட்டுரையைக் கவனமாக, ஆழ்ந்து படித்திருந்தார். கட்டுரைச் செய்திகள் இப்போதும் அவரது நினைவில் உள்ளன.

"சென்ற ஆண்டு பெய்த மழைகூட, இந்த ஆண்டு பெய்யவில்லை" இது கலையரசி கருத்து. "போன வருடத்தைவிட இந்த வருடம் வெயில் அதிகம்" – இது மேகலை தந்த செய்தி. "விளைச்சல் குறைந்துவிட்டது; விலைவாசி ஏறிவிட்டது" – இது மலர் வருத்தத்தோடு வெளியிட்ட தகவல். "வாகனங்கள் வெளியேற்றும் புகையால், சுவாசிப்பதற்கு நல்ல காற்று கிடைக்காமல் போய்விட்டது" – இது ஒளி தந்த செய்தி. உமையாள் எல்லோருடைய செய்திகளையும் தகவல்களையும் "ஆம், ஆம்" எனக் கேட்டுக் கொண்டிருந்தாள். சட்டென்று "ஏன் இப்படி ஆயிற்று?" என்ற கேள்வியை அவள் கேட்டதும் நால்வரும் மணிவண்ணன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தனர்.

மணிவண்ணன், உமையாள் கேள்விக்கு விடையளிக்கத் தொடங்கினார். பெண்கள் ஐவரும் ஆர்வத்தோடு நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டனர். "உலகம் முழுவதும் இருக்கிற பல்லாயிரக்கணக்கான சதுர கிலோ மீட்டர் பரப்பளவு உடைய காடுகள் வெகுவேகமாக அழிக்கப்பட்டு வருகின்றன. பாதைகள் அமைக்க, தொழில் வளம் பெருக்க, ஏற்றுமதியை அதிகரிக்க எனப் பலப்பலக்

காரணங்களுக்காகக் காடுகள் அழிக்கப்படுவது வழக்கமாகி விட்டது. மலையடிவாரக் காடுகள், சமவெளிக் காடுகள், ஆற்றுப்படுகைகளில் உள்ள காடுகள் எல்லாம் இப்போது காணாமல் போய்க்கொண்டிருக்கின்றன. மலேசிய நாட்டின் முக்கியத் தொழில்கள் எல்லாம் காடுகள் அழிப்பின் பயனாகத்தான் நடைபெறுகின்றன. அண்மையில் அமேசான் காடுகளில் அழிவு தொடங்கிவிட்டது.

“காடுகள் அழிக்கப்படுவதால் பல தீமைகள் உருவாகின்றன. பூமியின் வெப்பநிலை உயர்கிறது; இதனால் கடல் நீர்மட்டம் அதிகமாகிறது. கடற்கரை அரிப்பாலும் கடல்நீர் நிலப்படுகையில் புகுவதாலும் நிலம் விவசாயத்துக்கு ஏற்றதாக இல்லாமல் போகும் ஆபத்து உள்ளது; நிலத்தடி நீர் கெடுகின்றது. வெள்ளத்தால் மண் அரிக்கப்படுகிறது. காடுகள் இருந்தால் அவை மண் அரிமானத்தைப் பெரும்பாலும் தடுத்துவிடும். காடுகள் அழிவதால் நல்ல வளமான வண்டல் மண் அரிக்கப்பட்டு அது வீணாகக் கடலை அடைகிறது. அதனால் பூமி பயனற்றுப் போகிறது; விளைச்சல் குறைய இதுவும் ஒரு காரணம் ஆகும்.

“தொழிற்சாலைகள் வெளியிடும் புகை, டீசல், பெட்ரோல் ஆகியவற்றால் ஓடுகிற வாகனங்கள் விடுகிற புகை, நிலக்கரி எரிக்கப்படுவதால் எழும் புகை ஆகியன காற்றில் தொடர்ந்து கலக்கின்றன. தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப் படும் கழிவு நீர் ஆறுகள் மூலமாகக் கடலை அடைகிறது. சர்க்கரை, தாள், தோல் தொழிற்சாலைக் கழிவுநீர் நச்சுத்தன்மை மிகுந்தது. இது போகும் வழி எல்லாம் பாதிப்பை உண்டாக்கும். டீசல் முதலான கழிவு எண்ணெய் சில வேளைகளில் கடலில் கொட்டப்படுவதால், கடல்வாழ் உயிரினங்களும் அழிகின்றன. இதனால் மனித சமுதாயத்துக்கும் மறைமுகப் பாதிப்புகள் உண்டாகின்றன. காற்றில் கலக்கிற கார்பன்—டை—ஆக்சைடு, கார்பன் மோனாக்சைடு ஆகிய நச்சுப் புகைகளால் ஏற்படும் விளைவுகள் அபாயமானவை. நுரையீரல் புற்று நோய்க்கு இவை வழிவகுக்கின்றன. மேலும் நமது பூமியைச் சுற்றி இருக்கிற ஓசோன் எனும் காற்று மண்டலக் கவசத்தில் இப்புகையால் இப்போது துளைகள் உண்டாகிவிட்டன. இதனால் சூரியனின் நச்சுக் கதிர்கள் எவ்விதத் தடையும் இல்லாமல் பூமியை நோக்கி விரைந்து வந்து தாக்குகின்றன. தோல் தொடர்புடைய நோய்களுக்கு இது காரணம் ஆகலாம் என அஞ்சப்படுகிறது.

“தொடர்ந்து இந்நிலைமை நீடித்தால் விளைவுகள் கற்பனைக்கே எட்டாதவையாய் இருக்கும் என நிபுணர்கள் கூறுகின்றனர்; சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு பற்றி எச்சரிக்கின்றனர். பெரிய பெரிய நீர்த்தேக்கங்களால் காடுகள் நீரில் அமிழ்ந்து அழிந்து விடக்கூடாது என அறிவுரை கூறுகின்றனர். காடுகள் மீண்டும் உருவாக்கப்பட வேண்டும் எனவும் மக்களும் அரசும் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தில் மிகவும் ஆர்வத்தோடு ஈடுபாடு காட்ட வேண்டும் எனவும் பரிந்துரைக்கின்றனர்” என மணிவண்ணனின் விளக்கம் தொடர்ந்தது.

பெண்கள், புதுப்புதுச் செய்திகளைக் கேட்ட மகிழ்ச்சியில் முகம் மலர்ந்தனர். மணிவண்ணன் மேலும் தொடர்ந்தார்.

“வீட்டைச் சுற்றிலும் கழிவுநீர் தேங்குவதால் கொசுக்கள் உற்பத்தியாகின்றன. மலேரியா, நச்சுக் காய்ச்சல், யானைக்கால் ஆகிய நோய்களுக்கு இக்கொசுக்கள் காரணம். ஆகவே வீட்டின் பக்கத்திலோ தெருக்கோடியிலோ ஊர், நகர் ஆகிய இருப்பிடங்களுக்கு அண்மையிலோ கழிவுநீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தேங்கும் நீரில் மருந்தடித்தால் கொசுக்கள் அழியும்.



வெட்டவெளியில் தெரு ஓரத்தில், நடைபாதைப் பகுதியில் மலம் கழிப்பதால் ஏற்படும் பிரச்சினைகளையும் மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இது காற்றை மாசுபடுத்துகிறது; நடந்து செல்பவர் பாதங்களில் படுவதால், கால் வெடிப்புகள் மூலம் உடலுக்குள் புகுந்து குடல் புழுக்களை, பூச்சிகளை உருவாக்குகிறது. மண்ணில் ஐந்தடி ஆழம் குழி தோண்டி அதில் மலம் மூடப்படுமானால் சுற்றுப்புறமும் எல்லா உயிரினங்களும் பாதுகாக்கப்படும் எனபது உறுதி” மணிவண்ணனின் பேச்சு அவர்கள் உள்ளத்தில் புதிய ஒளி பாய்ச்சியது. தங்களால் முடிந்த அளவுக்குச் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க முயல வேண்டும் எனும் உறுதியுடன் தத்தம் வீடு நோக்கிக் கலைந்து சென்றனர்.

★ ★ ★

### கிராமப்புற பூசாரிகள் ஒய்வூதியத் திட்டம்:

தமிழ்நாட்டில் அறநிலையத்துறையின் ஆளுகையில் இல்லாத திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து அறுபது வயதினை அடைந்து, ஓய்வுபெற்ற பூசாரிகளுக்கு நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500 வீதம் ஓய்வூதியம் வழங்க அரசாணையினை 22.1.1997 அன்று பிறப்பித்துள்ளது. இதுவரை 1099 தகுதியுடைய பூசாரிகளுக்கு ரூ.500 வீதம் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

### கருணை இல்லங்களுக்கு அரசு மானியம் :

ஆதரவற்ற சிறுவர், சிறுமியரைப் பேணுவதற்குத் திருக்கோயில்களில் கருணை இல்லங்கள் துவங்கப்பட்டுள்ளன.

38 திருக்கோயில்கள் மூலம் 43 கருணை இல்லங்கள் இயங்கி வருகின்றன. அவற்றின் மூலம் 966 சிறுவர்களும், 433 சிறுமியர்களும் பயனடைந்து வருகின்றனர். மேற்கண்ட கருணை இல்லங்களில் 23 இல்லங்கள் சிறுவர்களுக்கு எனவும், 20 கருணை இல்லங்கள் சிறுமியர்களுக்கு எனவும் உள்ளது.

### புத்தகங்கள் வெளியிடுதல்:

வடபழனி திருக்கோயில் ஓதுவார் மரபினர் பற்றிய சீராய்வு என்ற நூல் அச்சிட்டு வெளியிட்டது. இதில் 1000 பிரதிகள் அச்சிடப்பட்டு 992 பிரதிகள் விற்கப்பட்டு இன்னும் 8 பிரதிகளே இருப்பில் உள்ளது.

### தமிழ்ப் புலவர்கள் நியமனம் :

நிதிவசதி மிக்க திருக்கோயில்களில், அத் திருக்கோயில்களின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு, தமிழ்ப் புலவர்கள் 150 பேர்களை நியமனம் செய்து மாதம் ஒன்றுக்கு ரூ.1,500 வீதம் திருக்கோயில் நிதியிலிருந்து தொகுப்பு ஊதியம் வழங்க அரசு 6.6.97 அன்று உத்தரவிட்டது. இதுவரை 150 தமிழ்ப் புலவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளது.

### புதிய செயல் அலுவலர் பணியிடங்கள் தோற்றுவித்தல் :

அரசாணை எண்.398, தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறை நாள் 3.9.98–ன்படி செயல் அலுவலர் நிலை 3–இல் 100 பணியிடங்களும், செயல் அலுவலர் நிலை 4–இல் 100 பணியிடங்களும் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

# அறநிலையத்துறையின் அரும் பணிகள்

கருணை இல்லம், சிறுவர், சிறுமியர் அனைவருக்கும் உணவு, உறையிடம், உடை, மருத்துவம், கல்வி போன்ற அனைத்து வசதிகளும் திருக்கோயில் நிதியிலிருந்து செய்து கொடுக்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்பின்படி இவ்வகையில் ஏற்படும் செலவினத்தில் 50 விழுக்காடு அரசு மானியமாக சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்ய அரசாணை 15.6.98 அன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது. 1998–99–ஆம் ஆண்டிற்கு ரூ.90.54 இலட்சம் அரசு மானியமாக சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை ஆணையரால் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

### தமிழில் ஆகம நூல்:

திருக்கோயில் தொடர்பான ஆகம விதிகள் வடமொழியில் உள்ளதை தமிழில் மொழி பெயர்த்து வெளியிடக் கருதி முதற்கட்டமாக உத்ரகாமிக ஆகமம் என்ற நூல் 30.7.99 அன்று தமிழில் வெளியிடப்பட்டது.

### துறை ஆளுகையின் கீழ் இல்லாத ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில் திருப்பணி:


ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதியில் உள்ள 25 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூ.25,000 நிதி உதவி வழங்கப்படுகிறது. இதுவரை 250 திருக்கோயில்களுக்கு இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

### தமிழ் போற்றி புத்தகங்கள் வெளியீடு:

தமிழில் அர்ச்சனை செய்வது தொடர்பாக உயர்மட்டக் குழு ஏற்படுத்தப்பட்டு இக்குழு ஒன்பது முறை தலைமைச்

செயலகத்தில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் கூடியது. இக்கூட்டங்களின் வாயிலாக அறிஞர் பெருமக்கள், திருக்கோயில் அர்ச்சகர்கள், அலுவலர்கள் ஆகியோர்கள் பரிசீலனை செய்து கீழ்க்கண்ட தமிழ் அர்ச்சனை நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

1. அருள்மிகு விநாயகர் போற்றி
2. அருள்மிகு முருகன் போற்றி
3. அருள்மிகு சிவன் போற்றி
4. அருள்மிகு திருமால் போற்றி
5. அருள்மிகு தென்முகக் கடவுள் போற்றி
6. அருள்மிகு நடராஜர் போற்றி
7. அருள்மிகு உமையம்மை போற்றி
8. அருள்மிகு கோதண்டராமர் போற்றி
9. அருள்மிகு தாயார் போற்றி
10. அருள்மிகு துர்க்கை அம்மன் போற்றி
11. அருள்மிகு காளியம்மன் போற்றி
12. அருள்மிகு மாரியம்மன் போற்றி
13. அருள்மிகு அனுமன் போற்றி
14. அருள்மிகு நவகோள்கள் போற்றி (ஒன்பது புத்தகங்கள்)



மேற்கண்ட நூல்கள் திருக்கோயில்களுக்கும், திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இந்தப் போற்றி புத்தகங்களைப் பொதுமக்கள் குறைந்த விலைக்கு வாங்கி பயன்பெறவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் அருள்மிகு விநாயகர், அருள்மிகு சிவன், அருள்மிகு உமையம்மன் ஆகிய தெய்வங்களுக்கு 1008 போற்றிகள் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

***சைவத் திருமுறை ஆகமங்கள் மற்றும் வைணவ திவ்யபிரபந்த பயிற்சி மையங்கள் :***

1998–99–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி திருக்கோயில்களில் பணிபுரிந்துவரும் அர்ச்சகர்கள், பூசாரிகள், பட்டாச்சாரியார்கள் ஆகியோர்களுக்கு ஓராண்டு கால புத்தொளிப் பயிற்சி அளிக்க சைவத் திருமுறை ஆகம பயிற்சி மையங்கள் 20, வைணவ திவ்ய பிரபந்த பயிற்சி மையங்கள் 7ம், 10.6.99 முதல் துவங்கி நடைபெற்று வருகின்றன.

பயிற்சி மையம் ஒவ்வொன்றிலும் சுமார் 30 முதல் 35 பயிற்சியாளர்களுக்கு மிகாமல் சேர்த்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பயிற்சியாளர் ஒருவருக்கு ஊக்கத் தொகையாக நாள் ஒன்றுக்கு ரூ.20 வீதம் சம்பந்தப்பட்ட திருக்கோயில் நிதியிலிருந்து வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பயிற்சி ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.500 முதல் ரூ.2,500 வரை சம்பந்தப்பட்ட திருக்கோயில் நிதியிலிருந்து சன்மானமாக வழங்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

துறை மற்றும் திருக்கோயில் அலுவலர்கள், பணியாளர்கள் தவிர பொதுமக்களும் பயன்பெறும் வகையில் தக்க சான்றோர்கள், அறிஞர்கள், சமய வல்லுநர்கள் ஆகியோரைக் கொண்டு குறுகிய கால சமயப் பயிற்சி வகுப்பு 1998 மற்றும் 1999–ஆம் ஆண்டுகளில் 66 மையங்களில் நடத்தப்பட்டன. இதன் மூலம் 4426 பேர் பயனடைந்துள்ளனர்.

### நாதசுர இசைக் கலைஞர்களைப் புதிதாக பணியில் அமர்த்தல் :

பாடல்பெற்ற, மங்களாசாசனம் செய்யப் பெற்ற சரித்திரப் புகழ் வாய்ந்த, பழமையான திருக்கோயில்களில் கால பூசைகள் மற்றும் திருவிழாக்களின் பொழுது "மங்கள இசை" என சிறப்பிக்கப்படும் நாதசுர இசை இசைக்கப்படுவது மரபு. ஆனால் பல திருக்கோயில்களில் நிதி வசதி இல்லாத காரணத்தினால் நாதசுர இசை முழங்கவில்லை. எனவே நாதசுரம், தவில் மற்றும் தாளம் இசைக்கலைஞர்களை நியமனம் செய்து முறையே ரூ.1000, ரூ.750, ரூ.500 வீதம் மாத ஊதியம் துறை மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குத் தனியாக ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டு அதில் கிடைக்கும் வட்டித் தொகை மூலம் நாதசுர இசைக்கலைஞர்களுக்கு மாத ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது

இதுவரை நாதசுரக் கலைஞர்கள் 30, தவில் கலைஞர்கள் 14, தாளம் கலைஞர் 4 ஆக 48 பேர்கள் தேர்வு செய்யப்பட்டு பணி நியமன உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

### தமிழ் இசைப்பள்ளி:

தற்பொழுது 5 சைவத் திருக்கோயில்களில் தேவார இசைப் பள்ளிகளும், 4 வைணவத் திருக்கோயில்களில் திவ்ய பிரபந்த பயிற்சி வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. 8 திருக்கோயில்களில் நாதசுரம் தவில் பயிற்சி பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. தேவார இசைப் பள்ளிகளில் 80 மாணவர்களும், திவ்ய பிரபந்த இசைப்பள்ளிகளில் 55 மாணவர்களும் பயின்று வருகின்றனர். நாதசுரம், தவில் பயிற்சி பள்ளிகளில் நாதசுரப் பயிற்சிக்கு 80 மாணவர்களும், தவில் பயிற்சிக்கு 40 மாணவர்களும் சேர்ந்து பயன்பெற்று வருகின்றார்கள்.

தேவாரம், திவ்யபிரபந்தம், நாதசுரம் மற்றும் தவில் இசைப்பள்ளிகளில் பயிலும் உள்ளூர் மாணவர்களுக்கு மாதம் ரூ.300 வீதமும், வெளியூர் மாணவர்களுக்கு மாதம் ரூ.600 வீதமும் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. இந்த அரசு பதவியேற்ற பின்னர்தான் தமிழ் இசைப் பயிற்சி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### திருக்கோயில்களில் ஓதுவார் நியமனம் :

திருக்கோயில்களில் தேவாரம், திருவாசகம் போன்ற சைவ திருமுறைகள் பாடுவதற்கு ஓதுவார்கள் இல்லாத திருக்கோயில்களில் பணி நியமனம் செய்யவும், அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,500 வீதம் தொகுப்பூதியம் வழங்கவும் நடவடிக்கை எடுத்து 43 திருக்கோயில்களுக்கு ஓதுவார் நியமனம் செய்ய ஆணைப் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### திருக்குறள் வகுப்புகள் :

திருக்கோயில்களில் திருக்குறள் வகுப்புகள் துவங்கப்பட்டு இதுவரையிலும் 75 திருக்கோயில்களில் நடைபெற்று வருகின்றது.

### 1991–96 (6/96) வரை இத்துறையில் நடைபெற்ற பணிகள் மற்றும் 1996 முதல் தற்போது வரை நடைபெற்ற பணிகளுக்கான ஒப்பீடு

**நில மீட்பு :**

1996 ஜூன் முதல் நாளது வரை திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் மனைகள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

| | நிலங்கள் ஏ.செ. | மனைகள் கிர.ச.அடி |
|---|---|---|
| அ) நீதிமன்ற நடவடிக்கைகளில் வாயிலாக திருக்கோயிலுக்குச் சாதகமாக தீர்ப்பு பெறப் பட்டுள்ளவை | 1414.70 | 242.1581 |
| ஆ) சட்டப்பிரிவு 78(2) மற்றும் 79(பி)–ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மீட்கப்–பட்ட நிலங்கள் விபரம் | 14.98 | 28.0209 |
| இ) துறை அலுவலர்கள் மற்றும் பிற துறையினரின் உதவியுடனும் நேரடியாக ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட விவரம் | 429.47 | 110.1962 |
| மொத்தம் | 1859.15 | 381.1352 |

**வருவாய் :**

திருக்கோயில்களில் பசலி 1401–இல் இருந்து 1405 வரையில் ரூ.365.20 கோடி வருமானம் கேட்பு பதிவேட்டில் காணும் இனங்கள் மற்றும் காணப்படாத இனங்கள் வாயிலாக பெறப்பட்டுள்ளது.


பசலி 1406–இல் இருந்து 8/2000 வரை ரூ.548.71 கோடி வருமானம் கேட்பு பதிவேட்டில் காணும் இனங்கள் மற்றும் மற்ற இனங்கள் வாயிலாக பெறப்பட்டுள்ளது.

**திருப்பணிகள் மற்றும் குடமுழுக்கு :**

தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களில் 1990–91 முதல் 5/96 வரை 828 திருக்கோயில்களில் திருப்பணி முடித்து திருக்குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. 13.6.1996 முதல் 9/2000 வரை 2459 திருக்கோயில்களில் திருப்பணி முடித்து திருக்குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. திருக்குடமுழுக்கு நடைபெற்ற சில முக்கிய திருக்கோயில்கள் விபரம்.

| வ.எண் | திருக்கோயில்களின் பெயர் | குடமுழுக்கு நடைபெற்ற நாள் |
|---|---|---|
| 1. | அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில்,மயிலாப்பூர், சென்னை | 6.6.96 |

| | | |
|---|---|---|
| 2. | அருள்மிகு ஆதிகேசவப்பெருமாள் திருக்கோயில், திருப்பெரும்புதூர் | 5.7.96 |
| 3. | அருள்மிகு ரங்கநாதசாசுவாமி திருக்கோயில், திருநீர்மலை, சென்னை | 23.3.97 |
| 4. | அருள்மிகு தேவநாதசாமி திருக்கோயில், திருவேந்திரபுரம், கடலூர் | 27.3.97 |
| 5. | அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில், திருப்பாபுலியூர், கடலூர் | 26.3.97 |
| 6. | அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் திருக்கோயில், திருக்கடவூர், சீர்காழி வட்டம் | 26.3.97 |
| 7. | அருள்மிகு பிரகதீஸ்வரர் கோயில், தஞ்சாவூர் | 8.6.97 |
| 8. | அருள்மிகு சென்ன மல்லீஸ்வரர் கோயில், சென்னை | 16.6.97 |
| 9. | அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் கோயில், வேலூர் | 12.7.97 |



| | | |
|---|---|---|
| 10. | அருள்மிகு லட்சுமிநரசிம்மசுவாமி கோயில், சோளிங்கர், வாலாஜா வட்டம் | 29.4.98 |
| 11. | அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில், திருவெண்காடு, சீர்காழி வட்டம் | 7.6.98 |
| 12. | அருள்மிகு பவானியம்மன் திருக்கோயில், பெரியபாளையம், திருவள்ளூர் வட்டம் | 7.6.98 |
| 13. | அருள்மிகு அரவிந்தலோசனர் திருக்கோயில், இரட்டைத்திருப்பதி, ஆழ்வார் திருநகரி, தூத்துக்குடி | 1.7.98 |
| 14. | அருள்மிகு சென்ன மல்லீஸ்வரர் மற்றும் சென்ன கேசவப் பெருமாள் திருக்கோயில், தேவராஜ முதலி தெரு, சென்னை | 29.1.99 |
| 15. | அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயில், வல்லக்கோட்டை, திருப்பெரும்புதூர் வட்டம் | 26.3.99 |
| 16. | அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு, சென்னை | 23.6.99 |
| 17. | அருள்மிகு சாரங்கபாணி சுவாமி கோயில், கும்பகோணம், தஞ்சாவூர் | 30.6.99 |
| 18. | அருள்மிகு ஆதிகும்பேசுவரர் திருக்கோயில், கும்பகோணம் | 12.12.99 |
| 19. | அருள்மிகு திரவேங்கடமுடையான் கோயில், அரியக்குடி, இராமநாதபுரம் | 16.9.99 |
| 20. | அருள்மிகு குறுங்காலீஸ்வரர் திருக்கோயில் கோயம்பேடு, சென்னை 107 | 11.2.2000 |
| 21. | அருள்மிகு ஆதிநாதாழ்வார் கோயில், ஆழ்வார் திருநகரி, தூத்துக்குடி | 10.2.2000 |
| 22. | அருள்மிகு சக்கரத்தாழ்வார் சன்னதி காளமேகப் பெருமாள் கோயில், திரமோகூர், மதுரை வடக்கு | 16.3.2000 |
| 23. | அருள்மிகு அகஸ்தீஸ்வரர் திருக்கோயில், வில்லிவாக்கம், சென்னை–49. | 16.4.2000 |
| 24. | அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் திருக்கோயில், வேதாரண்யம், திருவாரூர் | 14.7.2000 |

25. அருள்மிகு வேதநாராயணப்பெருமாள் திருக்கோயில் திருநாராயணபுரம், தொட்டியம், முசிறிவட்டம், திருச்சி. 7.7.2000

26. அருள்மிகு ஜம்புகேஸ்வரர் அகிலாண்டேஸ்வரி கோயில், திருவாணைக்காவல், திருவரங்கம் 12.7.2000

27. அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி 5.7.2000

28. அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம், மதுரை 11.6.2000

29, அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயில், பவானி, ஈரோடு 10.9.2000

30. அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயில், சிவன்மலை, காங்கயம் வட்டம், ஈரோடு மாவட்டம் 10.9.2000

31. அருள்மிகு பூவராகசுவாமி கோயில், ஸ்ரீமுஷ்ணம், காட்டுமன்னார்குடி, கடலூர் மாவட்டம் 15.9.2000

32. அருள்மிகு கல்யாண வெங்கட்டரமணசுவாமி கோயில், தான்தோன்றிமலை, கரூர் 10.9.2000

33. அருள்மிகு தாயுமானவர் கோயில், மலைக்கோட்டை, திருச்சி 11.9.2000

34. அருள்மிகு இரத்தினகிரிஸ்வரர் திருக்கோயில், சிவாயம், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம் 15.9.2000

### குடும்ப நலநிதி :

பணியிலிருக்கும் போது இறக்கும் திருக்கோயில் பணியாளர்களின் குடும்பத்திற்கு வழங்கப்படும் குடும்ப பாதுகாப்பு நிதி ரூ.30,000–லிருந்து ரூ.60,000–ம் ஆக 5.3.99 முதல் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

1991 முதல் 5/96 முடிய 409 பணியாளர்களுக்கு ரூ.70.15 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

6/96 முதல் 8/2000 வரை 582 திருக்கோயில் பணியாளர்களுக்கு ரூ.171.35 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணி :

இத்துறையின் ஆளுகையின் கீழுள்ள கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணிக்கு திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000 வீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

1991 முதல் 5/96 முடிய ரூ.99.59 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

6/96 முதல் 8/2000 முடிய ரூ.112.75 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

### இலவசத் திருமணம் :

தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களில் நலிவுற்ற பிரிவுகளில் உள்ள தகுதியுள்ள இணைகளுக்கு இலவச திருமணம் திருக்கோயில் மூலம் நடத்தப்பட்டு வருகிறது. 1991 முதல் 6/1996 வரை 327 இணைகளுக்கு திருமணம் நடைபெற்றுள்ளது. 1996 முதல் 3.9.2000 வரை 2075 இணைகளுக்கு இலவச திருமணம் நடத்தி வைக்கப்பட்டுள்ளது.

### திருப்பணி நிதிகள்

**அரசு மானியம் :**

1991–92 முதல் 1995–96 வரை ரூ.225 இலட்சம் அரசு மானியமாக திருக்கோயில்களின் திருப்பணிக்கென வழங்கப்பட்டுள்ளது. அரசாணை(நிலை) எண்.374 தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறை நாள் 18.8.98–ன் படி ரூ.45 இலட்சமாக வழங்கி வந்த அரசு மானியம் 1998–99 முதல் ரூ.75 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டது.

1996–97 முதல் 1999–2000 வரை ரூ.240 இலட்சம் திருக்கோயில்களின் திருப்பணிக்கென அரசு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**பொது நலநிதி :**

திருக்கோயில்களின் திருப்பணி, கள்வர் எச்சரிக்கை மணி பொருத்துதல், திருக்குளத் திருப்பணி, திருப்பணி தேர்த் திருவிழா போன்ற பல்வேறு இனங்களுக்கு பொது நல நிதியிலிருந்து தொகை வழங்கப்படுகிறது. 1991 முதல் 5/96 வரை 194 திருக்கோயில்களுக்கு ரூ.96.27 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

1996–97 முதல் 8/2000 வரை 92 திருக்கோயில்களுக்கு ரூ.117.95 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள் :

சுசீந்திரம் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்களின் நிர்வாக செலவுகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.13.70 இலட்சம் வழங்கப்பட்டு வந்தது. தற்போது 1999–2000–ஆம் ஆண்டு முதல் அரசு மானியம் மேலும் கூடுதலாக 6 இலட்சம் அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி வட்டித் தொகையிலிருந்து மேற்படி திருக்கோயில்களின் நிர்வாக செலவினங்களுக்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ.14.00 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.



இலட்சம் கொண்டதான வைப்பீடு ஏற்படுத்தப் பட்டுள்ளது. இத்திட்டப்–படி, மாதந்தோறும் ரூ.20 வீதம் பணியாளர்கள் உறுப்பினர் கட்டணத் தொகை செலுத்து–கின்றனர். பணியாளர் ஓய்வு பெறும்போது அவர் செலுத்திய உறுப்பினர் கட்டணத் தொகை, வட்டியுடன் அவருக்கு வழங்கப்படும் ஆணையர் பங்குத் தொகை ரூ.500–லிருந்து ரூ.1000–ஆக 12.2.1999 முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது.

**திருக்கோயில் பணியாளர் சேமநல நிதி திட்டம் :**

சட்டப் பிரிவு 116(2) (XX) (iii) – 32–இல் பட்டியலில் சேர்ந்த திருக்கோயில் பணியாளர்களுக்கு வருங்கால சேமநல நிதி ஏற்படுத்த வேண்டுமென உள்ளவாறு உதவித் தொகை நிர்ணய வருமானம் ரூ.10,000–க்கு மேல் உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் திருக்கோயில் பணியாளர்களுக்குப் பணியாளரின் சம்பளத்தில் 10 சதவிகிதம் பிடித்தம் செய்து, பிடித்தம் செய்தத் தொகைக்கு இணையான தொகையினை திருக்கோயில் நிதியிலிருந்து இத்திட்டத்திற்கென துவக்கப்பட்ட வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு பணியாளர் ஓய்வு பெறும் தேதியில் மேற்படி தொகை வட்டியுடன் சேர்த்து வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம் 1.10.1997 முதல் நடைமுறைப்–படுத்தப்பட்டுள்ளது.

**திருக்கோயில் பணியாளர் நலநிதி திட்டம் :**

இந்தத் திட்டத்தின் கீழ் திருக்கோயில் பணியாளர்களுக்கு ஊதிய நிலுவைகளை வழங்க பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலின் நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடி மூலதனமாக வைப்பீடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அறநிலையங்களில் பணியாற்–றிடும் ஊழியர்களுக்கு இந்த வைப்பு நிதி வட்டித் தொகையிலிருந்து சம்பள பாக்கிகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டப்படி போதிய வருமானம்

***புதுக்கோட்டை திருக்கோயில்கள் :***

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள திருக்கோயில்கள் ஒருங்கிணைத்து நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இதற்கென அரசு மானியமாக ரூ.9.30 இலட்சம் வழங்கப்பட்டு வந்தது. அரசாணை எண்.281 தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறை நாள் 28.8.2000–ன்படி அரசு மானியம் ரூ.15.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

***திருக்கோயில் பணியாளர்கள் நலத் திட்டங்கள் :***

**சிறப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம் :**

ஆண்டொன்றுக்கு ரூபாய் ஒரு இலட்சம் மற்றும் அதற்கு மேலும் வருமானம் பெறக்கூடிய திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்குச் சிறப்பு வருங்கால வைப்பு நிதித்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக ரூபாய் ஏழு

இல்லாத, ஆண்டு வருமானம் ரூ.40,000—க்கும் கீழுள்ள அறநிலையங்களில் பணியாற்றி மாத ஊதியம் ரூ.400க்கும் குறைவாகப் பெற்றுவரும் ஊழியர்கள் சம்பள பாக்கி வழங்கப்படுகிறது.

1991 முதல் 5/96 வரை 4541 பணியாளர்களுக்கு ரூ.63.49 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 6/1996 முதல் 1998—99 வரை 3269 திருக்கோயில் பணியாளர்களுக்கு ரூ.63.19 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**ஓய்வூதிய நலத் திட்டம் :**

திருக்கோயில்களில் பணியாற்றி வயது முதிர்வு காரணமாக பதவியிலிருந்து ஒய்வு பெறும் பணியாளர்களின் நலன் காக்க திருக்கோயில்களில் 20 ஆண்டு காலம் பணியாற்றி 60 வயதில் ஒய்வு பெற்ற கீழ்க்கண்ட உள்துறை பணியாளர்களுக்கு பயனாளி ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.300—லிருந்து ரூ.500—ஆக 9.9.96 முதல் உயர்த்தப்பட்டு தற்போது கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது:

| பணியாளர்களின் விவரம் | பயன்பெறும் நபர்கள் |
|---|---|
| **1. அர்ச்சகர்கள்:** | |
| சைவம் | 468 |
| வைணவம் | 175 |
| 2. வேதபாராயணம் / திவ்யபிரபந்தம்/ அரையர் சேவை | 43 |
| 3. இசைக்கலைஞர்கள் | 85 |
| 4. ஓதுவார்கள் | 117 |
| மொத்தம் | 888 |

***திருக்கோயில் பணியாளர்களுக்கான வேறு பல நலத்திட்டங்கள் :***

**முன்பணம் :**

(I) பணியாற்றும் காலத்தில் இயற்கை எய்துகின்ற பணியாளர்களின் இறுதிச் சடங்குகள் செய்ய ரூ.2,000 முன்பணமாக 17.9.1997 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

(II) அறநிலையங்களில் பணியாற்றி வருகின்ற பணியாளர்களுக்குத் திருமண முன்பணமாக பணியாளரின் மகன் திருமணத்திற்கு ரூ.6,000—மும், மகள் திருமணத்திற்கு ரூ.10,000—மும் திருக்கோயில் நிதி வசதிக்கேற்ப 17.9.1997 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

**பண்டிகை முன்பணம்:**

திருக்கோயில் பணியாளர்களுக்கும் பண்டிகை முன்பணம் ரூ.1,000 — 9.10.97 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

**மருத்துவப்படி :**

மேலும், திருக்கோயில் பணியாளர்களுக்கு மருத்துவப் படியாக திங்கள் தோறும் ரூ.50 என 17.9.1997 முதல் உயர்வு செய்து வழங்கப்படுகிறது.

**சீருடை சலவைப்படி :**


17.9.1997 முதல் திருக்கோயில் பணியாளர்களுக்குச் சீருடை சலவைப்படியாக மாதம் ரூ.10 வழங்கப்படுகிறது.


**கடன் வசதி :**

17.9.1997 முதல் திருக்கோயில் பணியாளர்களுக்கு இரு சக்கர வாகனம் வாங்க ரூ.20,000 வரை கடனாக வழங்கப்படுகிறது.

**பொங்கல் பரிசு :**

2000—ஆம் ஆண்டு பொங்கல் பரிசாக உதவி ஆணையர், துணை ஆணையர் மற்றும் இணை





குடமுழுக்கின் போது பணிபுரியும் பணியாளர்களுக்கு ரூ.1,300 மற்றும் ரூ.1,100 நிலைக்கு ஏற்ப அல்லது ஒரு மாத சம்பளம் இதில் எது குறைவோ அத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை :**

ரூ.1 இலட்சத்திற்கு மேல் உதவித்தொகை நிர்ணய வருமானம் பெறக்கூடிய திருக்கோயில்களில் 10 ஆண்டுகளுக்கு மேல் ஒரே நிலையில் பணிபுரியும் திருக்கோயில் பணியாளர்களுக்குத் தேர்வு நிலையும் 20 ஆண்டுகளுக்கு மேல் ஒரே நிலையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு சிறப்பு நிலையும் 1.10.1997 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

**அகவிலைப்படி**

1.1.98 வரை முதுநிலை திருக்கோயில் பணியாளர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு வந்த அகவிலைப்படி, 1.1.98 முதல் ரூ.1 இலட்சத்திற்கு மேல் வருமானம் பெறும் திருக்கோயில்களைச் சார்ந்த அனைத்துப் பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டது.

**வீட்டு வாடகைப்படி :**

1990-இல் திருக்கோயில் பணியாளர் களுக்கு அறிவிக்கப் பட்ட வீட்டு வாடகைப்படி திருக்கோயில் பணியாளர்களுக்கு 100 விழுக்காடு உயர்த்தி வழங்கப்பட்டது.

ஆணையர் நிலை செயல் அலுவலர்கள் பணிபுரியும் திருக்கோயில்களில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு ரூ.725-ம், பிற திருக்கோயில்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ரூ.675-ம் வழங்கப்பட்டது.

**சிறப்பு ஊதியம் :**

திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணி மற்றும்


**நகர ஈட்டுப்படி :**

1.6.98 முதல் அனைத்து திருக்கோயில் பணியாளர்களுக்கும் நகர ஈட்டுப்படி 100 விழுக்காடு உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

★ ★ ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906 தொலையச்சு : 5368927

# கலைஞர் அரசில்



## வீதிகளில் விளைந்த விண்மீன்கள்



## உன்னதமான திட்டங்கள் ஒளிமயமாகும் தமிழகம்

கிராமங்களில் - 90 ஆயிரம் புதிய தெரு விளக்குகள்.

12 ஆயிரம் குழல் விளக்குகள், சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றம்

நகரங்களில் - 1 லட்சத்து 50 ஆயிரம் புதிய தெரு விளக்குகள்.

90 ஆயிரம் குழல் விளக்குகள், சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றம்

தமிழரசு



பதிவு எண். M.8676
LICENCE No. TN/MS(C)/PP-23